winmeen.com

# நான்காம் வார நடப்பு நிகழ்வுகள்

## ஆகஸ்ட் 2021

ஆகஸ்ட் 22-31

**1. தலித் பந்து திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

**ஆ) தெலுங்கானா ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) சத்தீஸ்கர்



- ✓ தெலுங்கானா மாநிலத்தின் உசூர்நகர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள சலபள்ளி கிராமத்தில் தலித் பந்து திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு சான்றிதழ் வழங்குவதன்மூலம் அவர்களின் வருமானம் ஈட்டும் செயல்பாட்டைத் தேர்வுசெய்வதற்காக தலா ₹10 இலட்சம் நிதியுதவியை வழங்கி முதலமைச்சர் கே சந்திரசேகர் ராவ் இத்திட்டத்தை தொடங்கிவைத்தார். மேலும், ஒரு தனி பாதுகாப்பு நிதியம் உருவாக்கப்படும். தலித் பந்து சமிதிகள், கிராமம் முதல் மாநில அளவில் பல்வேறு நிலைகளில் நிறுவப்படும். மேலும் அவற்றிடம், தலித் பாதுகாப்பு நிதியத்தை நிர்வகிக்கும் பொறுப்பும் ஒப்படைக்கப்படும்.

---

**2. பிரதான் மந்திரி கதிசக்தி முன்னெடுப்பில் முதலீடு செய்யப்படும் தொகை எவ்வளவு?**

அ) ₹150 இலட்சம் கோடி

ஆ) ₹300 இலட்சம் கோடி

இ) ₹200 இலட்சம் கோடி

**ஈ) ₹100 இலட்சம் கோடி ☑**



- ✓ பிரதமர் நரேந்திர மோடி ஆகஸ்ட் 15, 2021 அன்று ₹100 லட்சம் கோடி திட்ட மதிப்பீட்டில் பிரதான் மந்திரி கதிசக்தி முன்னெடுப்பை அறிவித்தார். இந்த முன்னெடுப்பு, இந்தியாவில் வாழும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும். இது உட்கட்டமைப்பின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கும் வழிவகுக்கும். இது புதிய எதிர்கால பொருளாதார மண்டலங்களின் சாத்தியக்கூறுகளையும் அதிகரிக்கிறது.

---

**3. உலக நீரழிவுக்கு முந்தையநிலை நாளாக கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ) ஆகஸ்ட் 14 ☑**

ஆ) ஆகஸ்ட் 18

இ) ஆகஸ்ட் 21

ஈ) ஆகஸ்ட் 23



- ✓ நீரழிவு நோயைப் பற்றிய விழிப்புணர்வை பரப்பவும், நீரழிவு நோயின் தாக்கத்தை சமன் செய்யவுமாக, முதல் உலகளாவிய நிகழ்வு, ஆகஸ்ட்.14 அன்று உலக நீரழிவுக்கு முந்தையநிலை நாளாக நடத்தப்பட்டது. 2021 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி ஆண்டுதோறும் ஆக.14ஆம் தேதி அன்று உலக நீரழிவுக்கு முந்தையநிலை நாள் கடைப்பிடிக்கப்படும். நீரழிவு நாளுக்கு 90 நாட்களுக்கு முன்னதாக இந்த நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ✓ நீரழிவு நோயின் முன்னேற்றத்தைத்தடுப்பதற்கு 90 நாட்கள் ஆகும். இந்தியாவில் வாழும் 9 கோடி மக்கள், நீரழிவுக்கு முந்தையநிலையுடன் வாழ்கின்றனர். இவர்களுள் கிட்டத்தட்ட 75 சதவீதத்தினர், அடுத்த 5 ஆண்டுகளுக்குள் நீரழிவு நோயால் பீடிக்கப்படுவார்கள்.

---

**4. ஆயுர்வேதத்தில் உலகின் முதல் உயிரிவங்கி அமைக்கப்படவுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ) உத்தரகாண்ட்

ஆ) உத்தர பிரதேசம்

இ) கோவா

**ஈ) புது தில்லி ☑**



- ✓ மத்திய ஆயுஷ் அமைச்சர் சர்பானந்த சோனோவால் சமீபத்தில் உலகின் முதல் ஆயுர்வேத உயிரி வங்கி புது தில்லியில் அமைக்கப்படும் என்று அறிவித்தார். AIIA என்பது புது தில்லியில் உள்ள ஒரு பொது ஆயுர்வேத மருத்துவ மற்றும் ஆராய்ச்சிநிறுவனமாகும். இது ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி நிறுவனமாகும். இந்நிறுவனம், பல்வேறு ஆயுர்வேத துறைகளில் முதுகலை மற்றும் முனைவர் பட்ட படிப்புகளை வழங்குகிறது.

---

**5. இந்தியா முழுவதும் உள்ள 20 தனியார் மருத்துவமனைகளால் மேற்கொள்ளப்படும் சுகாதார கேள்வி ஆய்வை (Health QUEST) தொடக்கி வைத்துள்ளவர் யார்?**

**அ) டாக்டர் கே சிவன் ☑**

ஆ) டாக்டர் ஹர்ஷ் வர்தன்

இ) மன்சுக் எல் மாண்டவியா

ஈ) டாக்டர் பல்ராம் பார்கவா



- ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (இஸ்ரோ) செயலாளரும் தலைவருமான டாக்டர் கே சிவன், இந்தியா முழுவதும் 20 தனியார் மருத்துவமனைகளால் மேற்கொள்ளப்படும் சுகாதார கேள்வி ஆய்வை (Health QUEST – Quality Upgradation Enabled by Space Technology) முறையாகத் தொடங்கிவைத்தார். இந்த ஆய்வின் குறிக்கோள், மனிதத் தவறுகளை குறைப்பதும், மருத்துவமனைகளின் அவசர மற்றும் தீவிரச் சிகிச்சைப் பிரிவுகளில் சுழிய குறைபாடு மற்றும் தரமான சேவையை அடைவதும் ஆகும். இந்த ஆய்வு, ISRO'இன் தரநிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கேற்ப, நாட்டில் நிலவும் சுகாதார அமைப்பின் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**6. கீழ்காணும் எந்த இந்திய நகரத்தில், உலகின் முதல் நடமாடும் அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது?**

அ) பெங்களூரு

ஆ) மும்பை

**இ) கொல்கத்தா ☑**

ஈ) சென்னை



- ✓ கொல்கத்தாவின் டிராம்களுக்குள் அமைக்கப்பட்டுள்ள இந்த நடமாடும் அருங்காட்சியகத்தை, இந்தியா விடுதலை அடைந்து 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மேற்கு வங்க போக்குவரத்து மற்றும் வீட்டுவசதி அமைச்சர் பிர்ஹத் ஹக்கீமால் திறந்துவைத்தார். சுதந்திரப் போராட்டம், பிரிவினை மற்றும் 1947 நிகழ்வுகளில் மக்களின் ஒற்றுமை குறித்து இந்த அருங்காட்சியகம் விளக்குகிறது. இது, டிசம்பர் மாத இறுதி வரை எஸ்ப்ளனேடில் (மத்திய கொல்கத்தா) காட்சிக்கு வைக்கப்படும். ஜன.1 முதல் நகரின் மற்ற பகுதிகளுக்குச் செல்லும்.

---

**7. AFC மகளிர் ஆசிய கோப்பை 2022'க்கு முன்னதாக இந்திய மகளிர் கால்பந்து அணியின் தலைமைப் பயிற்சியாளராக தாமஸ் டென்னர்பி நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிகழ்வை நடத்தும் நாடு எது?**

அ) சீனா

ஆ) ஜப்பான்

**இ) இந்தியா ☑**

ஈ) தென் கொரியா



- ✓ AFC மகளிர் ஆசிய கோப்பை இந்தியா – 2022'க்கு முன்னதாக, இந்திய மகளிர் கால்பந்து அணியின் தலைமைப் பயிற்சியாளராக தாமஸ் டென்னெர்பி பொறுப்பேற்கிறார். AFC மகளிர் ஆசிய கோப்பை – 2022, ஜன.20–பிப்.6 வரை இந்தியாவால் நடத்தப்படவுள்ளது.
- ✓ இந்தியாவின் U–17 உலகக்கோப்பை அணிக்கான பொறுப்பில் இருந்த டென்னர்பி, ஆசிய கோப்பை முடிந்தவுடன் அந்தப் பணிக்குத் திரும்புவார். 2022 AFC மகளிர் ஆசிய கோப்பை, AFC மகளிர் ஆசிய கோப்பையின் 20ஆவது பதிப்பாகும்.

---

**8. அண்மையில், எந்நாட்டின் கடற்படையுடன் இணைந்து, இந்திய கடற்படை, தென்சீனக்கடலில் கூட்டுப்பயிற்சிகளை நடத்தியது?**

அ) தாய்லாந்து

ஆ) ஜப்பான்

இ) கம்போடியா

**ஈ) வியட்நாம் ☑**



- ✓ தென்சீனக்கடலில் இந்திய கடற்படை கப்பல்கள் பணியமர்த்தப்பட்டு வருவதன் தொடர்ச்சியாக, வியட்நாம் கடற்படையுடன் இருதரப்பு கூட்டு பயிற்சியில் 2021 ஆகஸ்ட் 18 அன்று இந்திய கடற்படை ஈடுபட்டது. இரு நாட்டு கடற்படைகளுக்கு இடையேயான உறவை மேலும்

வலுப்படுத்துவதற்கும், இந்திய–வியட்நாம் இராணுவ உறவுகளை வலுப்படுத்துவதற்கும் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது.

- ✓ போர் பயிற்சிகள், ஆயுத பயிற்சிகள் மற்றும் ஹெலிகாப்டர் செயல்பாடுகள் உள்ளிட்டவை கடல் பிரிவில் நடைபெற்றன. கடந்த பல வருடங்களாக இருகடற்படைகளுக்கிடையே நடந்துவரும் தொடர் உரையாடல்கள் அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்தியுள்ளன.

---

**9. பேரிடர் மேலாண்மைத் துறையில் எந்த நாட்டுடன் இந்தியா கூட்டாளியாக, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?**

அ) தென் கொரியா

ஆ) சுவிச்சர்லாந்து

**இ) வங்காளதேசம் ☑**

ஈ) நேபாளம்



- ✓ பேரிடர் மேலாண்மை, மீட்பு மற்றும் பாதிப்பு குறைப்பு துறைகளில் ஒத்துழைப்புடன் செயல்பட இந்தியா, வங்கதேசம் இடையே கடந்த மார்ச் மாதம் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ இந்த ஒப்பந்தத்தால், இருதரப்பு பேரிடர் மேலாண்மை முறைகளால், இரு நாடுகளும் பயனடையும். பேரிடர் மேலாண்மை துறையில் தயார்நிலை, நடவடிக்கை, திறன் மேம்பாடு ஆகியவற்றை வலுப்படுத்த உதவும்.

---

**10.எந்த ஆண்டுக்குள், ஏழைகளுக்கு, பல்வேறு திட்டங்களின் கீழ், வலுவூட்டப்பட்ட அரிசியை வழங்க இந்திய அரசு முடிவுசெய்துள்ளது?**

அ) 2023

ஆ) 2022

இ) 2025

**ஈ) 2024 ☑**




- ✓ 2024ஆம் ஆண்டிற்குள் பல்வேறு திட்டங்களின்கீழ் ஏழைகளுக்கு செறிவூட்டப்பட்ட அரிசியை வழங்குவதாக பிரதமர் மோடி அறிவித்தார். இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாட்டை தீர்க்கும் பொருட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஏழைக்கும் ஊட்டச்சத்து வழங்குவது அரசாங்கத்தின் முன்னுரிமையாகும். ஏழைப்பெண்கள் மற்றும் ஏழை குழந்தைகள் மத்தியில் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் இல்லாதது அவர்களின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக உள்ளது என்ற கருத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. இந்திய சீன எல்லையில் 11,000 அடி உயரத்தில் மூலிகைப் பூங்கா

உத்தரகண்டில் இந்தியா–சீனா எல்லைப் பகுதிக்கு அருகே 11,000 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள மூலிகைப் பூங்கா திறந்துவைக்கப்பட்டது. சமோலி மாவட்டத்தின் மனா கிராமமானது இந்திய எல்லைப் பகுதியில் அமைந்துள்ள கடைசி கிராமமாகும். புகழ்பெற்ற பத்ரிநாத் கோயிலுக்கு அருகே இந்த கிராமம் அமைந்துள்ளது.

கடல்மட்டத்திலிருந்து சுமார் 11,000 அடி உயரத்தில் உள்ள அந்த கிராமத்தில் மூலிகைப் பூங்கா அமைக்கப்பட்டது. மத்திய அரசின் காடு வளா்த்தல் நிதித் திட்டத்தின் கீழ் உத்தரகண்ட் வனத் துறையால் இந்தப் பூங்கா அமைக்கப்பட்டது. நாட்டில் மிக உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள மூலிகைப் பூங்கா இதுவாகும். அந்தப் பூங்காவானது சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. இது குறித்து உத்தரகண்ட் வனத்துறையின் தலைமை பாதுகாவலா் சஞ்சீவ் சதுா்வேதி கூறுகையில், "மூலிகைப் பூங்கா 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இமயமலையின் உயரமான பகுதிகளில் காணப்படும் சுமாா் 40 மூலிகை இனங்கள் பூங்காவில் வளா்க்கப்பட்டுள்ளன.

அதில் பல்வேறு மூலிகை இனங்கள் அழியும் நிலையில் உள்ளவையாக சா்வதேச இயற்கைப் பாதுகாப்பு கூட்டமைப்பால் (ஐயுசிஎன்) அறிவிக்கப்பட்டவை. மருத்துவ குணங்கள் நிறைந்த பல்வேறு மூலிகைச் செடிகளும் பூங்காவில் வளா்க்கப்பட்டுள்ளன. பத்ரி துளசி, பத்ரி மரம், போஜ்பத்ரா மரம், ரித்தி, விருத்தி, ஜீவக், ரிஷ்பக், ககோலி, பிரம்மகமல், நீல்கமல், கூட உள்ளிட்ட மூலிகைகளும் வளா்க்கப்பட்டுள்ளன' ' என்றாா்.

### 2. பருவநிலை மாற்றத்தால் இந்திய சிறாா்களுக்கு அதிக அச்சுறுத்தல்

பருவநிலை மாற்றத்தின் விளைவுகளால் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய தெற்காசிய நாடுகளைச் சோ்ந்த சிறாா்களுக்கு அதிக அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக யுனிசெஃப் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பருவநிலை மாற்றத்தின் விளைவுகளால் சிறாா்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து ஐ.நா.வின் யுனிசெஃப் அமைப்பு ஆய்வு மேற்கொண்டது. அதையடுத்து, சிறாா்களுக்கான பருவநிலை அச்சுறுத்தல் குறியீட்டை அந்த அமைப்பு முதல் முறையாக வெளியிட்டது.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் புயல்கள், வெப்பக் காற்றுகள் உள்ளிட்டவற்றால் சிறாா்களின் சுகாதாரம், கல்வி, பாதுகாப்புக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்ந்து அந்தக் குறியீடு வெளியிடப்பட்டுள்ளதாக யுனிசெஃப் தெரிவித்துள்ளது. சிறாா்களுக்கு அதிக அச்சுறுத்தல் காணப்படும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 26–ஆவது இடத்தில் உள்ளது. பாகிஸ்தான் 14–ஆவது இடத்திலும், வங்கதேசம் 15–ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 25–ஆவது இடத்திலும் உள்ளன. இந்தியாவின் அண்டை நாடுகளான நேபாளம் (51), இலங்கை (61), பூடான் (111) ஆகியவை சிறாா்களுக்குக் குறைந்த அச்சுறுத்தல் காணப்படும் நாடுகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

வெள்ளம், காற்று மாசுபாடு ஆகியவற்றால் ஏற்படும் சமூக–பொருளாதார விளைவுகளால் பெண்களும் சிறாா்களும் அதிகமாக பாதிக்கப்பட வாய்ப்புள்ள 33 நாடுகளில் இந்தியாவையும் யுனிசெஃப் சோ்த்துள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் சுமாா் 60 கோடி இந்தியா்கள் தண்ணீா்த் தட்டுப்பாட்டை எதிா்கொள்வா் என்றும், உலகின் வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸுக்கு அதிகமாக உயா்ந்தால், இந்தியாவில் வெள்ளப்பெருக்கு நிகழ்வுகள் அடிக்கடி ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உடனடி நடவடிக்கை அவசியம்: அறிக்கை தொடா்பாக யுனிசெஃப் அதிகாரிகள் கூறுகையில், 'பருவநிலை மாற்றத்தின் விளைவுகளால் சிறாா் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுவா் என்பதை அறிந்து கொள்வதற்கும், அந்தப் பாதிப்புகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இந்த அறிக்கை உதவும்.

வறட்சி, வெள்ளம், காற்று மாசுபாடு ஆகிய பேரிடா்கள் தெற்காசியாவில் உள்ள லட்சக்கணக்கான சிறாா்களை வீடற்றவா்களாக மாற்றுவதோடு அவா்களின் பட்டினிக்கும் காரணமாக இருக்கும். கரோனா தொற்று பரவல் அந்த அச்சுறுத்தலை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. சிறாரின் எதிா்காலத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அரசுகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்' என்றனா்.

---

### 3. நாட்டின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஒளி மின்திட்டம் தொடக்கம்

நாட்டின் மிகப்பெரிய மிதவை சூரிய சக்தி ஒளிமின் திட்டத்தை ஆந்திர பிரதேச மாநிலம் விசாகப்பட்டினம், சிம்ஹாத்ரி அனல்மின் நிலையத்தின் நீா்த்தேக்கத்தில் தேசிய அனல்மின் கழகம் உருவாக்கியுள்ளது.

25 மெகாவாட் திறன் கொண்ட இந்தத் திட்டத்தை கடந்த 2018–ஆம் ஆண்டு மத்திய அரசு அறிவித்தது. தேசிய அனல்மின் கழகத்தின் மண்டல நிா்வாக இயக்குநா் திரு சஞ்சய் மதன் இந்தத் திட்டத்தை சனிக்கிழமை தொடக்கி வைத்தாா். நீா்த்தேக்கத்தில் சுமாா் 75 ஏக்கா் பரப்பளவில், ஒரு லட்சத்திற்கும் அதிகமான சூரியசக்தி ஒளிமின்னழுத்த தகடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுமாா் 7,000 வீடுகளுக்கு ஒளியூட்டுவது மட்டுமல்லாமல் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 46,000 டன் கரியமில வாயுவின் பயன்பாட்டையும் இந்தத் திட்டம் குறைக்கும். மேலும் இதன் மூலம் ஆண்டிற்கு 1,364 மில்லியன் லிட்டா் தண்ணீா் சேமிக்கப்படும் என்று எதிா்பாா்க்கப்படுகிறது. இதன்மூலம் 6700 வீடுகளின் தண்ணீா் தேவை பூா்த்தி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 4. யு–20 உலக தடகள சாம்பியன்ஷிப் : நடைப் பந்தயத்தில் அமித் காத்ரிக்கு வெள்ளி

இருபது வயதுக்கு உள்பட்டோருக்கான (யு–20) உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவருக்கான 10,000 மீட்டா் நடைப் பந்தயத்தில் இந்தியாவின் அமித் காத்ரி (17) வெள்ளிப் பதக்கம் வென்று அசத்தினாா். பந்தய இலக்கை அவா் 42 நிமிஷம் 17.94 விநாடிகளில் எட்டி 2–ஆம் இடம் பிடித்தாா். கென்யாவின் ஹெரிஸ்டோன் வன்யோனி (42:10.84) முதலிடமும், ஸ்பெயினின் பால் மெக்ராத் (42:26.11) 3–ஆம் இடமும் பிடித்தனா். முன்னதாக, ஃபெடரேஷன் கோப்பை ஜூனியா் தேசிய சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்றிருக்கும் அமித் காத்ரிக்கு, இது

முதல் சா்வதேச போட்டியாகும். அந்த தேசிய சாம்பியன்ஷிப்பில் பந்தய இலக்கை 40 நிமிஷம் 40.97 விநாடிகளில் எட்டியதே அவரது தனிப்பட்ட 'பெஸ்ட்' ஆகும்.

இப்போட்டியில் இந்தியாவுக்கு இது 2–ஆவது பதக்கமாகும். முன்னதாக கலப்பு ரிலே 4*400 மீட்டா் ஓட்டத்தில் இந்தியாவுக்கு கடந்த புதன்கிழமை வெண்கலப் பதக்கம் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

---

**5. ஆக. 26 முதல் 'மலபாா்' கூட்டு கடற்படைப் பயிற்சி**

நாற்கரக் கூட்டமைப்பு (க்வாட்) நாடுகளான இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகியவை பங்கேற்கும் 'மலபாா்' கூட்டு கடற்படைப் பயிற்சி வரும் 26–ஆம் தேதிமுதல் நடைபெறவுள்ளது. இந்தியா–அமெரிக்கா கடற்படைகள் பங்கேற்ற மலபாா் கூட்டுப் பயிற்சியானது கடந்த 1992–ஆம் ஆண்டுமுதல் ஆண்டுதோறும் நடைபெற்று வந்தது. கடந்த 2015–இல் இந்தப் பயிற்சியில் ஜப்பான் இணைந்தது. கடந்த ஆண்டு நடைபெற்ற பயிற்சியில் ஆஸ்திரேலியா இணைந்தது. நடப்பாண்டுக்கான மலபாா் கூட்டு கடற்படைப் பயிற்சி அமெரிக்காவின் குவாம் தீவில் வரும் 26–ஆம் தேதிமுதல் 29–ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்தப் பயிற்சியில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் கடற்படைக் கப்பல்கள் பங்கேற்கின்றன.

பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்திய கடற்படைக் கப்பல்களான ஷிவாலிக், காட்மாட் ஆகியவை சனிக்கிழமை குவாம் தீவை அடைந்தன. கூட்டுப் பயிற்சி குறித்து இந்தியக் கடற்படையின் செய்தித் தொடா்பாளா் விவேக் மத்வால் கூறுகையில், "நாடுகளுக்கு இடையேயான இயங்கு தன்மையை மேம்படுத்தவும், சிறந்த செயல்முறைகளைக் கற்றுக் கொள்ளவும், கடல்சாா் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நடைமுறைகளில் பரஸ்பர புரிதலை வளா்த்துக் கொள்ளவும் இந்தப் பயிற்சி உதவும்.

இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் போா்க் கப்பல்கள், நீா்மூழ்கிக் கப்பல்கள், ஹெலிகாப்டா்கள், தொலைதூர கடல்சாா் கண்காணிப்பு விமானம் ஆகியவை பயிற்சியில் பங்கேற்கவுள்ளன. கரோனா தொற்று பரவல் கட்டுப்பாடுகளுக்கு இடையேயும் இந்தப் பயிற்சிகள் நடைபெறுவதன் மூலம், கடல்சாா் பாதுகாப்பின்மீது 'க்வாட்' நாடுகள் கொண்டுள்ள உறுதித்தன்மை வெளிப்படுகிறது. தரை, ஆகாயம், நீா்ப்பகுதிகள், நீருக்கு அடியில் உள்ள இலக்குகளைத் தாக்கி அழிப்பது தொடா்பான செயல்முறைப் பயிற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. நீா்மூழ்கிக் கப்பல்கள், ஏவுகணைகளைத் தாக்கி அழித்தல் உள்ளிட்ட பயிற்சிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

பயிற்சியில் பங்கேற்கும் ஐஎன்எஸ் ஷிவாலிக், காட்மாட் ஆகியவற்றில் பல்வேறு ஆயுதங்களும் சென்சாா்களும் பொருத்தப்பட்டுள்ளன. ஹெலிகாப்டா்களை சுமந்து செல்லும் வசதி கொண்ட இந்த இரண்டு கப்பல்களும் இந்தியாவின் போா் கட்டமைப்புத் திறனை எடுத்துரைக்கும்' ' என்றாா். இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் சூழலில், 'க்வாட்' கூட்டமைப்பு நாடுகளின் கூட்டு கடற்படைப் பயிற்சி நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**6. உலக சம்ஸ்கிருத தினம்: பிரதமா் வாழ்த்து**

உலக சமஸ்கிருத தினத்தை முன்னிட்டு பிரதமா் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளாா். சமஸ்கிருத மொழியில் சுட்டுரையில் தமது வாழ்த்துகளை அவா் மக்களிடம் பகிா்ந்துள்ளாா். கடந்த 1969–ஆம் ஆண்டு முதல் உலக சம்ஸ்கிருத தினம் ஆகஸ்ட் 22–ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் இந்த நாளில் அந்த மொழியை மேம்படுத்துவதற்கான கருத்தரங்குகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

---

**7. உலக தடகளப் போட்டி: வெள்ளி வென்றாா் ஷைலி சிங்**

20 வயதுக்குட்பட்டோா் உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி மகளிா் நீளம் தாண்டுகலில் வெள்ளிப் பதக்கம் வென்றாா் இந்தியாவின் ஷைலி சிங். கென்ய தலைநகா் நைரோபியில் நடைபெறும் இப்போட்டியின் ஒரு பகுதியாக ஞாயிற்றுக்கிழமை நீளம் தாண்டுதல் போட்டி நடைபெற்றது. இதில் ஸ்வீடன் வீராங்கனை மஜா அஸ்காக் 6.60 மீ தூரம் குதித்து தங்கப் பதக்கம் வென்றாா். இந்தியாவின் ஷைலி 6.59 மீ தூரம் குதித்து வெள்ளி வென்றாா். உக்ரைன் வீராங்கனை மரியா 6.50 மீ தூரத்துடன் வெண்கலம் வென்றாா். 1 செ.மீ தூரத்தில் தங்கப் பதக்கத்தை இழந்தாா் ஷைலி சிங். உலக சீனியா் தடகளப் போட்டி நீளம் தாண்டுதலில் வெண்கலம் வென்ற அஞ்சு பாபி ஜாா்ஜின் அகாதெமியில் பயிற்சி பெறுகிறாா் ஷைலி. இப்போட்டியில் இந்தியா 2 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது.

---

**1.** **உலக இளையோர் வில்வித்தை சாம்பியன்ஷிப்பில், இந்தியா, எத்தனை தங்கப்பதக்கங்களை வென்றது?**

அ) 1

ஆ) 2

**இ) 3 ☑**

ஈ) 4



- ✓ வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் இந்தியா மூன்று தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது. உலக இளைஞர் வில்வித்தை சாம்பியன்சிப் போட்டியில், இந்திய அணி, 15 பதக்கங்களை வென்றது. 2021 உலக வில்வித்தை இளைஞர் சாம்பியன்ஷிப் போட்டியானது போலந்தின் வுரோக்லாவில் நடைபெற்றது. 15 பதக்கங்களில், மகளிர் மற்றும் ஆடவர் 'காம்பவுண்ட்' நிகழ்வு மற்றும் கலப்பு அணி நிகழ்வுகளில் மூன்று தங்கப்பதக்கங்களை இந்தியா வென்றது. இறுதிப்போட்டியில், பெண்கள் அணி துருக்கியை 228–216 என்ற கணக்கில் வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றது.

---

**2.** **ஓராண்டு முழுவதும் நடைபெறும் அம்ரித் மகோத்சவ் வினாடி வினா திட்டத்தை தொடங்கியுள்ள நிறுவனம் எது?**

**அ) AIR ☑**

ஆ) CSIR

இ) இஸ்ரோ

ஈ) NITI ஆயோக்

- ✓ அகில இந்திய வானொலியானது (AIR) தேசிய மற்றும் பிராந்திய அலைவரிசைகளில் 'ஆசாதி கா சபர் ஆகாஷ்வாணி கே சாத்' என்ற தனித்துவமான புதுமையான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. 'ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்' கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக அகில இந்திய வானொலியின் செய்தி சேவைகள் பிரிவினால், ஓராண்டு கால–த்திற்கு அம்ரித் மகோத்சவ் வினாடிவினா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

**3.** **'Freedom Cyclothon' என்ற சைக்கிள் பேரணியைத் தொடங்கி உள்ள அமைப்பு எது?**

**அ) எல்லை பாதுகாப்பு படை ☑**

ஆ) உள்துறை அமைச்சகம்

இ) இந்திய விமானப்படை

ஈ) டிஆர்டிஓ

- ✓ இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, எல்லை பாதுகாப்பு படையின் (BSF) தலைமை இயக்குநர் SS தேஸ்வால், ஜம்மு–காஷ்மீரின் RS புரா பகுதியில் இருந்து 'பிரீடம் சைக்ளோத்தான்' என்ற சைக்கிள் பேரணியைத் தொடக்கிவைத்தார்.
- ✓ இந்தச் சைக்கிள் பேரணி ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் குஜராத் ஆகிய 4 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கும். புதிய இந்தியா கட்டுடல் இந்தியா, ஆத்மநிர்பார் பாரத், ஒரே பாரதம் ஒப்பிலா பாரதம் மற்றும் தூய்மையான கிராமம் பசுமையான கிராமம் பற்றிய செய்திகளை பரப்புவதே இதன் நோக்கமாகும். இந்தச் சைக்கிள் பேரணி சுமார் 1993 கிமீட்டர் தூரத்தை கடந்து செல்லும்.

---

**4.** **பொருளாதார வளர்ச்சி நிறுவன சங்கத்தின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**

அ) டாக்டர் மன்மோகன் சிங்

ஆ) அமிதாப் காந்த்

இ) அஜய் தியாகி

**ஈ) என்.கே.சிங் ☑**



- ✓ 15ஆவது நிதி ஆணையத்தின் தலைவர் NK சிங், பொருளாதார வளர்ச்சி நிறுவன சங்கத்தின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1992 முதல் இந்தச் சங்கத்தின் தலைவராக இருந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கிற்குப் பிறகு NK சிங் இப்பதவிக்கு வந்துள்ளார்.
- ✓ உடல்நலக் காரணங்களுக்காக மன்மோகன் சிங் இந்தப் பதவியில் இருந்து விலகினார். மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்காக இந்த நிறுவனம் பணியாற்றுகிறது. கடந்த 1952ஆம் ஆண்டில் VKRV ராவால் நிறுவப்பட்ட இது, 1958இல்தான் செயல்பாட்டுக்கு வந்தது. புதுதில்லியின் தில்லி பல்கலைக்கழக வளாகத்தில் இது அமைந்துள்ளது.

**5.** **இருதரப்பு கடற்படை பயிற்சியான 'கொங்கன்–2021'இல், எந்த நாட்டோடு இணைந்து இந்தியா பங்கேற்றுள்ளது?**

அ) இலங்கை

ஆ) ஆஸ்திரேலியா

இ) ரஷ்யா

**ஈ) ஐக்கிய இராச்சியம் ☑**



- ✓ ஐக்கிய இராச்சியத்துடன் இருதரப்பு கடற்படை பயிற்சியான 'கொங்கன்–2021' பயிற்சியில் இந்தியா பங்கேற்றுள்ளது. இங்கிலாந்தின் போர்ட்ஸ் மௌத்தில், இந்திய கடற்படை மற்றும் பிரிட்டனின் ராயல் கடற்படைக்கு இடையே இந்தக் கடற்படை பயிற்சி நடைபெற்றது. இந்திய கடற்படை மற்றும் பிரிட்டனின் ராயல் கடற்படைக்கு இடையேயான வருடாந்திர இருதரப்பு பயிற்சியான கொங்கனில் INS தபார் பங்கேற்றது.
- ✓ இந்திய கடற்படையும் ராயல் கடற்படையும், 2004ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் இப்பயிற்சியினை நடத்தி வருகின்றன.

---

**6.** **உலகின் 50 'மாசுபட்ட நகரங்களுள்' இரண்டாவது மாசுபட்ட நகரமாக தேர்வு செய்யப்பட்டுள்ள இந்திய நகரம் எது?**

**அ) காஜியாபாத் ☑**

ஆ) கான்பூர்

இ) குருகிராம்

ஈ) தில்லி



- ✓ பிரிட்டிஷ் நிறுவனமான ஹவுஸ்பிரெஷ் தயாரித்த அறிக்கையின்படி, உத்தரபிரதேச மாநிலத்தின் காசியாபாத், 2020ஆம் ஆண்டில், உலகின் '50 மாசுபட்ட நகரங்களுள்' இரண்டாவது மாசுபட்ட நகரமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வறிக்கையின்படி காஜியாபாத் 106.6$\mu$g/m3இல் சராசரியாக 2.5 துகள் காற்றின் தரக்குறியீட்டை கொண்டுள்ளது.
- ✓ காஜியாபாத்தை விஞ்சி, சீனாவின் சின்ஜியாங் மாகாணத்தில் உள்ள ஹோதான் நகரம் 110.2$\mu$g/m3 என்ற PM2.5 உடன் மிகவும் மாசுபட்ட நகரமாக உள்ளது. ஹோதானின் இந்தக் காற்று மாசுபாட்டிற்கு மணல் புயல் காரணமாக அமைந்துள்ளது. அது தக்லிமகன் பாலைவனத்திற்கு அருகில் உள்ளது; அது உலகின் மிகப்பெரிய மணல் பாலைவனமாகும். காஜியாபாத்தைப் பொறுத்தவரை, மாசுபாட்டிற்கான காரணமாக அந்த நகரின் போக்குவரத்து கூறப்படுகிறது.

---

**7.** **மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள MyGov, எந்த அமைப்போடு இணைந்து அம்ரித் மகோத்சவ் ஸ்ரீசக்தி புத்தாக்க சவால் – 2021'ஐத் தொடங்குகிறது?**

அ) பெண்களுக்கான உலக நிதியம்

ஆ) பெண்களுக்கான தேசிய அமைப்பு

இ) வுமன் பார் வுமன் இன்டர்நேஷனல்

**ஈ) ஐநா பெண்கள் அமைப்பு ☑**

- ✓ இந்தியாவின் 75ஆவது விடுதலை ஆண்டு நிறைவைக் கொண்டாடும் ஆசாதி கா அம்ரித் மஹோத்சவத்தையொட்டி, மின்னணு மற்றும் தகவல் தொழினுட்ப அமைச்சகத்தின் கீழுள்ள 'மைகவ்' மற்றும் ஐநா பெண்கள் அமைப்பு இணைந்து அம்ரித் மகோத்சவ் ஸ்ரீசக்தி புத்தாக்க சவால் 2021 என்றவொன்றை உருவாக்கியுள்ளது.
- ✓ பெண்களின் முழு திறனை அடைய அவர்களுக்கு அதிகாரமளிப்பதே இதன் நோக்கம். வெற்றியாளர்களுக்கு தலா 5,00,000 வழங்கப்படும்.

---

**8.** **அண்மையில், ஆம்வேயின் விளம்பர தூதராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ) பிவி சிந்து

ஆ) நீரஜ் சோப்ரா

இ) சுசீலா சானு

**ஈ) சாய்கோம் மீராபாய் சானு ☑**



- ✓ ஆம்வே இந்தியா மற்றும் அதன் நியூட்ரிலைட் தயாரிப்புகளின் விளம்பர தூதராக ஒலிம்பியன் சைகோம் மீராபாய் சானுவை நியமித்துள்ளதாக ஆம்வே நிறுவனம் அறிவித்துள்ளது. மீராபாய் சானு, இந்நிறுவனத்தின் விளம்பரங்களை முன்னிலைப்படுத்துவார். பளுதூக்கும் வீராங்கனை

ஆன சாய்கோம் மீராபாய் சானு, கடந்த 2020 டோக்கியோ ஒலிம்பிக்கில், பெண்கள் 49 கி பிரிவில், வெள்ளிப்பதக்கம் வென்றார்.

---

**9. செயற்கை நுண்ணறிவில் இயங்கும் மெய்நிகர் உதவியாளரான 'ஊர்ஜா'வை அறிமுகம் செய்துள்ள நிறுவனம் எது?**

அ) இந்துஸ்தான் பெட்ரோலியம்

ஆ) NTPC நிறுவனம்

இ) பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா

**ஈ) பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிட் ☑**

- ✓ நாட்டின் எண்ணெய் & எரிவாயு துறையில் முதல்முறையாக சமையல் எரிகாற்று உருளைகளை முன்பதிவு செய்தல், எரிகாற்று உருளைகளை விநியோகிக்கும் நிறுவனத்தை மாற்றுதல் உள்ளிட்ட சேவைகளுக்காக 'ஊர்ஜா' என்ற தகவல்பரிமாற்ற வசதியை பாரத் பெட்ரோலிய நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம், மலையாளம் உள்பட பதிமூன்று மொழிகளில் இந்தச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

---

**10. ஹிரோஷிமா நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) ஆகஸ்ட் 6 ☑**



ஆ) ஆகஸ்ட் 7

இ) ஆகஸ்ட் 10

ஈ) ஆகஸ்ட் 15

- ✓ கடந்த 1945ஆம் ஆண்டில் ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்டதால் ஏற்பட்ட பேரழிவு மற்றும் மனித இனத்திற்கு நிகழ்ந்த துன்பங்களை நினைவுகூரும் நோக்கோடு ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட்.6ஆம் தேதி அன்று ஹிரோஷிமா நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.
- ✓ இந்த ஆண்டு (2021), இந்த அணுகுண்டுவெடிப்பு நிகழ்ந்த 76ஆவது ஆண்டாகும். அணுகுண்டால் தாக்கப்பட்ட முதல் நகரம் இதுவாகும். முறையே ஆகஸ்ட்.6 மற்றும் 9ஆம் தேதிகளில், ஹிரோஷிமா நகரத்தில் வீசப்பட்ட 'தி லிட்டில் பாய்' மற்றும் நாகசாகி நகரில் 'தி ஃபேட் மேன்' என்ற 2 அணுகுண்டுகளையும் உருவாக்கியது அமெரிக்காவாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ராணுவத்தில் 5 பெண் அதிகாரிகளுக்கு 'கர்னல்' பதவி உயர்வு**

இந்திய ராணுவத்தில் பல்வேறு படைப் பிரிவுகளில் பணியாற்றி குறிப்பிட்ட கால வரையளவைப் பூர்த்தி செய்த 5 பெண் அதிகாரிகளுக்கு கர்னல் அந்தஸ்துக்கான பதவி உயர்வை முதல் முறையாக இந்திய ராணுவம் திங்கள்கிழமை வழங்கியுள்ளது. இந்திய ராணுவத்தில் பெண்களுக்கான நிரந்தரப் பணி அமர்வு ஏற்படுத்தப்பட்டதையொட்டி, இந்த பாலின சமத்துவத்தை ராணுவம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

ஆண் ஆதிகாரிகளுக்கு மட்டுமே நிரந்தரப் பணி அமர்வு பயிற்சி டேராடூன் போன்ற ராணுவ அகாதெமியில் (ஐஎம்ஏ) கொடுக்கப்படும். இந்த நிலையில் இந்திய ராணுவத்தில் பெண்களுக்கு தற்போது குறுகிய காலப் பணியமர்வு பயிற்சி சென்னை போன்ற ராணுவ அதிகாரிகள் பயிற்சி அகாதெமியில் (ஓடிஏ) நடைபெறுகிறது. ஆண் அதிகாரிகளுக்கு இணையாக ராணுவத்தில் மருத்துவம், ராணுவ நீதிபதி, வழக்குரைஞர்கள், கல்விப் பிரிவுகளில் பணியாற்றும் பெண்களுக்கு மட்டுமே கர்னல் அந்தஸ்துக்கு மேலான பதவி உயர்வு வழங்கப்பட்டு வரப்படுகிறது. மருத்துவத் துறை பெண் ராணுவ அதிகாரிகள் ஜெனரல் அந்தஸ்து வரை பதவி உயர்வு பெற்று புகழ்பெற்றுள்ளனர்.

ஆனால் போரில், ராணுவ ஆபரேஷன் பிரிவுகளில் இருக்கும் பெண் அதிகாரிகளுக்கும் நிரந்தர பணி அமர்வு இல்லாத நிலையில், இந்த கோரிக்கைகள் எழுந்தன. கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பே உச்சநீதிமன்றத்தில் பெண் ராணுவ அதிகாரிகளிடமிருந்து இதற்கான கோரிக்கைகள் வந்தன. மேலும், முப்படைகளில், தரைப்படை போன்ற பிரிவுகளிலும் இதுபோன்ற கோரிக்கைகள் வலுத்தது. இது தொடர்பாக ராணுவ நடுவர் மன்றங்களிலும், உச்ச நீதி மன்றங்களிலும் வழக்கு நடைபெற்றது. இறுதியாக கடந்த ஆண்டு ஆகஸ்ட் 1 – ஆம் தேதியும், பின்னர் நடப்பு ஆண்டு மார்ச் மாதமும் குறுகிய காலப் பணியமர்வில் சேர்க்கப்பட்ட ராணுவ பெண் அதிகாரிகளுக்கும் தகுதியின் அடிப்படையில் நிரந்தரப் பணி அமர்வு அதிகாரிகளாக நியமிக்க உச்சநீதிமன்றம் மத்திய அரசுக்கு உத்தரவிட்டது.

இதன்அடிப்படையில் குறுகிய காலப் பயிற்சி பெற்ற பெண் அதிகாரிகளின் உடல் தகுதி உள்ளிட்ட பல்வேறு தகுதிகளின் அடிப்படையில் நானூறுக்கும் மேற்பட்ட பெண் அதிகாரிகள் நிரந்தரப் பணி அமர்வில் சேர்க்கப்பட்டனர். மேலும், இதுபோன்று சேர்க்கப்பட்ட பெண் அதிகாரிகளின் பணிக் கால வரையளவு அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கவும் பாதுகாப்புத் துறை முடிவெடுத்துள்ளது. இதுவரை அதிகபட்சம் லெப்டினன்ட் கர்னல் வரை பெண் அதிகாரிகள் பதவி உயர்வு பெற்றனர். முதல் முறையாக பெண் அதிகாரிகளில், சிக்னல் படைப்பிரிவைச் சேர்ந்த லெப். கர்னல் சங்கீதா சர்தானா, எலக்ட்ரானிக், மெக்கானிக்கல் மற்றும் இன்ஜினியரிங் (இஎம்இ) படைப் பிரிவைச் சேர்ந்த லெப். கர்னல்கள் சோனியா ஆனந்த் மற்றும் நவ்னீத் துக்கல், இன்ஜினியர்ஸ் படைப் பிரிவைச் சேர்ந்த லெப்டினன்ட் கர்னல்கள் ரீனு கன்னா மற்றும் ரிச்சா சாஹர் ஆகியோர் கர்னல் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் துறை திங்கள்கிழமை அறிவித்துள்ளது.

இந்திய ராணுவத்தில் இந்த 5 பெண் அதிகாரிகளும் 26 ஆண்டு கால பணியை நிறைவு செய்ததையொட்டி கால வரையளவுக்கு மேலாக (டைம் ஸ்கேல்) பணியாற்றிய இவர்களின் சேவைக்கு ஆறுதலாக இந்த கர்னல் பதவி வழங்க, முன்னதாக இந்திய ராணுவத்தின் தேர்வு வாரியம் ஆய்வு செய்து அனுமதித்தது. இருபது ஆண்டு சேவைக்குள் தகுதி பெறும் பெண் அதிகாரிகளுக்கு தேர்வு நிலை அந்தஸ்தும் இனி வழங்கப்படும் என்றும் ராணுவ வட்டாரங்களில் கூறப்படுகிறது. இத்தகைய தேர்வு நிலை அதிகாரிகளே பிரிகேடியர், ராணுவ ஜெனரலாகவும் பதவு உயர்வு பெறவும் வாய்ப்புக் கிடைக்கும். இனி எதிர்காலத்தில் பெண்களுக்கான நிரந்தர பணி அமர்வு பயிற்சியும் தொடங்கப்படும் எனவும் பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

---

**2. ரூ.6 லட்சம் கோடி மதிப்பிலான சொத்துகளைப் பணமாக்கும் திட்டம் தொடக்கம்**

மத்திய அரசுக்குச் சொந்தமான ரூ.6 லட்சம் கோடி மதிப்பிலான சொத்துகளைப் பணமாக்கும் திட்டத்தை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடக்கிவைத்தார். சாலைகள், ரயில்வே, மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மத்திய அரசுக்குச் சொந்தமாக உள்ள ரூ.6 லட்சம் கோடி மதிப்பிலான சொத்துகளைப் பணமாக்குவதற்கான வழிமுறைகள் அடங்கிய திட்டத்தை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திங்கள்கிழமை தொடக்கி வைத்தார். அப்போது அவர் கூறுகையில், "சொத்துகளைப் பணமாக்கும் நடவடிக்கை என்பது அவற்றை விற்பதல்ல. சொத்துகளின் உரிமை அனைத்தும் மத்திய அரசு வசமே இருக்கும். அதே வேளையில், அந்தச் சொத்துகளைத் திறம்படப் பயன்படுத்தி நிதி திரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நாடு முழுவதும் மத்திய அரசுக்குச் சொந்தமாக உள்ள சொத்துகளைப் பணமாக்கும் நடவடிக்கையின் மூலமாக ரூ.6 லட்சம் கோடியைத் திரட்ட முடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது 2024–25–ஆம் நிதியாண்டு வரை செயல்படுத்தப்படவுள்ளது. இவ்வாறு புதிய வழிகளில் நிதியைத் திரட்டுவதன் வாயிலாக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முடியும். பல்வேறு மக்கள் நலத் திட்டங்களையும் செயல்படுத்த முடியும். இத்திட்டத்தின் வாயிலாக அரசின் சொத்துகளைத் தனியார் நிறுவனங்கள் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டு, அரசு–தனியார் பங்களிப்பு வாயிலாக சமூகப் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவது உறுதி செய்யப்படும். இத்திட்டத்தின் வாயிலாக மக்களின் வாழ்க்கைத்தரமும் உயரும்' ' என்றார்.

அரசின் சொத்துக்களைப் பணமாக்குவது தொடர்பாக 2021–22–ஆம் நிதியாண்டின் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. பல்வேறு துறைகளின் கீழுள்ள சொத்துகளைப் பணமாக்குவது குறித்து நீதி ஆயோக் ஆராய்ந்து அறிக்கை தயாரித்துள்ளது. சென்னை, போபால், வாராணசி, வதோதரா உள்ளிட்ட 25 விமான நிலையங்கள், 40 ரயில்வே நிலையங்கள், 15 ரயில்வே அரங்கங்கள், ரயில்வே காலனிகள் ஆகியவற்றில் தனியார் முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் இத்திட்டத்தின் வாயிலாக மேற்கொள்ளப்படவுள்ளன.

---

**3. சேதி தெரியுமா?**

ஆக.13: பழம்பெரும் சைவ மடங்களில் ஒன்றான மதுரை ஆதீனத்தின் 292–வதுகுரு மகாசன்னிதானமான அருணகிரி நாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரியார் உடல் நலக் குறைவால் காலமானார்.

ஆக.14: ஆகஸ்ட் 14ஆம் தேதி தேசப் பிரிவினை நினைவு தினமாக அனுசரிக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

ஆக.14: 2021ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் சிறந்த மாநகராட்சிக்கான முதல்வர் விருதுக்கு தஞ்சாவூர் மாநகராட்சி தேர்வானது. சிறந்த நகராட்சியாக உதகமண்டலம், பேரூராட்சியாக திருச்சியில் உள்ள கல்லக்குடி தேர்வாயின.

ஆக.15: ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ நாட்டுப் படைகள் விலகத் தொடங்கிய நிலையில், 20 ஆண்டுகளுக்குப் பிறகு தலைநகர் காபூலை தாலிபான்கள் கைப்பற்றினர். ஆப்கன் அதிபர் அஷ்ரப் கனி வெளிநாட்டுக்குத் தப்பியோடினார்.

ஆக.15: நாட்டின் 75-வது சுதந்திர தின பவள விழாவையொட்டி டெல்லி செங்கோட்டையில் பிரதமர் நரேந்திரமோடியும் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினும் தேசியக் கொடியை ஏற்றினார்கள்.

ஆக.15: அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் திட்டத்தின்படி இந்து அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் பணியாற்ற பல்வேறு சாதிகளைச் சேர்ந்த 58 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

ஆக.16: 2020ஆம் ஆண்டில் உலகின் 50 மாசுபட்ட நகரங்களின் பட்டியலில் சீனாவின் ஹோடான் முதலிடத்தையும் இந்தியாவின் காசியாபாத் இரண்டாமிடத்தையும் பிடித்தன. தூய்மையான நகரங்களின் பட்டியலில் ஆஸ்திரேலியாவின் ஜூப்புரி முதலிடத்தைப் பிடித்தது.

ஆக.18: சுடோகு எனும் புதிர் விளையாட்டை உருவாக்கிய ஜப்பானைச் சேர்ந்த மகி காஜி காலமானார். இவர், சுடோகு விளையாட்டின் தந்தை என்றழைக்கப்படுகிறார்.

ஆக.20: உச்ச நீதிமன்றத்துக்குப் புதிதாக ஒன்பது நீதிபதிகளை நியமிக்க மத்திய அரசுக்கு கொலீஜியம் பரிந்துரை செய்தது.

**1. இந்தியாவின் மிகவுயரமான மூலிகைப்பூங்கா திறக்கப்பட்டுள்ள மாநிலம் எது?**

**அ) உத்தரகண்ட் ☑**



ஆ) இமாச்சல பிரதேசம்

இ) சிக்கிம்

ஈ) மிசோரம்

✓ உத்தரகண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தின் மனா கிராமத்தில் இந்திய –சீன எல்லைப்பகுதிக்கு அருகே 11,000 அடி உயரத்தில் அமைக்கப்பட்ட மூலிகைப்பூங்கா திறந்துவைக்கப்பட்டது. மத்திய அரசின் காடுவளர்த்தல் நிதித்திட்டத்தின் கீழ் உத்தரகண்ட் வனத்துறையால் இந்தப்பூங்கா அமைக்கப்பட்டது. இமயமலையின் உயரமான பகுதிகளில் காணப்படும் சுமார் 40 மூலிகை இனங்கள் இப்பூங்காவில் வளர்க்கப்பட்டுள்ளன.

---

**2. அண்மையில், முன்னாள் முதல்வர் கல்யாண் சிங் காலமானார். அவர் எந்த மாநிலத்தின் முதல்வராக இருந்தார்?**

அ) ஹரியானா



ஆ) இராஜஸ்தான்

**இ) உத்தர பிரதேசம் ☑**

ஈ) மத்திய பிரதேசம்

✓ உத்தரபிரதேச மாநில முன்னாள் முதல்வரும் இராஜஸ்தான் மாநில முன்னாள் ஆளுநருமான கல்யாண் சிங், 2021 ஆகஸ்ட்.21 அன்று தனது 89ஆவது வயதில் இலக்னோவில் காலமானார். கல்யாண் சிங், 1991இல் முதல்முறையாக உபி மாநிலத்தின் முதல்வரானார். 1992ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது உபி மாநில முதலமைச்சராக பதவி வகித்தவர் கல்யாண் சிங். அவர், 24 ஜூன் 1991 – 1992 டிச.6 வரை & 1997 செப்.21 முதல் 1999 நவ.12 வரை முதல்வராக இருந்தார்.

---

**3. தேசிய அனல்மின் கழகமானது பின்வரும் எந்த நகரத்தில், 25 MW திறன்கொண்ட மிகப்பெரிய மிதவை சோலார் PV திட்டத்தை தொடங்கியுள்ளது?**

அ) காயங்குளம்

ஆ) ஓம்கரேஷ்வர்

இ) இராமகுண்டம்

**ஈ) விசாகப்பட்டினம் ☑**

✓ தேசிய அனல்மின் கழகமானது, 25 MW திறன்கொண்ட மிகப்பெரிய மிதவை சூரியசக்தி ஒளிமின்னழுத்தத் திட்டத்தை ஆந்திர பிரதேசத்தின் விசாகப்பட்டினத்திலுள்ள அதன் சிம்காத்ரி அனல்மின் நிலையத்தின் நீர்த்தேக்கத்தில் உருவாக்கியுள்ளது. கடந்த 2018ஆம் ஆண்டு இந்திய அரசால் அறிவிக்கப்பட்ட நெகிழ்வுத்தன்மை திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள முதல் சூரியசக்தி திட்டமாகவும் இது அமைந்துள்ளது.

✓ இந்த மிதவை சூரிய ஆற்றல் திட்டம், நீர்த்தேக்கத்தில் சுமார் 75 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. 1 லட்சத்துக்கும் மேற்பட்ட சூரியசக்தி ஒளிமின்னழுத்த கலங்களிலிருந்து மின்சாரத்தை உருவாக்கும் திறனை இந்தத் திட்டம் பெற்றுள்ளது.

---

**4. மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையிலான வன்முறைச் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் பன்னாட்டு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) 23 ஆகஸ்ட்



**ஆ) 22 ஆகஸ்ட் ☑**

இ) 20 ஆகஸ்ட்

ஈ) 24 ஆகஸ்ட்

✓ மதம் / நம்பிக்கையின் அடிப்படையிலான வன்முறைச் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் பன்னாட்டு நாள் ஆக.22 அன்று ஐநா'ஆல் அனுசரிக்கப்பட்டது. மதம் / நம்பிக்கை சார்ந்த வன்முறைச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தார்க்கும் பொருந்தக்கூடிய சட்டத்தின்படி ஆதரவு மற்றும் உதவியை நல்குவதன் முக்கியத்துவத்தை இந்த நாள் நினைவுகூருகிறது. இது முதன்முதலில் 2019'இல் அதிகாரப்பூர்வமாக அனுசரிக்கப்பட்டது.

**5. எந்த மாநிலத்தைச் சார்ந்த 7 உள்ளூர் உணவுப்பொருட்களை, மத்திய உணவுப்பதப்படுத்தும் தொழிற்துறைகள் மற்றும் ஜல் சக்தித் துறை இணையமைச்சர் பிரகலாத் சிங் படேல் அறிமுகம் செய்தார்?**

அ) அஸ்ஸாம்



**ஆ) மணிப்பூர் ☑**

இ) ஒடிஸா

ஈ) மத்திய பிரதேசம்

✓ 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின் ஒருபகுதியாக, மத்திய உணவு பதப்படுத்தும் தொழில்கள் மற்றும் ஜல்சக்தித் துறை இணையமைச்சர் பிரகலாத் சிங் படேல், மணிப்பூர் மாநிலத்தின் ஏழு உள்ளூர் உணவுப் பொருட்களை இம்பாலில் அறிமுகம் செய்து வைத்தார். அவை, கருப்பரிசி லட்டு, கருப்பரிசி பழம் & கொட்டை பிஸ்கோத்துகள், சூடான மற்றும் காரமான புஜியா, கபோக் (பொறி) கலவை, மணிப்பூரி கிழங்கு பர்பி, மூங்கில் தளிர் முரபா மற்றும் அத்தி லட்டு ஆகும்.

✓ இப்பொருட்கள் மணிப்பூர் உணவுத் தொழிற்துறைகள் நிறுவன அடைவு ஆய்வகத் திட்டத்தின்கீழ் TQS குளோபல், காஜியாபாத்துடன் இணைந்து 10 லட்சம் பட்ஜெட் ஒதுக்கீட்டில் உருவாக்கப்பட்டது.

---

**6. ஐநா பாதுகாப்பு அவையில், வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் ஒரு மொபைல் தொழில்நுட்ப தளத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தார். இந்தத் தளத்தின் பெயர் என்ன?**

அ) UNITE Peace



**ஆ) UNITE Aware ☑**

இ) UNITE X

ஈ) UNITE World

✓ மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர், S ஜெய்சங்கர், ஐக்கிய நாடுகளின் அமைதிப்படையினரைப் பாதுகாக்க உதவுவதற்காக, "UNITE Aware" தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தார். நியூயார்க்கில் உள்ள ஐநா தலைமையகத்தில், அவர், "தொழில்நுட்பம் மற்றும் அமைதி காத்தல்" பற்றிய ஐநா பாதுகாப்பு அவையின் விவாதத்திற்கு தலைமை தாங்கியபோது இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

✓ "UNITE Aware" என்பது அமைதிப்படையினருக்கு தரை–தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக இந்தியாவால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். இது அப்படையினரின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்காக இந்தியா $1.64 மில்லியன் டாலர்களை செலவிட்டுள்ளது.

---

**7. போர் வானூர்திகளை ரேடார் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்க, அதிநவீன சாப் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ள அமைப்பு எது?**

அ) ISRO

ஆ) HAL

**இ) DRDO ☑**

ஈ) BHEL

✓ ரேடார்மூலம் செயல்படும் எதிரிநாட்டு ஏவுகணைகளிலிருந்து இந்திய விமானப்படையின் போர் விமானங்களை பாதுகாக்க அதிநவீன 'சாஃப்' தொழில்நுட்பத்தை இராணுவ ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பு (DRDO) உருவாக்கியுள்ளது. ஜோத்பூரில் உள்ள DRDO ஆய்வகம், புனேவில் உள்ள DRDO'இன் உயராற்றல் பொருட்கள் ஆய்வகத்துடன் இணைந்து இந்த 'சாஃப்' காட்ரிட்ஜ் – 118/I சாதனத்தை உருவாக்கியுள்ளது.

✓ போர் விமானங்களில் பொருத்தப்படும் இச்சாதனத்தில், சிறு அலுமினியம் அல்லது துத்தநாகம் பூசப்பட்ட நார் துகள்கள் மில்லியன் கணக்கில் அடைக்கப்பட்டிருக்கும். தீப்பிழம்புடன் இது போர் விமானங்களிலிருந்து வெளியேறி காற்றில் பறக்கும்போது, லேசர்மூலம் செயல்படும் எதிரி நாட்டு ஏவுகணைகளை திசைதிருப்பும். இதன்மூலம் தாக்குதலில் இருந்து போர் விமானங்கள் தப்பிக்க முடியும்.

---

**8. அண்மையில், தொலையுணர்திறன் செயற்கைக்கோள் தரவு பகிர்வில் ஒத்துழைப்பு நல்குவதற்காக, எந்த அமைப்பு, தங்களுக்குள் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுக்கொண்டது?**

அ) G20 ஆ) BIMSTEC

**இ) BRICS ☑** ஈ) ஐரோப்பிய ஒன்றியம்

- ✓ பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா (BRICS) ஆகியவை தொலையுணர்திறன் செயற்கைக்கோள் தரவு பகிர்வில் ஒத்துழைப்பு நல்குவதற்கான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- ✓ BRICS விண்வெளி முகமைகளின் குறிப்பிட்ட தொலையுணர்திறன் செயற்கைக்கோள்களின் மெய்நிகர் விண்மீன் தொகுப்பை உருவாக்கும் நோக்கில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதன்மூலம் அந்தந்த தரைநிலையங்கள் தரவைப்பெறும். இந்த ஒப்பந்தம், இந்தியா BRICS தலைமையின்கீழ் உள்ள இச்சமயத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

---

**9. நடைபாதை பொறியியல் மற்றும் அறிவார்ந்த போக்குவரத்து அமைப்புகளுக்காக பின்வரும் எந்த நிறுவனத்துடன் மத்திய சாலை போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகம் ஒத்துழைத்துள்ளது?**




**அ) ஐஐடி மெட்ராஸ் ☑**

ஆ) ஐஐடி காந்திநகர்

இ) ஐஐடி பம்பாய்

ஈ) ஐஐடி தில்லி

- ✓ நடைபாதை (pavement) பொறியியல் மற்றும் அறிவார்ந்த போக்குவரத்து அமைப்புகளுக்காக இந்திய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்துடன் (MoRTH) மெட்ராஸ் ஐஐடி நிறுவனம் கூட்டிணைகிறது. புதுமையான நடைபாதைபொருட்கள் மற்றும் தொழில் நுட்பங்கள், ஹைட்ரஜன் மின்கலத்தில் இயங்கும் போக்குவரத்து, தானியங்கி வாகன வகைப்பாடு, புதிய கட்டண அமைப்புகள், நிகழ்வு மேலாண்மை அமைப்புகள், பயணிகளின் தகவலமைப்புகள், FastTAG தரவு பகுப்பாய்வு மற்றும் போக்குவரத்து பாதுகாப்பு தவிர போக்குவரத்து உருவகப்படுத்துதல் ஆகியவை இதிலடங்கும்.
- ✓ நெடுஞ்சாலை பொறியியல் துறையில் MoRTH'ஆல் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரிகள் உட்பட 8–10 மாணவர்களுக்கு மெட்ராஸ் IIT நிறுவனம், பயிற்சியளிக்கும்.

---

**10. உலக மனிதாபிமான நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?**




**அ) ஆகஸ்ட் 19 ☑**

ஆ) ஆகஸ்ட் 21

இ) ஆகஸ்ட் 23

ஈ) ஆகஸ்ட் 25

- ✓ அனைத்து முரண்பாடுகளுக்கும் எதிராக மனிதகுலத்திற்கு சேவை செய்ய எண்ணும் அனைவரின் தியாகங்களையும் கௌரவிக்கும் வகையில், ஐநா அவை, ஆகஸ்ட்.19ஆம் தேதியை உலக மனிதாபிமான நாளாகக் கொண்டாடுகிறது. "#TheHumanRace: a global challenge for climate action in solidarity with people who need it the most" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.
- ✓ கடந்த 2009ஆம் ஆண்டில் ஐநா பொது அவையால் இந்நாள் முறையாக அங்கீகரிக்கப்பட்ட பின்னர், 2009 ஆகஸ்ட்.19 அன்று முதன்முறையாக நினைவுகூரப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழகத்தில் 6 புதிய மாநகராட்சிகள்**

தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளை ஒருங்கிணைத்து மேலும் 6 புதிய மாநகராட்சிகள் உருவாக்கப்படும் என்று பேரவையில் நகராட்சித் துறை அமைச்சர் KN நேரு அறிவித்தர்.

தாம்பரம், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர், சிவகாசி ஆகிய நகராட்சிகளையும் அதனைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகளையும் ஒருங்கிணைத்தும் மாநகராட்சிகள் உருவாக்கப்படும் என அறிவித்தார்.

நகராட்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் கே.என்.நேரு வெளியிட்ட அறிவிப்புகள்: 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி நகர்ப்புற மக்கள்தொகை 48.45 சதவீதம் ஆகும். 2021ஆம் ஆண்டு தற்போதைய சூழலில் மொத்த மக்கள்தொகையில் நகர்ப்புற மக்கள்தொகை சுமார் 53 சதவீதமாக உயர்ந்துள்ளது எனக் கருதப்படுகிறது. அதனால், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள நகர்ப்புறத் தன்மையோடு உள்ள பகுதிகளை நகர்ப்புறங்களோடு இணைத்து தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

தற்போதுள்ள நகர்ப்புற உள்ளாட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், நகர்ப்புறத்தன்மை, மக்கள்தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் நகர்ப்புறமாக மாறி வரும் பகுதிகளிலும் நகரத்துக்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கிலும் உள்ளாட்சி அமைப்புகளின் தரம் உயர்த்தப்படுகிறது.

தாம்பரம், பல்லாவரம், செம்பாக்கம், பம்மல், அனகாபுத்தூர் ஆகிய நகராட்சிகள் மற்றும் அதனைச் சுற்றி அமைந்துள்ள பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு மாநகராட்சியாக அமைக்கப்படும். மேலும், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர் மற்றும் சிவகாசி ஆகிய நகராட்சிகள் அதனைச் சுற்றி வளர்ச்சி அடைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளை ஒன்றிணைத்து மாநகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும்.

**4 மாநகராட்சிகள் விரிவாக்கம்:** திருச்சி, நாகர்கோவில், தஞ்சாவூர், ஒசூர் ஆகிய மாநகராட்சிகளும், செங்கல்பட்டு, பூவிருந்தவல்லி, மன்னார்குடி ஆகிய நகராட்சிகளும் அவற்றைச் சுற்றியுள்ள வளர்ச்சியடைந்துள்ள பேரூராட்சிகளையும், ஊராட்சிகளையும் ஒன்றிணைத்து விரிவாக்கம் செய்யப்படும்.

**புதிய நகராட்சிகள்:** பள்ளப்பட்டி, திட்டக்குடி, மாங்காடு, குன்றத்தூர், நந்திவரம் – கூடுவாஞ்சேரி, பொன்னேரி, திருநின்றவூர், சோளிங்கர், இடங்கனசாலை, தாரமங்கலம், திருமுருகன்பூண்டி, கூடலூர், காரமடை, கருமத்தம்பட்டி, மதுக்கரை, வடலூர், கோட்டக்குப்பம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, அதிராம்பட்டினம், மானாமதுரை, சுரண்டை, களக்காடு, திருச்செந்தூர், கொல்லன்கோடு, முசிறி, லால்குடி ஆகிய பேரூராட்சிகள் அதன் அருகே வளர்ச்சியடைந்துள்ள ஊராட்சிகளை ஒன்றிணைத்து நகராட்சிகளாக மாற்றப்படும்.

மேலும், புஞ்சை புகளூர் மற்றும் புகளூர் ஆகிய 2 பேரூராட்சிகளையும் இணைத்து புகளூர் நகராட்சியாக அமைக்கப்படும்.

**உறுப்பினர்கள் பதவிக்காலம்:** தரம் உயர்த்தப்படும் அல்லது விரிவாக்கம் செய்யப்படும்போது மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுடன் இணைக்கப்படும் ஊராட்சிகளில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட (அ) தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள் தொடர்ந்து அவர்களது பதவிக் காலம் முடியும் வரை அப்பதவிகளிலேயே தொடர்வார்கள்.

சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் பதவிக்காலம் முடிவடையும்போது இணைக்கப்படும் பகுதிகள் புதிதாக உருவாக்கப்படும் (அ) விரிவாக்கம் செய்யப்படும் நகராட்சி அல்லது மாநகராட்சியின் முழுமையான ஆளுமைக்கு உட்படுத்தப்படும் என்றார் அமைச்சர் K N நேரு.

**மொத்தம் 21 மாநகராட்சிகள்**

தமிழ்நாட்டில் ஏற்கனவே 15 மாநகராட்சிகள் உள்ளன. மாநகராட்சிகள் விவரம் (மாநகராட்சிகள் தொடங்கப்பட்ட காலம் அடைப்புக்குறிக்குள் அளிக்கப்பட்டுள்ளது):

சென்னை (1688), மதுரை (1971), கோயம்புத்தூர் (1981), திருச்சி (1994), சேலம் (1994), திருநெல்வேலி (1994), திருப்பூர் (2008), ஈரோடு (2008), வேலூர் (2008), தூத்துக்குடி (2008), தஞ்சாவூர் (2014), திண்டுக்கல் (2014), நாகர்கோவில் (2019), ஒசூர் (2019), ஆவடி (2019) ஆகிய மாநகராட்சிகள் உள்ளன. இத்துடன் புதிய ஆறு மாநகராட்சிகளையும் சேர்த்து மாநகராட்சிகளின் எண்ணிக்கை 21ஆக உயர்ந்துள்ளது. இதில் சென்னை மட்டும் பெருநகர மாநகராட்சியாக உள்ளது.

---

**2. இந்தியாவின் கரோனா தடுப்பூசி 'ஹக்கோ19': முதல்கட்ட பரிசோதனையில் வெற்றி**

கரோனா நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டுகின்ற, பாரம்பரிய முறையில் உருவான 'ஹக்கோ19 (HGCO 19) தடுப்பூசியின் முதல்கட்ட பரிசோதனையை மத்திய மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு (DCGI) ஏற்றுக்கொண்டுள்ளது. 'ஹக்கோ19' பாதுகாப்பானது, செல்லத்தக்கது, தடுப்பூசி ஆய்வில் பங்கேற்றவர்கள் நோய் எதிர்ப்பாற்றலைக் கொண்டுள்ளனர் என்று தெரிவித்து டிசிஜிஐ நிபுணர் குழு அனுமதியை வழங்கியுள்ளது.

மத்திய அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள உயிரி தொழில்நுட்பத் துறை தன்னுடைய உயிரி தொழில்நுட்ப தொழிலக ஆய்வு உதவி கவுன்சில் என்கிற லாப நோக்கமற்ற பொதுத் துறை நிறுவனத்தை அமைத்துள்ளது.

இந்த நிறுவனம் கரோனா பாதுகாப்புக்கான இயக்கத்தில் புணேவை சேர்ந்த ஜென்னோவா பயோ பார்மசூட்டிகல்ஸ் என்கிற தனியார் மருந்து நிறுவனத்துடன் இணைந்து, தடுப்பூசி தயாரிப்பு ஆய்வுகளை மேற்கொண்டது. இதற்கு மத்திய உயிரிதொழில்நுட்பத்துறை நிதியுதவி அளித்தது. இந்த 'ஹக்கோ19' தடுப்பூசி மற்ற தடுப்பூசிகளைவிட வேறுபட்டது. 'mRNA' அடிப்படையில் இந்திய பாரம்பரிய முறையில் நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் தூண்டும்விதமான தடுப்பூசியை உருவாக்குவதற்கான ஆய்வை மேற்கொண்டு, முதல்கட்ட பரிசோதனையில் வெற்றி பெற்றுள்ளது. இதற்கு அமெரிக்காவைச் சேர்ந்த ஹெச்டிடி பயோ கார்ப்பரேஷன் நிறுவனமும் உதவ முன்வந்துள்ளது. இந்தத் தடுப்பூசிக்கு 'ஹக்கோ19' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்பூசிக்கான முதல்கட்ட ஆய்வை பரிசீலனை செய்து ஏற்றுக் கொண்ட மத்திய மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு, இத்தடுப்பூசிக்கான 2ஆம், 3ஆம் கட்ட ஆய்வுகளை மேற்கொள்ளவும் அனுமதி அளித்துள்ளது.

---

**3. இந்தியாவின் தலைமையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் முக்கியக் கூட்டங்கள்**

இந்தியாவின் தலைமையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் 3 முக்கியக் கூட்டங்கள் நடைபெற்றதாகவும், அந்தக் கூட்டங்கள் வாயிலாக உறுப்பு நாடுகளின் கருத்துகள் முழுமையாகப் பெறப்பட்டதாகவும் ஐ.நா.வுக்கான இந்தியத் தூதர் டி.எஸ்.திருமூர்த்தி தெரிவித்துள்ளார். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ஆகஸ்ட் மாதத்துக்கான தலைமைப் பொறுப்பை இந்தியா வகித்து வருகிறது. கவுன்சிலின் தலைமைப் பொறுப்பை ஏற்றபிறகு கடல்சார் பாதுகாப்பு, அமைதிப்படை, பயங்கரவாத எதிர்ப்பு ஆகிய தலைப்புகளில் 3 முக்கியக் கூட்டங்களை இந்தியா நடத்தியது.

இன்னும் 1 வாரத்தில் இந்தியாவின் தலைமைப் பொறுப்பு நிறைவடைய உள்ள சூழலில், ஐ.நா.வுக்கான இந்திய தூதர் டி எஸ் திருமூர்த்தி செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

இந்தியாவின் தலைமையில் நடத்தப்பட்ட முக்கியக் கூட்டங்களின் வாயிலாக பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன. ஒவ்வொரு கூட்டத்திலும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் 15 உறுப்பு நாடுகள் தெரிவித்த முழுமையான கருத்துகளும் பெற்றுக் கொள்ளப்பட்டன. 3 முக்கியக் கூட்டங்கள் வாயிலாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் ஐ.நா.வின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு முக்கியப் பங்கு வகிக்கும். இந்தக் கூட்டங்களில் அனைத்து நாடுகளுடன் கலந்தாலோசித்து ஆவணங்களை இந்தியா தயாரித்துள்ளது.

உறுப்பு நாடுகளின் தேவைகள், பிரச்னைகள் உள்ளிட்ட அனைத்தும் அந்த ஆவணங்களில் இடம்பெற்றுள்ளன. கூட்டங்களில் இந்தியா முன்னெடுத்த கலந்தாலோசனை யுக்தியை அனைத்துத் தரப்பினரும் வரவேற்றனர். இந்தியாவின் தலைமையில் நடைபெற்ற 3 முக்கியக் கூட்டங்களும் வெற்றி பெற்றன. நாடுகள் வரவேற்பு: கடந்த 9–ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற கடல்சார் பாதுகாப்பு தொடர்பான கூட்டம் பல்வேறு வழிகளில் சிறப்புவாய்ந்தது. இந்தியப் பிரதமர் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்துக்குத் தலைமை தாங்கியது அதுவே முதல் முறை.

கடல்சார் பாதுகாப்புக்கென பிரத்யேகமாக நடத்தப்பட்ட முதல் கூட்டமும் அதுவே. கடல்சார் பாதுகாப்பு முக்கியத்துவம் பெற்று வரும் சூழலில் நடத்தப்பட்ட அக்கூட்டத்துக்குப் பல்வேறு நாடுகள் வரவேற்பு தெரிவித்தன. முக்கிய விவகாரத்தில் அனைத்துத் தரப்பினரின் கருத்துகளும் அந்தக் கூட்டத்தின் வாயிலாகப் பெறப்பட்டன.

தீர்மானம் நிறைவேற்றம்: அமைதிப்படை, பயங்கரவாத எதிர்ப்பு ஆகியவை தொடர்பான கூட்டங்கள் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தலைமையில் நடைபெற்றன. உலகம் முழுவதும் அமைதியை ஏற்படுத்துவதற்கு இந்தியா தொடர்ந்து கைகொடுத்து வருகிறது. அமைதிப் படைகளுக்கு அதிக எண்ணிக்கையிலான வீரர்களை இந்தியா அனுப்பி வருகிறது.

அமைதிப் படையினருக்கு எதிராக நிகழ்த்தப்படும் குற்றங்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தரும் நோக்கிலான தீர்மானம் இந்தியா சார்பில் நிறைவேற்றப்பட்டது. பயங்கரவாத எதிர்ப்பு விவகாரத்தில் அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென சிறப்புக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இந்தியாவின் தலைமையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் சிரியா, லெபனான், சோமாலியா, மியான்மர், யேமன் உள்ளிட்ட நாடுகளில் நிலவும் சூழல் குறித்தும் விவாதிக்கப்பட்டது என்றார் அவர்.

---

**4. தொடங்கியது டோக்கியோ பாராலிம்பிக்: இன்று முதல் போட்டிகள் ஆரம்பம்**

ஜப்பானின் டோக்கியோ நகரில் 16–ஆவது பாராலிம்பிக் போட்டி செவ்வாய்க்கிழமை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியது. வரும் செப்டம்பர் 5–ஆம் தேதி வரை 13 நாள்களுக்கு நடைபெறவுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான இந்த பாராலிம்பிக்கில், விளையாட்டுப் போட்டிகள் புதன்கிழமையிலிருந்து தொடங்குகின்றன. டோக்கியோவில் உள்ள தேசிய மைதானத்தில் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில் சர்வதேச பாராலிம்பிக் கமிட்டி (ஐபிசி) தலைவர் ஆன்ட்ரூ பார்சன்ஸ், ஜப்பான் அரசர் நருஹிடோ, ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

தொடக்க நிகழ்ச்சியானது, எண்ண இயலாத துன்பங்களுக்கு இடையேயும் உயரப் பறக்கும் வகையில் மாற்றுத்திறனாளிகள் மேற்கொள்ளும் முயற்சிகளை சித்தரிக்கும் வகையில், 'எங்களுக்கும் சிறகுள்ளது' என்ற கருத்துருவை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது. நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் அதைச் சார்ந்தே இருந்தன. நிகழ்ச்சியானது, பாராலிம்பிக் போட்டியாளர்களின் பலத்தை பிரதிபலிக்கும் வகையிலான காணொலி திரையிடப்பட்டதில் இருந்து தொடங்கியது. அதைத் தொடர்ந்து கவுன்ட்டவுன் நடைபெற்று, அதன் நிறைவில் பாராலிம்பிக் போட்டி தொடங்கியதை குறிக்கும் வகையில் மைதானத்திலிருந்து வாணவேடிக்கைகள் நிகழ்த்தப்பட்டன. அதன் பிறகு ஐபிசி தலைவர், அரசர் நருஹிடோ ஆகியோர் மேடையில் தோன்ற, பாராலிம்பிக் போட்டி தொடங்கியதாக அரசர் நருஹிடோ அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து ஜப்பானைச் சேர்ந்த பாராலிம்பிக் மல்யுத்த சாம்பியன் காவ்ரி இசோ உள்பட 6 பேர் ஜப்பான் கொடியை மேடைக்கு ஏந்தி வந்தனர். அதன் பிறகு கொடியேற்றப்பட்டது.

பின்னர் பங்கேற்பு நாடுகளின் அணிவகுப்பு, அகதிகள் குழுவிலிருந்து தொடங்கியது. அதில் இஸ்ரேல் அணியினரை ஒரு வழிகாட்டி நாய் அணிவகுத்து நடத்தி வந்தது அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பதாக இருந்தது. தலிபான்கள் ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானுக்கு ஆதரவளிக்கும் வகையில், அந்நாட்டின் தேசியக் கொடியும் அணிவகுப்பில் ஏந்தி வரப்பட்டது. அப்போது மைதானத்தில் கூடியிருந்தவர்கள் பலமான கரவொலி மூலம் அதற்கு வரவேற்பு தெரிவித்தனர். நடப்பு அரசியல் சூழல் காரணமாக அந்நாட்டிலிருந்து போட்டியாளர்கள் பங்கேற்க முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது.

இந்தியா...

தொடக்க விழா நிகழ்ச்சியில் இந்தியாவின் சார்பில் 5 போட்டியாளர்கள், 6 அதிகாரிகள் என 11 பேர் பங்கேற்றனர். முன்னதாக, இந்தியாவின் அணிவகுப்பில் தமிழக உயரம் தாண்டுதல் வீரர் மாரியப்பன் தேசியக் கொடியை ஏந்திச் செல்வதாக இருந்தது. எனினும், விமானத்தில் வரும்போது மாரியப்பனுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த நபருக்கு கரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து, முன்னெச்சரிக்கையாக மாரியப்பனும், அவருடன் இருந்த வட்டு எறிதல் வீரர் வினோத் குமாரும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதனால் நிகழ்ச்சியில் இந்தியாவின் தேசியக் கொடியை குண்டு எறிதல் வீரர் தேக் சந்த் ஏந்திச் சென்றார். எனினும், பரிசோதனையில் மாரியப்பன், வினோத் குமாருக்கு தொற்று பாதிப்பு இல்லை எனத் தெரியவந்ததால் அவர்கள் போட்டியில் பங்கேற்பதில் தடையில்லை என்று அணி நிர்வாகம் தெரிவித்தது.

பாராலிம்பிக் போட்டியானது 57 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் டோக்கியோ நகரில் நடத்தப்படுகிறது. இதன் மூலம், பாராலிம்பிக் போட்டியை இரு முறை நடத்திய முதல் நகரம் என்ற பெருமையை டோக்கியோ பெற்றுள்ளது. 4,403 – டோக்கியோ பாராலிம்பிக்கில் பங்கேற்கும் போட்டியாளர்கள் எண்ணிக்கை. கடந்த ரியோ பாராலிம்பிக்கில் பங்கேற்றோர் எண்ணிக்கையை விட (4,328) இது அதிகமாகும். 2,550 ஆண் போட்டியாளர்கள்/ 1,853 பெண் போட்டியாளர்கள். 22/540 – இந்த பாராலிம்பிக்கில் மொத்தம் 22 விளையாட்டுகளில் 540 பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகின்றன.

---

**5. நியூயார்க்கின் முதல் பெண் ஆளுநர் பதவியேற்பு**

அமெரிக்காவின் நியூயார்க் மாகாணத்திற்கு முதல் பெண் ஆளுநராக கேத்தலீன் ஹோக்கல் (Kathleen Hogle) அவர்கள் பதவியேற்றார். அமெரிக்காவிலுள்ள நியூயார்க் மாகாணத்தின் முதல் பெண் ஆளுநராக கேத்தலீன் ஹோக்கல் (Kathleen Hogle) செவ்வாய்க்கிழமை

பதவியேற்றுக் கொண்டார். 62 வயதாகும் அவர், 16 மாதங்களுக்கு ஆளுநர் பொறுப்பை வகிப்பார். இதுவரை ஆளுநராக இருந்து வந்த ஆண்ட்ரூ குவாமோ மீது அடுக்கடுக்காக பாலியல் புகார்கள் எழுந்ததைத் தொடர்ந்து அவர் பதவியை ராஜிநாமா செய்தார்.

அதனைத் தொடர்ந்து, அந்தப் பதவிக்கு கேத்தலீன் ஹோக்கல் (Kathleen Hogle) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரையும் சேர்த்து, தற்போது அமெரிக்காவின் 9 மாகாணங்களில் பெண்கள் ஆளுநர்களாக உள்ளனர். இது, அந்த நாட்டில் இதுவரை இல்லாத அதிகபட்ச எண்ணிக்கையாகும்.

---

**1. பின்வரும் எந்த மாநிலத்திலிருந்து, இந்தியாவிலேயே முதன் முறையாக ஓர் அரியவகை மந்தாரை இனம் கண்டுபிடிக்கப்பட்டது?**

**அ) உத்தரகண்ட் ☑**



ஆ) இமாச்சல பிரதேசம்

இ) சிக்கிம்

ஈ) மிசோரம்

✓ '*Cephalanthera erecta var. oblanceolata*' என்ற ஓர் அரியவகை மந்தாரை இனம், இந்தியாவிலேயே முதன்முறையாக உத்தரகண்ட் மாநிலத்தின் சமோலி மாவட்டத்தில் 1870 மீ உயரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. BSIஇன் 6 மாதத்திற்கு ஒருமுறை வெளிவரும் இதழான நெலும்போவில் இந்திய தாவரங்களின் புதிய இனங்கள்பற்றிய ஆய்வுக்கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இந்திய மந்தாரை இனங்கள் குறித்த தகவல்களைக்கொண்ட தொகுதிகள் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

---

**2. வடகிழக்கு மாநிலங்களில் அதிவேக இணையசேவையினை வழங்குவதற்காக, கீழ்காணும் எந்த நிறுவனத்துடன், யுனிவர்சல் சர்வீஸ் ஆப்ளிகேஷன் பண்ட் கூட்டுசேர்ந்துள்ளது?**

**அ) BSNL ☑**

ஆ) MTNL

இ) ஏர்டெல்

ஈ) வி

✓ வடகிழக்கு மாநிலங்களுக்கு அதிவேக இணைய சேவை பெறுவதற்கு, யுனிவர்சல் சர்வீஸ் ஆப்ளிகேசன் பண்ட் (USOF) BSNL நிறுவனத்துடன் ஒப்பந்தம்செய்தது. இதன்மூலம் அகர்தலாவுக்கு இணைய இணைப்புக்கு 10 ஜிபிபிஎஸ் பன்னாட்டு அலைவரிசை, காக்ஸ் பஜார் வழியாக வங்க தேசத்தின் BSCCL நிறுவனத்திடமிருந்து வாடகை அடிப்படையில் பெறப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தின்கீழ், மேற்கண்ட பன்னாட்டு அலை வரிசையை, மூன்றாண்டுகளுக்கு வாடகைக்குப்பெற, பிஎஸ்என்எல் நிறுவனத்துக்கு, USOF நிதியுதவி அளிக்கும். இதன்மூலம் வடகிழக்குப் பகுதி மக்கள் அதிவேக இணைய இணைப்புடன் பல இ–சேவைகளை பெறுவர்.

---

**3. தென்சீனக்கடலில் நீர்மூழ்கிக்கப்பல் எதிர்ப்புப்பயிற்சியைத் தொட –ங்கியுள்ள நாடு எது?**

**அ) ஜப்பான் ☑**



ஆ) சீனா

இ) சிங்கப்பூர்

ஈ) இந்தோனேசியா

✓ ஜப்பான் இராணுவ அமைச்சகத்தின் ஓர் அண்மைய அறிக்கையின்படி, ஜப்பானின் கடல்சார் தற்காப்புப்படை தென்சீனக்கடலில் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் பயிற்சிகளைத் தொடங்கியுள்ளது. இந்தப் பயிற்சியில், உலங்கூர்தி விமானந்தாங்கி மற்றும் நீர்மூழ்கிக்கப்பல் உட்பட மூன்று கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. முழு தென்சீனக்கடலையும் உரிமை கோரும் சீனா, அங்கு செயற்கைத்தீவுகளை அமைத்து அதில் இராணுவ புறக்காவல் நிலையங்களை நிறுவியுள்ளது. தென்சீனக்கடலை சீனா இராணுவமயமாக்குவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகிறது.

---

**4. சமீபத்தில், COVID தொற்றால் கடுமையாக பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்காக COVIDஆல் பாதிக்கப்பட்டோருக்கான வாழ்வாதார ஆதரவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?**

**அ) மணிப்பூர் ☑**



ஆ) புதுச்சேரி

இ) மகாராஷ்டிரா

ஈ) ஒடிஸா

✓ மணிப்பூரில் COVIDஆல் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதற்காக, COVIDஆல் பாதிக்கப்பட்டோருக்கான வாழ்வாதார ஆதரவுத்திட்டத்தை மணிப்பூர் முதல்வர் என் பீரன் சிங் தொடங்கினார். இத்திட்டத்தின்கீழ் 6,276 பயனாளிகளுக்கு ஒரு பயனாளருக்கு ₹2500 வீதம் மொத்தமாக ₹1.56 கோடி வழங்கப்பட்டது.

---

**5. தொலையுணரி & புவியியல் தகவலமைப்பு அடிப்படையிலான தரவைப்பயன்படுத்தி MGNREGA திட்டத்தின் புதிய செயல்பாடுகளை திட்டமிட உதவும் தளத்தின் பெயர் என்ன?**

அ) பூமி இராசி



ஆ) மதத்

**இ) யுக்தாரா ☑**

ஈ) இ–சனத்

✓ 'யுக்தாரா' திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ள புதிய புவிசார் திட்டமிடல் இணையதளம், தொலையுணர்வு மற்றும் புவியியல் தகவல் கருவி (GIS) அடிப்படையிலான தகவல்மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் (MGNREGA) புதிய செயல்பாடுகளை திட்டமிட உதவும்.

✓ பல்வேறு தேசிய ஊரக மேம்பாட்டு திட்டங்களின்கீழ் உருவாக்கப்பட்ட ஜியோடேக் (நிழற்படம் & காணொளிகள் அடங்கிய புவியியல் இடங்கள்) தகவல்கள் களஞ்சியமாக இந்தப் புவிசார் திட்டமிடல் இணையதளம் செயல்படும். இதில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம், சொட்டுநீர்ப்பாசனத்திட்டம், தேசிய வேளாண் மேம்பாட்டு திட்டம் குறித்த தகவல்கள் நிழற்படங்களுடன் இருக்கும்.

---

**6. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட போர் விமானம், பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை 'ARMY–2021'இல் இந்தியா அறிமுகஞ்செய்தது. கீழ்கண்ட எந்த நாட்டில், 'ARMY–2021' நடைபெறுகிறது?**

அ) இந்தியா



**ஆ) ரஷ்யா ☑**

இ) இஸ்ரேல்

ஈ) அமெரிக்கா

✓ மாஸ்கோ பிராந்தியத்தில் நடைபெறும் பன்னாட்டு இராணுவ–தொழில் நுட்ப மன்றமான 'ARMY–2021'இல் இந்தியா தனது உள்நாட்டுப்போர் விமானமான LCA தேஜஸ், பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டும் ஏவுகணைகள், அர்ஜுன் முதன்மை போர் பீரங்கி (MK1A) ஆகியவற்றை அறிமுகம் செய்தது.

✓ ஆகஸ்ட்.22–28 வரை மாஸ்கோவின் குபின்காவில் நடைபெறும் பன்னாட்டு இராணுவ–தொழில்நுட்ப மன்றமான 'ARMY–2021'இல் DRDO பங்கேற்கிறது. DRDO என்பது இந்திய காட்சியரங்கின் ஒருபகுதி ஆகும். அங்கு அதிநவீன பாதுகாப்பு தொழில்நுட்பங்களும் அமைப்புகளும் இந்திய பாதுகாப்புத் தொழில்களான கோவா ஷிப்யார்ட் லிமிடெட் (GSL), ஆயுதத் தொழிற்சாலைகள் மற்றும் பாரத் எர்த் மூவர்ஸ் லிமிடெட் (BEML) ஆகியவற்றுடன் இணைந்து காட்சிப்படுத்தப்படும்.

---

**7. சமீபத்தில், 34 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்திய அமைப்பு எது?**

அ) ISRO

ஆ) ஸ்பேஸ் X

இ) NASA

**ஈ) ஒன்வெப் ☑**

✓ பாரதி குழுமத்தின் ஆதரவில் இயங்கும் தாழ்புவி சுற்றுப்பாதை (LEO) செயற்கைக்கோள் தகவல் தொடர்பு நிறுவனமான ஒன்வெப், பைக்கோனூர் விண்வெளி ஏவுதளத்திலிருந்து அரியான்ஸ்பேஸ்மூலம் 34 செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவியதை உறுதிசெய்துள்ளது. OneWeb'இன் 'ஐந்து முதல் 50' திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒன்வெபின் செயற்கைக்கோள்களை 288ஆக மாற்றியுள்ளது.

---

**8. ஜெர்மனியில் பயிலவிரும்பும் மாணவர்களுக்காக டிஜிட்டல் & உடனடி தடுக்கப்பட்ட கணக்கை தொடங்கியுள்ள வங்கி எது?**

அ) சிட்டி வங்கி

**ஆ) ICICI வங்கி ஜெர்மனி ☑**

இ) டாய்ச் வங்கி

ஈ) பாரத வங்கி

✓ ஜெர்மனியில் பயில விழையும் மாணவர்களுக்காக டிஜிட்டல் மற்றும் உடனடி தடுக்கப்பட்ட கணக்கை தொடங்குவதாக ICICI வங்கி ஜெர்மனி அறிவித்துள்ளது. தடுக்கப்பட்ட கணக்கு (Blocked Account) என்பது ஒரு

சிறப்பு வகை வங்கிக்கணக்காகும்; அதில் மாணவர்கள், ஒரு இருப்பு உறுதிப்படுத்தல் சான்றிதழை (Balance Confirmation Certificate (BCC)) பெறுவதற்காக குறிப்பிட்ட அளவு பணத்தை வைத்திருக்க வேண்டும். ஜெர்மனியில் மாணவ விசா பெறுவதற்கு இந்தக் கணக்கு கட்டாயமாகும். இக்கணக்கு, மாணவர்களுக்கு ஜெர்மனியில் பயன்படுத்தக்கூடிய ஒரு நடப்பு கணக்கை வழங்குகிறது. இது, உலகில் எங்கும் பயன்படுத்தக்கூடிய விசா பற்றட்டையுடன் வருகிறது.

**9. தேசிய வேளாண் சந்தையில் (eNAM) வர்த்தகத்தில் முன்னிலை வகிக்கும் மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

**ஆ) இராஜஸ்தான் ☑**

இ) மேற்கு வங்கம்

ஈ) கேரளா

✓ தேசிய வேளாண் சந்தையில் வர்த்தகத்தில் முன்னிலை வகிக்கும் மாநிலமாக இராஜஸ்தான் உருவெடுத்துள்ளது. வேளாண்பொருட்களின் இ–வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்காக அனைத்து தனித்தனி வர்த்தக உரிமங்களையும் ஒருங்கிணைந்த உரிமமாக மாற்ற அனுமதித்த முதல் மாநிலம் இராஜஸ்தான் ஆகும். தற்போதுவரை, மொத்தம் 37346 வர்த்தகர்கள் ஒருங்கிணைந்த உரிமதாரர் வர்த்தகர்களாக பணியாற்றுகின்றனர்.

**10. அண்மையில், அமெரிக்க சட்டமன்றத்தின் தங்கப்பதக்கம் பெற்ற முதல் இந்தியர் யார்?**

அ) நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்

**ஆ) மகாத்மா காந்தி ☑**



இ) பகத் சிங்

ஈ) B R அம்பேத்கர்

✓ நியூயார்க் காங்கிரஸ் பெண்மணி கரோலின் மாலோனி, 'மகாத்மா' காந்திக்கு, அமெரிக்க சட்டமன்றத்தின் தங்கப்பதக்கத்தை, அவரது இறப்பி –ற்குப்பின் வழங்குவதற்காக, அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் அதற்கான சட்டத்தை மீண்டும் அறிமுகம்செய்தார். அகிம்சைமுறைகளின் மூலம் அவராற்றிய பங்களிப்புகளுக்காக அவருக்கு இவ்விருது வழங்கப் –படுகிறது. அவர், அமெரிக்காவின் மிகவுயர்ந்த குடிமகன் விருதான காங்கிரஸ் தங்கப்பதக்கத்தை பெறும் முதல் இந்தியர் ஆவார்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 2021–22–ஆம் ஆண்டுக்கான கரும்புப் பருவத்தில் சர்க்கரை ஆலைகள், கரும்புக்கு அளிக்கவேண்டிய நியாயமான மற்றும் லாபகரமான விலையை நிர்ணயிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, 2021–22 கரும்புப் பருவத்திற்கு (அக்டோபர் –செப்டம்பர்) சர்க்கரை ஆலைகள் அளிக்கும் கரும்புக்கான நியாயமான மற்றும் லாபகரமான விலைக்கு (எஃப் ஆர் பி) பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான, பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி கரும்பின் எஃப் ஆர் பி, அடிப்படை மீட்பு விகிதம் 10% உடன் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 290 வழங்கப்படும். மீட்பு விகிதம் 10%க்கு மேல் அதிகரித்தால் ஒவ்வொரு சதவிகிதத்திற்கும் ஒவ்வொரு குவின்டாலுக்கும் 0.1% அதிகமாக அதாவது குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2.90 கூடுதல் தொகை அளிக்கப்படும்.

விகிதம் குறைய நேரிட்டால், ஒவ்வொரு குவிண்டாலுக்கும் 0.1% குறைவாக, அதாவது எஃப் ஆர் பி விலையிலிருந்து ரூ. 2.90 குறைவாக வழங்கப்படும். 9.5%க்கு குறைவாக உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு விலை குறைக்கப்படாது என்ற முடிவின் மூலம் விவசாயிகளின் நலனை பாதுகாப்பதில் அரசின் ஆக்கபூர்வமான அணுகுமுறை வெளிப்படுகிறது. அத்தகைய விவசாயிகள் கரும்பு பருவம் 2021– 22 இல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 275.50 பெறுவார்கள். தற்போதைய கரும்பு பருவம் 2020–21 இல் இந்தத் தொகை ரூ. 270.75 ஆக உள்ளது. கரும்பு பருவம் 2021–22 க்கான உற்பத்தித் தொகை, குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 155 ஆகும். 10% மீட்பு விகிதத்துடன் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 290 என்ற இந்த எஃப் ஆர் பி, உற்பத்தி தொகையைவிட 87.1% அதிகம். இதன் வாயிலாக தங்கள் தொகையையும் விட கூடுதலாக 50% மீட்புத் தொகையை விவசாயிகள் பெறுவார்கள்.

தற்போதைய கரும்பு பருவம் 2020–21 இல் ரூ. 91,000 கோடி மதிப்பில் 2,976 லட்சம் டன் கரும்புகளை சர்க்கரை ஆலைகள் கொள்முதல் செய்துள்ளன. இதுவரையிலான கொள்முதலில் இந்த எண்ணிக்கை மிகவும் அதிகமானது. குறைந்தபட்ச ஆதரவு விலையில் நெல்லுக்கு அடுத்தபடியாக கரும்பு அதிகளவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கரும்பு பருவம் 2021–22– ல் கரும்பின் உற்பத்தி அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால் சுமார் 3,088 லட்சம் டன் கரும்புகள் சர்க்கரை ஆலைகளால் கொள்முதல் செய்யப்படக்கூடும். கரும்பு விவசாயிகளுக்கு சுமார் ரூ. 1,00,000 கோடி கிடைக்கும். விவசாயிகளுக்கு உகந்த நடவடிக்கைகளின் வாயிலாக, உரிய காலத்தில் கரும்பு விவசாயிகளுக்கான தொகை அவர்களுக்கு வழங்கப்படுவதை அரசு உறுதி செய்யும்.

கரும்பு பருவம் 2021–22 இல் (அக்டோபர் 1, 2021 முதல் அமலுக்கு வருகிறது) சர்க்கரை ஆலைகள் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் கரும்புகளுக்கு, அனுமதி அளிக்கப்பட்டுள்ள நியாயமான மற்றும் லாபகரமான விலையில் கரும்புகள் வழங்கப்படும். சுமார் 5 கோடி கரும்பு விவசாயிகள் மற்றும் அவர்களைச் சார்ந்தோரின் வாழ்வாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய வேளாண் அடிப்படையிலான துறையாக கரும்புத் துறை விளங்குகிறது. சுமார் 5 லட்சம் பணியாளர்கள் சர்க்கரை ஆலைகளில் நேரடியாக பணியாற்றுவதோடு ஏராளமானோர், வேளாண் தொழில் மற்றும் போக்குவரத்து சார்ந்த பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

**2. அமெரிக்கா: சராசரி வருவாயில் இந்திய வம்சாவளியினர் முதலிடம்**

அமெரிக்காவில் சராசரி குடும்ப வருவாய் மற்றும் கல்லூரிப் பட்டதாரிகளின் எண்ணிக்கையில் ஒட்டுமொத்த அமெரிக்கா'களை இந்திய வம்சாவளியினர் விஞ்சியுள்ளனர். இதுகுறித்து அந்த நாட்டில் அண்மையில் எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பு புள்ளி விவரங்கள் தெரிவிப்பதாவது:

அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்கள், அந்த நாட்டின் குடியுரிமை பெற்ற இந்தியர்கள் மற்றும் அங்கு பிறந்த இந்திய வம்சாவளியினரின் சராசரி குடும்ப வருவாய் 1,23,700 டாலராக (சுமார் ₹91.78 இலட்சம்) உள்ளது. கல்லூரி பட்டதாரிகளில் 79% பேர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்க –ளாக உள்ளனர். இதன்மூலம், குடும்ப வருவாய் மற்றும் கல்லூரிக் கல்வியில் ஒட்டுமொத்த அமெரிக்கர்களை இந்திய வம்சாவளியினர் விஞ்சியுள்ளனர்.

கடந்த முப்பது ஆண்டுகளில் ஆசியர்களாக அடையாளம் காணப்படும் நபர்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. தற்போது நாட்டின் நான்கு பெரிய இனக் குழுக்களில் ஆசியர்கள் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் குழுவினராக ஆகியுள்ளனர். அமெரிக்காவில் தற்போது சுமார் 40 லட்சம் இந்தியர்கள் வசிக்கின்றனர். அவர்களில் 16 லட்சம் பேர் நுழைவு இசைவு பெற்று அந்த நாட்டில் வசிப்பவர்கள். 14 லட்சம் பேர் அமெரிக்கக் குடியுரிமை பெற்றவர்கள். 10 லட்சம் பேர் அந்த நாட்டிலேயே பிறந்தவர்கள் ஆவர்.

அந்தப் பிரிவினரின் சராசரி குடும்ப வருமானமான 1,23,700 டாலர்கள், நாடுதழுவிய சராசரி குடும்ப வருவாயான 63,922 டாலரைவிட இரு மடங்காகும். அறிக்கையின்படி, நாடு முழுவதும் சராசரியாக 34 சதவிகித –த்தினர் பட்டம் பெற்றுள்ள நிலையில், இந்திய வம்சாவளியினரில் 79% பேர் கல்லூரிகளில் பட்டம்பெற்றுள்ளவர்களாக உள்ளனர். சராசரி குடும்ப வருவாயில் இந்திய வம்சாவளியினருக்கு அடுத்தபடியாக தைவான் வம்சாவளியினரும் ($97,129), 3ஆமிடத்தில் பிலிப்பின்ஸ் நாட்டவர்களும் ($95,000) உள்ளனர் என்று அந்தப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

**3. BSF புதிய இயக்குநராக பங்கஜ் சிங் நியமனம்**

எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) இயக்குநர் ஜெனரலாக மூத்த ஐபிஎஸ் அதிகாரி பங்கஜ் சிங் (58) நியமிக்கப்பட்டுள்ளார். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இதே பதவியை இவரின் தந்தை பிரகாஷ் சிங் வகித்தது குறிப்பிடத்தக்கது.

ராஜஸ்தான் மாநிலத்தின் 1988ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த பங்கஜ் சிங், ஆக.31ஆம் தேதி BSF இயக்குநராகப் பதவியேற்றுக்கொள்வார் என அதிகாரபூர்வ உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் தில்லியிலுள்ள BSF தலைமையகத்தில் சிறப்பு இயக்குநர் ஜெனரலாக பணியாற்றி வருகிறார். தற்போது BSF இயக்குநர் ஜெனரலாக இந்தோ–திபெத்

எல்லைப் பாதுகாப்பு காவல் படை இயக்குநர் S S தேஸ்வால் கூடுதல் பொறுப்பு வகித்துவருகிறார். அவர் ஓய்வுபெறவுள்ளதையொட்டி புதிய இயக்குநர் ஜெனரலாக பங்கஜ் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

பங்கஜ் சிங்கின் தந்தை பிரகாஷ் சிங், 1993–94'இல் BSF இயக்குநர் ஜெனரலாகப் பணிபுரிந்தார். காவல்துறையில் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியதற்காக அறியப்படும் பிரகாஷ் சிங்கிற்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது. இந்தோ–திபெத் எல்லைக் காவல் படையின் புதிய தலைவராக தமிழ்நாட்டின் 1988ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த ஐபிஎஸ் அதிகாரி சஞ்சய் அரோரா, காவல் ஆராய்ச்சி & மேம்பாட்டுப் பிரிவு புதிய தலைவராக பாலாஜி வத்சவா ஆகியோரை நடுவணரசு நியமித்துள்ளது.

---

**4. இந்தியா – கஜகஸ்தான் 5ஆம் கட்டகூட்டுப்பயிற்சி 30'இல் தொடக்கம்**

இந்தியா–கஜகஸ்தான் நாடுகளுக்கு இடையேயான ஐந்தாவது கட்ட இராணுவ கூட்டுப்பயிற்சி ஆக.30ஆம் தேதி தொடங்குகிறது. இராணுவ ராஜதந்திர நடவடிக்கைகள் மற்றும் கஜகஸ்தானுடனான வளர்ந்துவரும் உறவை வலுப்படுத்தும் நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது.

கஜகஸ்தானில் உள்ள ஆயிஷா பிபியில் இருக்கும் பயிற்சி நிலையத்தில் செப்.11 வரை நடக்கவுள்ள இக்கூட்டுப்பயிற்சியில், இந்தியா–கஜகஸ்தான் நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு உறவை வலுப்படுத்தும் விதத்தில் இருநாட்டு ராணுவங்களும் பயிற்சிகளை மேற்கொள்ளும்.

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் குறித்து இந்தியா மற்றும் கஜகஸ்தான் ராணுவத்தினருக்கு இந்தக் கூட்டு நடவடிக்கையின்போது பயிற்சியளிக்கப்படும். இந்தியா & கஜகஸ்தான் இராணுவங்களுக்கு இடையே நிலவிவரும் பரஸ்பர நம்பிக்கை, கூட்டு செயல்பாடு மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்தல் ஆகியவற்றை இந்தப் பயிற்சி வலுப்படுத்தும் என்று மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. முதல் தங்கத்தை ஆஸ்திரேலியா வென்றது**

டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் முதல் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கிய நிலையில், முதல் தங்கப்பதக்கத்தை ஆஸ்திரேலிய சைக்கிளிங் வீராங்கனை பெய்ஜ் கிரேகோ வென்றார்.

மகளிருக்கான சைக்கிளிங் போட்டியில் 'C1–3' 3000 மீ பிரிவில் பெய்ஜ் கிரேகோ 3 நிமிஷம் 50.81 விநாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பிடித்தார். சீனாவின் வாங் ஜியாவ்மெய் 3 நிமிஷம் 54.97 விநாடிகளில் வந்து வெள்ளியும், ஜெர்மனியின் டெனிஸ் ஷின்ட்லர் 3 நிமிஷம் 55.12 விநாடிகளில் வந்து வெண்கலமும் வென்றனர். கிரேகோவுக்கு இது முதல் பாராலிம்பிக் பதக்கமாகும். டோக்கியோ பாராலிம்பிக்கில் முதல் நாளில் 7 விளையாட்டுகளில் 24 பதக்க போட்டிகள் நடைபெற்றன.

---

**1. பின்வரும் எந்த நகரத்தில், செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க மையம் திறக்கப்பட்டுள்ளது?**

அ) சென்னை

**ஆ) ஹைதராபாத் ☑**

இ) திருவனந்தபுரம்

ஈ) பெங்களுரு



- ✓ ஹைதராபாத் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க மையத்தை மத்திய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் திறந்துவைத்தார். பொருண்ம அறிவியல் மற்றும் உலோகவியற்பொறியியல் துறையின் கட்டடம், உயர் செயல்திறன்கொண்ட கணினி மையம் மற்றும் உயர்–தெளிவுத்திறன் கொண்ட எலக்ட்ரான் நுண்ணோக்கி வசதி ஆகியவற்றையும் அவர் திறந்துவைத்தார்.
- ✓ செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க மையமானது ஜப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு நிறுவனத்துடன் (JICA) இணைந்து அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வகத்தை நிறுவுவதற்காக ஹனிவெல் டெக்னாலஜி சொல்யூஷன்சுடன் பல்கலை ஒப்பந்தம் செய்துள்ளது.

---

**2. 2021 உலக தடகள U20 சாம்பியன்ஷிப்பை நடத்துகிற நாடு எது?**

அ) கானா

**ஆ) கென்யா ☑**

இ) தென்னாப்பிரிக்கா

ஈ) ஜமைக்கா

WORLD ATHLETICS U20 CHAMPIONSHIPS NAIROBI 21

- ✓ 2021 உலக தடகள U20 சாம்பியன்ஷிப், உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் என்றும் அழைக்கப்படுகிறது; இது கென்யாவின் நைரோபியில் உள்ள நயாயோ விளையாட்டு வளாகத்தில் 2021 ஆகஸ்ட் 17 முதல் 22 வரை நடைபெறுகிறது. U20 சாம்பியன்ஷிப் என்பது ஜூனியர் சாம்பியன்ஷிப் ஆக தகுதிபெறுவதற்கான ஒரு சர்வதேச தடகள போட்டியாகும்.

---

**3. உலக கொசு நாளாக கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஆகஸ்ட்.18

**ஆ) ஆகஸ்ட்.20 ☑**

இ) ஆகஸ்ட்.22

ஈ) ஆகஸ்ட்.24



- ✓ மலேரியாவிற்கான காரணங்கள் மற்றும் அதை எவ்வாறு தடுப்பது என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் ஆகஸ்ட்.20 அன்று உலக கொசு நாள் கடைபிடிக்கப்படுகிறது. மலேரியாவால் ஏற்படும் நோய்க்கு எதிரான போராட்டத்தில் சுகாதார அதிகாரிகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்புகளின் முன்னெடுப்புகளை முன்னிலைப்படுத்துவதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ✓ ஒவ்வோர் ஆண்டும் உலக கொசு நாளன்று, கொசுக்களால் ஏற்படும் நோய்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. "Reaching the zero-malaria target" என்பது நடப்பாண்டு (2021) வரும் உலக கொசு நாளுக்கானக் கருப்பொருளாகும். கடந்த 1897ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் மருத்துவர் சர் ரொனால்ட் ராஸ், பெண் கொசுக்கள் மனிதர்களிடையே மலேரியாவை பரப்புகின்றன என்று கண்டுபிடித்த நிகழ்வையும் இந்த நாள் நினைவுகூர்கிறது. 1902'இல், ராஸ், மருத்துவத்திற்கான நோபல் பரிசை வென்றார் மற்றும் அதைப்பெற்ற முதல் பிரித்தானியர் ஆனார்.

---

**4. கர்னால் ஏரி உல்லாச விடுதியில் முதல் சோலார் மின்சார வாகன மின்னேற்ற நிலையம் திறக்கப்பட்டதை அடுத்து, எந்த நெடுஞ்சாலை, இந்தியாவின் முதல் மின்–வாகனத்துக்குகந்த நெடுஞ்சாலையாக மாறியுள்ளது?**

**அ) தில்லி–சண்டிகர் நெடுஞ்சாலை ☑**

ஆ) தில்லி–மும்பை நெடுஞ்சாலை

இ) தில்லி–ஜெய்ப்பூர் நெடுஞ்சாலை

ஈ) தில்லி–மீரட் நெடுஞ்சாலை



- ✓ மத்திய கனரக தொழிற்சாலைகள் அமைச்சின் FAME–1 (இந்தியாவில் மின்சார மற்றும் கலப்பு வாகனங்களுக்கு விரைவில் மாறுதல் மற்றும் உற்பத்தி) திட்டத்தின்கீழ் சூரிய ஆற்றல் அடிப்படையிலான வாகன மின்னேற்றி நிலையங்களை தில்லி–சண்டிகர் நெடுஞ்சாலையில் அதிகளவில் பாரத மிகுமின் நிறுவனம் நிறுவியிருப்பதால், இந்தியாவின் முதல் மின்சார வாகனங்களுக்கு தோழமையான நெடுஞ்சாலையாக அது உருவாகி இருக்கிறது.
- ✓ கர்னால் ஏரி விடுதியில் அமைந்துள்ள சூரிய ஆற்றல் மின்சார வாகன மின்னேற்றி நிலையத்தை மத்திய கனரக தொழிற்சாலைகள் அமைச்சர் டாக்டர் மகேந்திரநாத் பாண்டே காணொலிமூலம் திறந்துவைத்தார்.

---

**5. உலகளவில் கிரிப்டோ ஏற்றலில் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ) முதலாவது

**ஆ) இரண்டாவது ☑**

இ) மூன்றாவது

ஈ) நான்காவது



- ✓ பிளாக்செயின் தரவுதளமான செயினாலிசிஸின்படி, 2021 உலகளாவிய கிரிப்டோ ஏற்றல் குறியீட்டில் (Crypto Adoption), உலகளவில் கிரிப்டோ ஏற்றலில் வியத்நாமிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. கிரிப்டோ ஏற்றலில் உள்ள முதல் 5 நாடுகளுமே ஆசியாவைச் சேர்ந்தவைதான். உலகளவில் 47,000 பயனர்களை அந்த நிறுவனம் ஆய்வுசெய்தது. இந்தியாவில், 30% பேர் தாங்கள் கிரிப்டோகரன்ஸிகள் வைத்திருப்பதாக கூறினர். அந்த அறிக்கையின்படி, பிட்காயின் என்பது இந்தியாவில் மிகவும் பிரபலமான நாணயமாகும். அதைத் தொடர்ந்து ரிப்பிள், எத்தேரியம் மற்றும் பிட்காயின் கேஷ் ஆகியவை உள்ளன.

---

**6. அடிமை வர்த்தகம் & அதன் ஒழிப்பினை நினைவுகூருவதற்கான பன்னாட்டு நினைவு நாளாக அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஆகஸ்ட்.20

ஆ) ஆகஸ்ட்.21

இ) ஆகஸ்ட்.22

**ஈ) ஆகஸ்ட்.23 ☑**




- ✓ ஐநா அவையானது ஆண்டுதோறும் ஆக.23 அன்று "அடிமை வர்த்தகம் & அதன் ஒழிப்பினை நினைவுகூருவதற்கான பன்னாட்டு நினைவு நாளாக" அனுசரிக்கிறது. கொடூரமான நடைமுறை அல்லது முறையான இனவெறியால் மனிதாபிமானமற்ற முறையில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களின் நினைவாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. கடந்த 1791'இல் செயிண்ட்–டொமிங்குவில், அடிமைத்தனத்தை முடிவுக்குக் கொண்டுவர கலகம் செய்த ஆண்கள் மற்றும் பெண்களின் நினைவை இந்த நாள் கௌரவிக்கிறது.

---

**7. சென்னை நாளாக கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ) ஆகஸ்ட்.22 ☑**

ஆ) ஆகஸ்ட்.24

இ) ஆகஸ்ட்.25

ஈ) ஆகஸ்ட்.27




- ✓ 2021 ஆகஸ்ட்.22 அன்று சென்னை தனது 382ஆவது பிறந்தநாளைக் கொண்டாடியது. 1639 ஆக.22 அன்று, மதராசப்பட்டணம் கிராமத்தை கிழக்கிந்திய நிறுவனம் விசயநகரப்பேரரசிடமிருந்து வாங்கியது. சென்னை நாளைக்கொண்டாடும் கருத்து 2004இல் உருவாக்கப்பட்டது.

---

**8. உலக மூத்த குடிமக்கள் நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ) ஆகஸ்ட்.21 ☑**

ஆ) ஆகஸ்ட்.22

இ) ஆகஸ்ட்.24

ஈ) ஆகஸ்ட்.26



- ✓ வயோதிகர்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் மற்றும் மூத்தோருக்கான ஆதரவு, மரியாதை மற்றும் பாராட்டு மற்றும் அவர்களின் சாதனைகளை அங்கீகரிப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலக மூத்த குடிமக்கள் நாள், ஆகஸ்ட்.21 அன்று கொண்டாடப்படுகிறது. 1990 டிச.14 அன்று ஐநா பொது அவையால் இந்நாள் அறிவிக்கப்பட்டது.

---

**9. அண்மையில் காலமான O சந்திரசேகரன், ஒலிம்பிக் போட்டியில், இந்தியாவை எந்த விளையாட்டில் பிரதிநிதித்துவப்படுத்தினார்?**



அ) ஹாக்கி

ஆ) மல்யுத்தம்

இ) நீளந்தாண்டுதல்

**ஈ) கால்பந்து ☑**

✓ முன்னாள் இந்திய கால்பந்து வீரர் O சந்திரசேகரன் 2021 ஆகஸ்ட்.24 அன்று தனது 86ஆவது வயதில் கொச்சியில் காலமானார். 1960 ரோம் மற்றும் 1964 டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்ற இந்திய அணியில் சந்திரசேகரன் இருந்தார். 1962ஆம் ஆண்டு ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற இந்திய அணியின் உறுப்பினராகவும், அதே ஆண்டு டெல் அவிவில் நடைபெற்ற ஆசியக் கோப்பையில் வெள்ளியும் பெற்றார். 1963 சந்தோஷ் கோப்பையை வென்ற மகாராஷ்டிரா அணியின் கேப்டனாகவும் அவர் இருந்தார்.

---

**10. தொற்றுநோய் ஆசியா மற்றும் பசிபிக் முன்னேற்றத்தை அச்சுறுத்துகிறது எனக்குறிப்பிடும், "ஆசியா & பசிபிக் 2021'க்கான முக்கிய சுட்டிகள்" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?**

அ) உலக வங்கி

**ஆ) ஆசிய வளர்ச்சி வங்கி ☑**

இ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ) ஐநா வளர்ச்சித் திட்டம்

✓ ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒரு புதிய அறிக்கையின்படி, வளர்ந்துவரும் ஆசிய நாடுகளில், கடந்த ஆண்டை ஒப்பிடும்போது, தோராயமாக 75 முதல் 80 மில்லியனுக்கும் அதிகமான மக்களை COVID-19 தொற்று, தீவிர வறுமையில் தள்ளியுள்ளது. 'ஆசியா & பசிபிக்-2021க்கான முக்கிய சுட்டிகள்', COVID-19 தொற்று ஆசியாவை அச்சுறுத்துவதாகவும், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் முக்கியமான இலக்குகளை நோக்கி பசிபிக் முன்னேறுவதாகவும் கூறுகிறது. பசி, நலவாழ்வு மற்றும் கல்வி போன்றவற்றிலும் முன்னேற்றம் தடைபட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உச்சநீதிமன்றத்துக்கு 9 புதிய நீதிபதிகள் நியமனம்**

தலைமை நீதிபதி NV ரமணா தலைமையிலான கொலீஜியத்தின் பரிந்துரையை ஏற்று, உச்சநீதிமன்றத்துக்கு 9 புதிய நீதிபதிகளைக் குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் நியமித்துள்ளார்.

புதிய நீதிபதிகளில் ஒருவரான பி வி நாகரத்னா, வரும் 2027ஆம் ஆண்டில் நாட்டின் முதல் பெண் தலைமை நீதிபதியாகப் பணியாற்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது 10 நீதிபதி பதவியிடங்கள் காலியாக உள்ள நிலையில், 3 பெண்கள் உள்பட 9 பேரை புதிய நீதிபதிகளாக நியமிக்குமாறு தலைமை நீதிபதி NV ரமணா தலைமையிலான உச்ச நீதிமன்ற கொலீஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரைத்திருந்தது. அந்தப் பரிந்துரையை ஏற்ற மத்திய சட்டத்துறை அமைச்சகம், புதிய நீதிபதிகளின் நியமனத்தை உறுதிசெய்து அதிகாரபூர்வ அறிக்கையை வெளியிட்டது. அவர்களது நியமனக் கடிதத்தில் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் கையெழுத்திட்டார்.

அதன்படி, கர்நாடக உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அபய் ஸ்ரீநிவாஸ் ஒகா, குஜராத் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி விக்ரம் நாத், சிக்கிம் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஜிதேந்திர குமார் மகேஷ்வரி, கேரள உயர்நீதிமன்ற நீதிபதி சிடி ரவிகுமார், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எம் எம் சுந்தரேஷ் ஆகியோர் உச்சநீதிமன்றத்தின் புதிய நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். உச்சநீதிமன்றத்தின் புதிய நீதிபதிகளில் பி வி நாகரத்னா (கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி), ஹிமா கோலி (தெலங்கானா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி), பெலா எம் திரிவேதி (குஜராத் உயர்நீதிமன்ற நீதிபதி) ஆகியோர் பெண்கள் ஆவர்.

உச்சநீதிமன்றத்தில் தற்போது இந்திரா பானர்ஜி மட்டுமே பெண் நீதிபதியாக உள்ளார். புதிதாக மூன்று பெண் நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளதையடுத்து இந்த எண்ணிக்கை 4ஆக அதிகரிக்கும். உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதியையும் சேர்த்து 34 நீதிபதிகள் பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் பெண் தலைமை நீதிபதி வாய்ப்பு:**

உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாகும் வாய்ப்பு நீதிபதி பி வி நாகரத்னாவுக்கு ஏற்பட்டுள்ளது. அவர் 2027ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் சுமார் 1 மாதத்துக்குத் தலைமை நீதிபதியாகப் பணியாற்ற வாய்ப்புள்ளது.

**நீதிபதியாகும் வழக்குரைஞர்:**

மூத்த வழக்குரைஞரும் முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலுமான பி எஸ் நரசிம்மா உச்சநீதிமன்றத்தின் புதிய நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். வழக்குரைஞர் சங்கத்திலிருந்து உச்சநீதிமன்ற நீதிபதியாக நேரடியாக நியமனம் செய்யப்பட்டுள்ள 6ஆவது வழக்குரைஞர் இவர் ஆவார். நீதிபதி நாகரத்னாவின் ஓய்வுக்குப் பிறகு, அடுத்த தலைமை நீதிபதியாகும் வாய்ப்பு பி எஸ் நரசிம்மாவுக்கு உள்ளது. அவரது பதவிக்காலம் ஓராண்டுக்கும் அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது.

---

**2. கீழடி அகழாய்வில் தந்தத்தினாலான பகடை கண்டெடுப்பு**

கீழடியில் நடைபெற்றுவரும் 7ஆம் கட்ட அகழாய்வில், தந்தத்தில் செய்யப்பட்ட பகடை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக, தமிழக தொல்லியல் துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். சிவகங்கை மாவட்டம் கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய பகுதிகளில் 7ஆம்கட்ட அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக, அகரத்தில் 8 குழிகள், மணலூரில் 3 குழிகள், கொந்தகையில் 5 குழிகள், கீழடியில் 9 குழிகள் தோண்டப்பட்டுள்ளன.

இதில், சுடுமண் முத்திரை, உறை கிணறுகள், காதணிகள், முதுமக்கள் தாழி, கருப்பு சிவப்பு பானை ஓடுகள், பழங்கால மக்கள் பயன்படுத்திய பொருள்கள் என ஏராளமான தொல்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. இந்நிலையில், கீழடியில் நடைபெற்று வரும் அகழாய்வில் தந்தத்தினாலான பகடை அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

**இது குறித்து தொல்லியலாளர்கள் தெரிவித்தது:**

கீழடி உள்ளிட்ட 4 பகுதிகளில் செப்டம்பர் மாதம் வரை அகழாய்வுப் பணிகள் நடைபெறும். அதேநேரம், இந்த ஆய்வில் கண்டெடுக்கப்படும் தொல்பொருள்கள் அனைத்தும் ஆவணப்படுத்தும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கீழடி அகழாய்வில், தந்தத்தில் செய்யப்பட்ட அழகிய வேலைப்பாடு கொண்ட சதுர வடிவிலான பகடை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இப்பகடையில் ஒவ்வொரு பக்கத்தின் முகங்களும் ஒரு புள்ளியைச் சுற்றி 2 வட்டக் கீறல்கள் முத்திரையிடப்பட்டுள்ளன. மிக நேர்த்தியாக ஒன்றன் மேல் ஒன்றாக வரையப்பட்டுள்ள இப்பகடையானது, 4 புறமும் 1.5 செமீ அளவுடையதாகவும், 4 கி எடையுடையதாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், பழங்கால மக்கள் பொழுதுபோக்குக்காக பகடை ஆடும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டிருக்கலாம் என்றனர்.

---

**3. தமிழ்நாட்டில் பத்து புதிய அரசு கலை, அறிவியல் கல்லூரிகள்: அரசு அறிவிப்பு**

தமிழ்நாடு முழுவதும் 10 இடங்களில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. தமிழக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடரில் ஒவ்வொரு துறை வாரியாக மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. ஆக.26 அன்று உயர்கல்வி மற்றும் பள்ளிக்கல்வித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது.

இதில் உயர்கல்வித்துறை சார்பில் வெளியான அறிவிப்பு: "தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான உயர்கல்வி வழங்குவதற்கும், மாணவர் சேர்க்கை விகிதாச்சாரத்தை அதிகப்படுத்துவதற்கும், 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்குவதற்கும் வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்காணும் இடங்களில் புதிய கல்லூரிகள் தொடங்கப்படும்.

விருதுநகர் – **திருச்சுழி**, கள்ளக்குறிச்சி – **திருக்கோவிலூர்**, ஈரோடு – **தாளவாடி**, திண்டுக்கல் – **ஒட்டன்சத்திரம்**, திருநெல்வேலி – **மானூர்**, திருப்பூர் – **தாராபுரம்**, தருமபுரி – **ஏரியூர்**, புதுக்கோட்டை – **ஆலங்குடி**, வேலூர் – **சேர்க்காடு** ஆகிய இடங்களில் புதிய இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், திருவாரூர் – **கூத்தாநல்லூரில்** புதிய அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் தொடங்கப்படும்". இவ்வாறு உயர்கல்வித்துறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

**4. செப்.1 முதல் அனைத்து வாகனங்களுக்கும் 5 ஆண்டுகளுக்கான காப்பீடு கட்டாயம்: உயர்நீதிமன்றம் உத்தரவு**

செப்.1ஆம் தேதி முதல் விற்கப்படும் அனைத்து வாகனங்களுக்கும் 'பம்பர் டூ பம்பர்' என்ற அடிப்படையில் 5 ஆண்டுகளுக்குக் காப்பீடு செய்வதைக் கட்டாயமாக்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஒகேனக்கல்லில் கடந்த 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடந்த சாலை விபத்தில் மரணமடைந்த சடையப்பன் என்பவரின் குடும்பத்தினர், இழப்பீடு கேட்டு ஈரோடு மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த தீர்ப்பாயம், சடையப்பன் குடும்பத்துக்கு 14 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவு பிறப்பித்தது. இதை எதிர்த்து, 'நியூ இந்தியா அஷூரன்ஸ்' நிறுவனம், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. அந்த வழக்கை ஆக.26 அன்று நீதிபதி எஸ் வைத்தியநாதன் விசாரித்தார். வாகனத்திற்கான ஓட்டுநர் மற்றும் உரிமையாளர் என்ற அடிப்படையில் மட்டுமே வாகனத்துக்குக் காப்பீடு எடுக்கப்பட்டதாகவும், ஓட்டுநர் அல்லாத ஒருவர் இறப்புக்கு ஒரு லட்ச ரூபாய் மட்டுமே இழப்பீடு வழங்க முடியுமென காப்பீட்டு நிறுவனம் தெரிவித்தது.

சடையப்பன் வாகன ஓட்டுநராக அடையாளப்படுத்தப்பட்டு இருந்தாலும் விபத்து நடந்தபோது அவர் வாகனத்தை இயக்கவில்லை என்றும், அவர் சம்பளம் பெற்றதற்கான ஆதாரங்கள் இல்லை என்றும், காப்பீட்டு நிறுவனம் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இவற்றை ஏற்றுக்கொண்ட நீதிபதி வைத்தியநாதன், ஈரோடு தீர்ப்பாய உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டார். அதேசமயம் புதிய வாகனத்தை வாங்கும்போது அது எவ்வாறு செயல்படும் என்று தெரிந்துகொள்வதில் ஆர்வம் காட்டுபவர்கள், காப்பீடு நடைமுறைகளை முழுமையாகத் தெரிந்து கொள்வதில்லை என வேதனை தெரிவித்தார்.

வாகனங்கள் வாங்குபவர்களுக்கு காப்பீடு தொடர்பான விவரங்களை முழுமையாகத் தெரிவிப்பதில்லை என்று விற்பனையாளர்களைக் குற்றம் சாட்டினார். வரும் செப்டம்பர் 1–ம் தேதி முதல் விற்கப்படும் அனைத்துப் புதிய வாகனங்களுக்கும் பம்பர் டூ பம்பர் என்ற அடிப்படையில், வாகன உரிமையாளர், ஓட்டுநர், பயணி என அனைவரையும் உள்ளடக்கும் வகையில், ஐந்து ஆண்டுகளுக்குக் காப்பீடு செய்வதைக் கட்டாயமாக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக, காப்பீட்டு நிறுவனங்களுக்குத் தமிழக அரசின் போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார். நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றியது தொடர்பாக, செப்டம்பர் 30–ம் தேதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமெனவும் தமிழக அரசுக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

---

**5. காச நோய் தடுப்பு கூட்டுக் குழுவின் தலைவராக மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா பொறுப்பேற்பு**

மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சர் மன்சுக் மாண்டவியா, காசநோய் தடுப்பு குழுவின் தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டார். 2024ஆம் ஆண்டு வரை அமைச்சர் இந்த பொறுப்பை வகிப்பார். ஐக்கிய நாடுகளின் காசநோய் இலக்கை 2022ஆம் ஆண்டிற்குள் அடையவும், 2030ஆம் ஆண்டிற்குள் காசநோய்க்கு முற்றுப்புள்ளி வைக்கும் மைல் கல் தருணத்தை அடையவும், காசநோய் தடுப்பு கூட்டு செயலகம், கூட்டாளிகள் மற்றும் காசநோய் சமூகத்தின் முயற்சிகளை அவர் முன்னெடுத்துச் செல்வார்.

---

**6. அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட 4 நாடுகளின் மலபார் கூட்டு போர் பயிற்சி தொடங்கியது**

மலபார் கூட்டு போர் பயிற்சி, கடந்த 1992ஆம் ஆண்டு தொடங்கியது. அப்போது, அமெரிக்கா, இந்தியா ஆகிய இரு நாடுகளின் கடற்படைகள் மட்டும் பங்கேற்றன. பின்னர், ஜப்பானும், ஆஸ்திரேலியாவும் இதில் இணைந்தன. மேற்கண்ட 4 நாடுகளும் 'குவாட்' நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் நடக்கும் 'குவாட்' நாடுகளின் மலபார் கடற்படை கூட்டு போர் பயிற்சி தொடங்கியது. குவாட் நாட்டு கடற்பகுதியில் 4 நாட்களுக்கு இப்பயிற்சி நடக்கிறது.

இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதால், அது சுதந்திரமான, வெளிப்படையான பிராந்தியமாக நீடிக்கும்வகையில், 4 நாடுகளும் ஒத்துழைப்பை அளிப்பதற்காக, இந்த பயிற்சி நடக்கிறது. அமெரிக்க கடற்படை இதற்கு ஏற்பாடு செய்துள்ளது. இதில், 4 நாடுகளின் போர் கப்பல்கள், விமானங்கள், ஹெலிகாப்டர்கள் ஆகியவை பங்கேற்று சிக்கலான பயிற்சிகளில் ஈடுபடுகின்றன. இந்திய கடற்படை தனது ஐ என் எஸ் சிவாலிக் போர்க்கப்பல், நீர்மூழ்கி தகர்ப்பு கப்பலான ஐ என் எஸ் கட்மட், கடல்சார் உளவு விமானம் ஆகியவற்றை பயிற்சியில் பங்கேற்க வைத்துள்ளது.

---

**26–08–2021 – 'தமிழ்த்தென்றல்' திரு. வி. க'இன் 138ஆவது பிறந்தநாள்.**

---

**1.நுண்நிதி ஊக்கத்தொகை & நிவாரணத்திட்டத்தை அறிவித்துள்ள மாநிலம் எது?**

அ) புதுச்சேரி

ஆ) சிக்கிம்

**இ) அஸ்ஸாம் ☑**

ஈ) தெலுங்கானா




✓ அஸ்ஸாம் நுண்நிதி ஊக்கத்தொகை & நிவாரணத் திட்டம் (AMFIRS), 2021'ஐ செயல்படுத்துவதற்காக 37 நுண்நிதி நிறுவனங்களுடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அஸ்ஸாம் அரசு கையெழுத்திட்டுள்ளது. COVID-19 காலத்தில் நல்ல கடன் ஒழுக்கத்தை தொடர்ந்து பராமரிக்க உதவுவதற்காக, அஸ்ஸாமில் உள்ள நுண்கடன் வாங்குவோர்க்கு நிதி நிவாரணம் வழங்குவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் வாடிக்கையாளர்கள் தங்களின் கடனை, தொடர்ந்து திருப்பிச் செலுத்துவதில் ஊக்கமளிக்கும்.

---

**2. குஜராத்தில் உள்ள ஒரு தொகுதியில் இயற்கை எரிகாற்றைக் கண்டுபிடித்த நிறுவனம் எது?**

அ) ரிலையன்ஸ் பெட்ரோலியம்

**ஆ) வேதாந்தா ☑**

இ) இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்

ஈ) எண்ணெய் மற்றும் இயற்கை எரிகாற்று நிறுவனம்

✓ வேதாந்தா நிறுவனமானது குஜராத்தில் உள்ள ஒரு இயற்கை எரிவாயு தொகுதியை திறந்த ஏக்கர் உரிமக்கொள்கைமூலம் கண்டறிந்துள்ளது. இந்த வாயு மற்றும் செறிவு வயலை (ஜெயா) கண்டுபிடித்ததாக, DGH & பெட்ரோலியம் & இயற்கை எரிவாயு அமைச்சகத்திடம் அந்த நிறுவனம் தெரிவித்தது. இது குஜராத்தின் பருச் மாவட்டத்தில் உள்ள தொகுதியில் துளையிடப்பட்டு கண்டறியப்பட்டது.

---

**3. இந்தியாவின் முதல் புகைகோபுரம் திறக்கப்பட்டுள்ள நகரம் எது?**

அ) கொல்கத்தா

**ஆ) தில்லி ☑**

இ) மும்பை

ஈ) பெங்களூரு



✓ இந்தியாவின் முதல் புகை கோபுரத்தை தில்லியின் கன்னாட் இடத்தில் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் திறந்துவைத்தார். சோதனை முறையிலான இந்தத் திட்டம், வெற்றியடைந்தால், மேலும் பல புகை கோபுரங்கள் நிறுவப்படும். நகர்ப்புறப் பகுதிகளில் காற்று மாசுபாட்டைக் குறைத்து, காற்றினை தூய்மையாக்குகிறது. இந்த ஆய்வு ஐஐடி தில்லி மற்றும் ஐஐடி பம்பாயால் மேற்கொள்ளப்படும். இரண்டு நிறுவனங்களும் திட்டத்திற்கான தொழில்நுட்ப ஆலோசகர்களாக இருக்கும்.

---

**4. மணிப்பூரின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ) தமிழிசை சௌந்தரராஜன்

**ஆ) இல கணேசன் ☑**

இ) ஹரிஹரன் ராஜா சர்மா

ஈ) L முருகன்



✓ குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் ஆக.22 அன்று தமிழ்நாட்டின் மூத்த பாஜக தலைவர் இல கணேசனை மணிப்பூரின் புதிய ஆளுநராக நியமித்தார். இந்த மாத தொடக்கத்தில், நஜ்மா ஹெப்துல்லா ஓய்வுபெற்ற பிறகு, மணிப்பூர் ஆளுநர் பதவி காலியாகவே இருந்தது. ஆக.10 அன்று ஹெப்துல்லா ஓய்வு பெற்றார்; அதே நாளில், தற்காலிக பொறுப்பு, சிக்கிம் ஆளுநர் கங்கா பிரசாத்திடம் கொடுக்கப்பட்டது.

---

**5. புதைபடிவமற்ற எஃகு தயாரித்த உலகின் முதல் நாடு எது?**

அ) ஜெர்மனி

ஆ) இந்தியா

இ) ரஷ்யா

**ஈ) சுவீடன் ☑**



✓ பசுமை எஃகு என்றும் அழைக்கப்படும் புதைபடிவமற்ற எஃகு தயாரித்த உலகின் முதல் நாடு சுவீடன் ஆகும். இந்தப் பசுமை எஃகு HYBRIT தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முதல் விநியோகம் வோல்வோ AB'க்கு சோதனை முறையில் வழங்கப்பட்டுள்ளது. இந்த முயற்சி 2016ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் இருந்துவருகிறது. முழு அளவிலான உற்பத்தி 2026 முதல் தொடங்கும். இவ்வறிக்கைகளின்படி, கோக்கிங் நிலக்கரிக்கு மாற்றாக ஹைட்ரஜனை பயன்படுத்துவது, எஃகு தயாரிப்பில் இருந்து குறைந்தபட்சம் 90% உமிழ்வைக்குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**6. 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன்ஷிப்பில், பெண்கள் நீளந்தாண்டுதலில் வெள்ளி வென்றவர் யார்?**

அ) தீபிகா குமாரி

ஆ) பிரியங்கா கோஸ்வாமி

இ) சீமா புனியா

**ஈ) ஷைலி சிங் ☑**



✓ ஆக.22 அன்று நைரோபியில் நடந்த உலக தடகள 20 வயதுக்குட்பட்ட சாம்பியன்ஷிப் போட்டிகளில் 6.59 மீட்டர் பாய்ச்சலில் பெண்கள் நீளம் தாண்டுதலில் ஷைலி சிங் வெள்ளிவென்றார். சுவீடனின் மஜா அஸ்காக் (6.60 மீ) விட ஒரு சென்டிமீட்டர் குறைவாகப் பாய்ந்து அவர் தங்கத்தை இழந்தார். மும்முறைத் தாண்டலில் அஸ்காக் தங்கம் வென்றார். இந்த உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில், இந்தியா மூன்று பதக்கங்களுடன் (2 வெள்ளி மற்றும் 1 வெண்கலம்) போட்டியை நிறைவு செய்தது. எட்டு தங்கம் உட்பட 16 பதக்கங்களுடன் கென்யா முதலிடத்தில் உள்ளது.

---

**7. சாலைகளிலும் சீரற்ற நிலப்பரப்பிலும் பயன்படுத்தக்கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலியை வடிவமைத்துள்ள நிறுவனம் எது?**

அ) NITI ஆயோக்

**ஆ) ஐஐடி மெட்ராஸ் ☑**

இ) டிஆர்டிஓ

ஈ) ஐஐடி பம்பாய்



✓ இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (ஐஐடி) மெட்ராஸ் ஒரு மோட்டார் சக்கர நாற்காலியை வடிவமைத்துள்ளது. அதனை சாலைகளிலும் சீரற்ற நிலப் பரப்பிலும் பயன்படுத்தப்படலாம். 'நியோபோல்ட்' என்ற பெயரிலான மின் கலம்மூலம் இயக்கப்படும் இவ்வாகனம், மணிக்கு 25 கிமீ வேகத்தில் பயணிப்பதோடு ஒரு முறை முழு முன்னேற்றம் செய்தால் 25 கிமீ வரை செல்லும். இந்த வாகனம் 'நியோமோஷன்' என்ற துளிர்நிறுவனம்மூலம் வணிகமயமாக்கப்பட்டுள்ளது.

---

**8. இந்தியாவில் உள்ள குழந்தைகள் பருவநிலை நெருக்கடியால் அதிக ஆபத்திலுள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?**

**அ) UNICEF ☑**

ஆ) உலக வங்கி

இ) உலக நலவாழ்வு அமைப்பு

ஈ) NITI ஆயோக்

✓ யுனிசெப்பின் புதிய அறிக்கையின்படி, இந்தியாவில் உள்ள குழந்தைகள் பருவநிலை நெருக்கடியால் அதிக ஆபத்தில் உள்ளனர். இந்த அறிக்கையின்படி, குழந்தைகள் அதிகம் ஆபத்திலிருக்கும் 4 தெற்காசிய நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். காலநிலை மாற்றம் அவர்களின் உடல்நலம், கல்வி மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்துகிறது. பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய 4 தெற்காசிய நாடுகளின் குழந்தைகள் அதிக ஆபத்தில் உள்ளனர்.

✓ பாகிஸ்தான் 14ஆவது இடத்திலும், வங்கதேசம் 15ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 25ஆவது இடத்திலும், இந்தியா 26ஆவது இடத்திலும் உள்ளது. நேபாளம் 51ஆவது இடத்திலும், இலங்கை 61ஆம் இடத்திலும், பூடான் 111ஆவது இடத்திலும் உள்ளன.

✓ வரவிருக்கும் ஆண்டுகளில், இந்தியர்கள் 'கடுமையான தண்ணீர் பற்றாக்குறையை' சந்திக்க நேரிடும். அதே நேரத்தில், உலகளாவிய வெப்பநிலை 2° செல்சியஸாக அதிகரித்தபின் இந்தியாவின் நகர்ப் புறங்களில் திடீர் வெள்ளப்பெருக்கும் கணிசமாக அதிகரிக்கும். மேலும், கடந்த 2020'இல், உலகின் மாசுபட்ட காற்று உள்ள 30 நகரங்களில் 21

நகரங்கள் இந்தியாவில் இருந்தன. இந்த கண்டுபிடிப்புகள் யுனிசெப்பின் "The Climate Crisis Is a Child Rights Crisis: Introducing the Children's Climate Risk Index (CCRI)" என்ற அறிக்கையில் வெளியிடப்பட்டன. CCRI என்பது குழந்தைகள்மீது கவனம் செலுத்தி வெளிவந்த யுனிசெப்பின் முதல் அறிக்கையாகும்.

**9. வேளாண்சார்ந்த துறைகளுக்கு கடன்வசதியுடன்கூடிய இரு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ள மாநிலம் எது?**

அ) சிக்கிம்

ஆ) மணிப்பூர்

**இ) அருணாச்சல பிரதேசம் ☑**

ஈ) நாகாலாந்து



- ✓ அருணாச்சல பிரதேச மாநில அமைச்சரவையானது கடன்வசதியுடன் கூடிய இரண்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அது விவசாயம் சார்ந்த துறைகளில் ₹300 கோடி அளவுக்கு முதலீடு செய்ய உதவும்.
- ✓ 2021-22 நிதியாண்டில் விவசாயத்திற்காக ஆத்மநிர்பார் கிருஷி திட்டம் & தோட்டக்கலைக்காக ஆத்ம நிர்பார் பக்வானி திட்டம் ஆகியவற்றுக்கு மாநில அரசு தலா ₹60 கோடி மானியங்களை ஒதுக்கியுள்ளது. கடன் வசதியுடன் கூடிய இத்திட்டங்கள் 3 கூறுகளைக்கொண்டிருக்கும்.
- ✓ அவை வங்கி கடன்கள், மானியம் மற்றும் பயனாளிகளின் பங்களிப்பு ஆகும். உழவர்கள், சுய-உதவிக் குழுக்கள் & உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு இந்தத் திட்டங்கள் கிடைக்கும்.

**10.** **COVID தொற்றின் காரணமாக கணவனை இழந்த மகளிர்க்கு உதவுவதற்காக, "மிஷன் வத்சல்யா" என்ற சிறப்புத் திட்டத்தை தொடங்கியுள்ள மாநிலம் எது?**

**அ) மகாராஷ்டிரா ☑**

ஆ) கேரளா

இ) தில்லி

ஈ) ஜார்க்கண்ட்



- ✓ மகாராஷ்டிரா மாநில அரசு COVID-19 நோயால் கணவனை இழந்த பெண்களுக்கு உதவுவதற்காக, "மிஷன் வத்சல்யா" என்ற சிறப்புத் திட்டத்தைத் தொடங்கியது. இந்தத் திட்டம் அதுபோன்ற பெண்களுக்கு பல சேவைகள் மற்றும் 18 நன்மைகளை ஒரே கூரையின்கீழ் வழங்கும். இது கைம்பெண்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ், சஞ்சை காந்தி நிரதர் யோஜனா மற்றும் கர்குல் யோஜனா போன்ற திட்டங்கள் பெண்களுக்கு பயனளிக்கும். இத்திட்டம் மகளிர் & குழந்தைகள் மேம்பாட்டுத்துறையால் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உள்ளூர் பிரிவு அலுவலர்கள் அந்தப் பெண்களுக்கு சேவைகளை வழங்குவதற்காக அவர்களின் வீடுகளுக்கே செல்வர்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. முகாம் வாழ் இலங்கைத் தமிழர் மேம்பாடுக்கு ரூ.317 கோடியில் 10 புதிய நல திட்டங்கள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு**

முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் மேம்பாட்டுக்காக ரூ.317 கோடியில் பத்து புதிய நலத் திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின், வெள்ளிக்கிழமை அறிவித்தார். சட்டப் பேரவையில் விதி 110-ன் கீழ் அவர் புதிய அறிவிப்புகளைச் செய்தார். இதுகுறித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் படித்தளித்த அறிக்கை:

1983-ஆம் ஆண்டு முதல் இதுவரை 3 லட்சத்து 4 ஆயிரத்து 269 இலங்கைத் தமிழர்கள் தமிழகத்துக்கு வந்துள்ளனர். அவர்களில் 18 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சேர்ந்த 58 ஆயிரத்து 822 பேர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் 29 மாவட்டங்களில் அமைந்துள்ள 108 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 13,540 குடும்பங்களைச் சேர்ந்த 34,087 பேர் காவல் நிலையங்களில் பதிவு செய்து, வெளிப் பதிவில் வசித்து வருகிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக இலங்கைத் தமிழர்களின் முகாம்களில் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி இருப்பது தெரிய வந்துள்ளது. இதன்படி நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் புதிய அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன.

1. இலங்கைத் தமிழர்களின் முகாம்களில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 7,469 வீடுகள் ரூ.231.54 கோடியில் புதிதாகக் கட்டித் தரப்படும். இதில் முதல்கட்டமாக 3,510 புதிய வீடுகள் கட்ட நிகழாண்டில் ரூ.108.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. முகாம்களில் உள்ள மின்வசதி, கழிப்பிட வசதி, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்திட ரூ.30 கோடி ஒதுக்கப்படும். இதைத் தவிர, ஆண்டுதோறும் இதுபோன்ற வசதிகளைச் செய்துதர இலங்கைத் தமிழர் வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதியாக ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை ஏற்கெனவே அளிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகை உயர்த்தப்படும். அதன்படி, பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி (பாலிடெக்னிக்) படிப்புக்கு ரூ.10 ஆயிரம், இளநிலை கலை மற்றும் அறிவியல் படிப்புக்கு ரூ.12 ஆயிரம், இளநிலை தொழில்சார்ந்த படிப்புகளுக்கு ரூ.20 ஆயிரம் அளிக்கப்படும். இதற்காக ரூ.1.25 கோடி ஒதுக்கப்படும்.

4. முகாம் வாழ் இலங்கைத் தமிழ் இளைஞர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்த பயிற்சி அளிக்கப்படும். ஐந்தாயிரம் இளைஞர்களின் பயிற்சிக்கு ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. முகாம்களில் உள்ள 300 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதியாக ஒவ்வொரு குழுவுக்கும் தலா ரூ.1.25 லட்சம் அளிக்கப்படும். கடந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 321 குழுக்களுக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்ட தொகையுடன் ரூ.75 ஆயிரம் கூடுதலாக வழங்கப்படும்.

6. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகை இனி குடும்பத் தலைவருக்கு ரூ.1,500 ஆகவும், இதர பெரியவர்களுக்கு ஆயிரம் ரூபாயாகவும், 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ரூ.500 ஆகவும் உயர்த்தி அளிக்கப்படும்.

7. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு விலையில்லாத எரிவாயு இணைப்பு, இலவச அடுப்பு அளிக்கப்படும். மேலும், குடும்பத்துக்கு 5 எரிவாயு உருளைக்குத் தலா ரூ.400 வீதம் மானியம் அளிக்கப்படும். முகாம் வாழ் தமிழர்களுக்கு கிலோ 57 பைசா வீதம் மாதந்தோறும் 20 கிலோ அரிசி தற்போது வழங்கப்படுகிறது. இனி அரிசி விலையில்லாமல் அளிக்கப்படும்.

8. கோ-ஆப்டெக்ஸ் மூலம் ஆடைகளும், போர்வைகளும் வழங்கும் திட்டத்துக்கான தொகை குடும்பத்துக்கு ரூ.3,473 ஆக உயர்த்தி அளிக்கப்படும்.

9. முகாம் வாழ் தமிழர்களுக்கு ரூ.1,296 விலையில் சமையல் பாத்திரங்கள் வழங்கப்படும். மொத்தமாக இலங்கைத் தமிழர்களின் மேம்பாட்டுக்கென ரூ.317.40 கோடி மதிப்பில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

**இலங்கைத் தமிழர் நலன் காக்க ஆலோசனைக் குழு**

தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்கள் நலன்களைக் காத்திடவும், உரிய ஆலோசனைகளை வழங்கிடவும் தனியாக குழு அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இதுகுறித்து, பேரவை 110-ன் கீழ் அவர் வெளியிட்ட அறிவிப்பு:

முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள், வெளிப்பதிவில் உள்ளவர்களுக்கு உரிய உதவிகள் அளிக்கவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், குடியுரிமை வழங்குதல், அவர்களில் இலங்கை திரும்பும் அகதிகளுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தல் போன்ற நீண்டகாலத் தீர்வை கண்டறிந்திட ஆலோசனைக் குழு அமைக்கப்படும்.

இந்தக் குழுவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டப் பேரவை உறுப்பினர் தலா ஒருவர், பொதுத் துறைச் செயலாளர், மறுவாழ்வுத் துறை இயக்குநர், பிற அரசு உயர் அலுவலர்கள், அரசு சாரா உறுப்பினர்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழர் பிரதிநிதி, வெளிப்பதிவில் வசிக்கக் கூடிய அகதிகளுக்கான பிரதிநிதி ஆகியோர் இடம்பெற்றிருப்பர் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

**2. தமிழக ஆளுநருக்கு கூடுதல் பொறுப்பு**

தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்துக்கு பஞ்சாப் மாநில ஆளுநராகவும், சண்டீகர் யூனியன் பிரதேச நிர்வாகியாகவும் கூடுதல் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான உத்தரவை குடியரசுத்

தலைவர் ராம்நாத் கோவிந்த் வெள்ளிக்கிழமை பிறப்பித்துள்ளார். இதுதொடர்பாக குடியரசுத் தலைவர் மாளிகை அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்துக்கு பஞ்சாப் மாநில ஆளுநர் பொறுப்பு கூடுதலாக அளிக்கப்படுகிறது. பஞ்சாப் ஆளுநர் பணியிடத்துக்கு முறையான மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் வரை, அம்மாநில ஆளுநர் பணிகளை தமிழக ஆளுநர் கூடுதலாக கவனிப்பார். மேலும், சண்டீகர் யூனியன் பிரதேச நிர்வாகியாகவும் பன்வாரிலால் புரோஹித் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, பஞ்சாப் மாநில ஆளுநராகவும், சண்டீகர் நிர்வாகியாகவும் வி.பி.சிங் பத்னோர் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 1940 ஆம் ஆண்டு பிறந்த பன்வாரிலால் புரோஹித், தமிழகத்தின் 14-வது ஆளுநராக, 2017-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பொறுப்பேற்றார். அதற்கு முன்பு அவர் அஸ்ஸாம் மாநில ஆளுநராகப் பதவி வகித்தார். முன்னதாக, மகாராஷ்டிர மாநிலம், நாகபுரி மக்களவை தொகுதியிலிருந்து இரு முறை காங்கிரஸ் சார்பாகவும், ஒருமுறை பாஜக சார்பாகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

**3. அதிக கண்காணிப்பு கேமரா உள்ள நகரங்கள்: உலகளவில் மூன்றாமிடத்தை பிடித்த சென்னை**

உலகம் முழுவதும் அதிக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்ட நகரங்களில், சென்னை மூன்றாமிடத்தை பிடித்துள்ளது. சென்னை பெருநகரத்தின் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் காவல்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் விளைவாக கடந்த 2017ஆம் ஆண்டு முதல் குற்றத் தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், வழிபாட்டு தலங்கள், மார்க்கெட்டுகள், பொதுஇடங்கள், சாலைகள், தெருக்கள் ஆகியவற்றில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு வருகிறது.

இதில் தனியார் நிறுவனங்கள், பொதுமக்கள் பங்களிப்புடன் நகர் முழுவதும் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு வருகின்றன. 'மூன்றாவது கண்' என்ற பெயரில் பொதுமக்களிடம் கண்காணிப்பு கேமரா பொருத்தும்படி காவல்துறை தீவிர விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட்டது. இதன் காரணமாக 50 மீட்டருக்கு ஒரு கேமரா உள்ளது. இதன் அடுத்த இலக்காக 25 மீட்டருக்கு ஒரு கேமரா பொருத்தும் பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர். நான்கு ஆண்டுகளாக காவல்துறை எடுத்து வரும் நடவடிக்கையின் காரணமாக, சென்னையில் இப்போது 2.60 லட்சம் கண்காணிப்பு கேமராக்கள் உள்ளன. நகர் முழுவதும் கண்காணிப்பு கேமராக்களின் பார்வை பரந்து, விரிந்து இருப்பதினால் தங்கச் சங்கிலி பறிப்பு 48 சதவீதம்,கொள்ளை 24 சதவீதம்,அடிதடி 11 சதவீதம், குறைந்துள்ளதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இதேபோல செல்லிடப்பேசி பறிப்பும் பெருமளவு குறைந்துள்ளதாக கூறப்படுகிறது.

அதேபோல காவல்துறையின் பணிச்சுமையையும் பெருமளவில் கண்காணிப்பு கேமரா குறைத்துள்ளது. முக்கியமாக 80 சதவீதத்துக்கும் மேற்பட்ட குற்ற வழக்குகளில் துப்பு துலக்குவதற்கு கண்காணிப்பு கேமராவே உதவுவதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

**மூன்றாவது நகரம்:** இந்நிலையில் 'போர்ஃபஸ் இந்தியா ' நிறுவனம் உலகம் முழுவதும் அதிக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்ட 20 நகரங்கள் குறித்த பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் தில்லி, லண்டன், சென்னை ஆகியவை முதல் 3 இடங்களை பிடித்துள்ளன மேலும் இப் பட்டியலில் இந்தியாவில் தில்லி, சென்னை, மும்பை ஆகிய 3 நகரங்கள் மட்டுமே இடம் பிடித்துள்ளன. உலகளவில் அதிகளவில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்ட நகரங்களில் முதலிடத்தை பிடித்திருக்கும் தில்லியில் 2.5 சதுர கிலோ மீட்டருக்கு 1,826 கண்காணிப்பு கேமராக்கள் இருப்பதாகவும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

இரண்டாமிடத்தில் இருக்கும் லண்டனில் 2.5 சதுர கிலோ மீட்டருக்கு 1,138 கண்காணிப்பு கேமராக்களும், மூன்றாமிடத்தை பிடித்திருக்கும் சென்னையில் 2.5 சதுர கிலோ மீட்டருக்கு 609 கண்காணிப்பு கேமராக்கள் இருப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தப் பட்டியலில் மும்பை 18ஆவது இடத்தில் உள்ளது.

இந்த நகரத்தில்.2.5 சதுர கிலோ மீட்டருக்கு 157 கண்காணிப்பு கேமராக்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகளவில் அதிக கண்காணிப்பு கேமராக்கள் உள்ள நகரங்களில் சென்னை மூன்றாமிடத்தை பிடித்திருப்பது, சென்னை பெருநகர காவல்துறையினரிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

---

**4. எல்ஐசியின் 'ஆனந்தா' செயலி அறிமுகம்**

எல்ஐசி நிறுவன முகவர்களுக்கான 'ஆனந்தா' என்ற செல்லிடப்பேசி செயலி அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டது. எல்ஐசியின் தலைவர் எம்.ஆர்.குமார், மேலாண்மை இயக்குநர்கள் முகேஷ் குமார் குப்தா, ராஜ்குமார், சித்தார்த்தா மொஹந்தி மற்றும் மூத்த அதிகாரிகள் முன்னிலையில் காணொலி வாயிலாக இந்த செயலி அறிமுகம் செய்யப்பட்டது. இந்தச் செயலி மூலம் முகவர் அல்லது புது வணிகம் சார்ந்தோர் மூலமாக ஆயுள் காப்பீட்டு முன்மொழிவாளரின் ஆதார் மூலம் கே.ஒய்.சியின் அங்கீகாரம் பெற்று ஆயுள் காப்பீட்டைப் பெற முடியும். இதன் மூலம் வாடிக்கையாளர்களை முகவர்களால் தொடர்பு கொள்ளவும் முடியும். மேலும் இதில் தொடக்கம் முதல் முடிவு வரை ஆயுள் காப்பீடு பெறுவது குறித்த விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது.

---

**5. 3 மாவட்டங்களில் புதிய வேளாண்மைக் கல்லூரிகள்: அரசு அறிவிப்பு**

3 மாவட்டங்களில் புதிய வேளாண்மைக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார். தமிழக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் தொடரில் ஒவ்வொரு துறை வாரியாக மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. இன்று (ஆக.28) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது.

**இதில் வேளாண் துறை சார்பில் வெளியான அறிவிப்பு:**

"வேளாண் கல்வியின் முக்கியத்துவம் கருதி, கரூர் மாவட்டம், நாகப்பட்டினம் (கீழ்வேளூர்), சிவகங்கை (செட்டிநாடு) ஆகிய மூன்று மாவட்டங்களில் ரூ.30 கோடி மதிப்பில் அரசு வேளாண்மைக் கல்லூரிகள் தொடங்கப்படும். தற்போது, வேளாண் கல்வி மற்றும் வேளாண் ஆராய்ச்சியின் தேவை அதிகரித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண் நிதிநிலை அறிக்கையில் கிருஷ்ணகிரியில் புதியதாக அரசுத் தோட்டக்கலைக் கல்லூரி தொடங்க அறிவிக்கப்பட்டது.

வேளாண் கல்வியின் முக்கியத்துவம் கருதி, 2021-2022ஆம் ஆண்டில், கரூர் மாவட்டம், நாகப்படினம் மாவட்டத்தில் கீழ்வேளூர், சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாடு ஆகிய இடங்களில் மூன்று புதிய அரசு வேளாண்மைக் கல்லூரிகள் தொடங்குவதற்கு மாநில அரசு தலா ரூ.10 கோடி வீதம் மொத்தம் ரூ.30 கோடி நிதியை ஒதுக்கும்". இவ்வாறு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அறிவித்துள்ளது.

---

**6. அகதிகள் முகாமை மறுவாழ்வு முகாம் என பெயர் மாற்றம்: அரசாணை வெளியீடு**

இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம் என்பது இனி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்கள் என அழைப்பதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. வேளாண்மை, கால்நடை, மீன்-பால் வளத் துறைகள் மானியக் கோரிக்கை மீது சனிக்கிழமை நடைபெற்ற விவாதத்தின் போது முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், இலங்கை அகதிகள் முகாம் இனி, இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என அழைக்கப்படும். ஏனென்றால் அவர்கள் ஆதரவற்றவர்கள் அல்ல. நாம் அவர்களுக்குத் துணையாக இருக்கிறோம். அந்த உணர்வுடன் அகதிகள் முகாம் என்று அழைக்காமல் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்று அழைக்க அரசு ஆணையிட்டுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்நிலையில், இலங்கை தமிழர் அகதிகள் முகாம், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்கள் என அழைப்பதற்கான பெயர் மாற்றத்திற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் பழுதடைந்துள்ள 7469 வீடுகளை கட்டித்தரவும், குடிநீர் வசதி மற்றும் சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் ரூ.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் வாழ்க்கை தரம் மேம்பாடு நிதியாக ரூ.5 கோடி, 300 சுய உதவிக்குழுக்களுக்கு சுழல்நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.6.16 கோடி, விலையில்லா எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு உருளை மானியத்திற்காக ரூ.10.50 கோடி ஒதுக்கீடு, கல்வி உதவித் தொகை, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, குடிநீர் வசதி, சாலை வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் என ரூ. 317 கோடிக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

### 7. 'BH' தொடா் வாகனப் பதிவெண் முறை அறிமுகம்

பணி நிமித்தமாக வெவ்வேறு மாநிலங்களில் அடிக்கடி குடிபெயா்வோா் தங்கள் வாகனங்களுக்கு 'பிஹெச்' தொடரில் அமைந்த பதிவெண் முறையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. வாகனங்கள் பதிவு செய்யப்படும் மாநிலங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றுக்கான எண்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசு அதிகாரிகள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்டவற்றில் பணியாற்றுவோா் பணி நிமித்தமாக அடிக்கடி வேறு மாநிலங்களுக்கு இடம்பெயர வேண்டிய நிலைமை உள்ளது.

அவ்வாறான சூழலில், இடம்பெயரும் மாநிலத்துக்குச் சென்ற ஓராண்டுக்குள் சம்பந்தப்பட்ட மாநிலத்தில் வரி செலுத்தி புதிய வாகனப் பதிவெண்ணைப் பெற வேண்டிய கட்டாயம் உள்ளது. வாகனத்தை வேறு மாநிலத்தில் மறுபதிவு செய்வதற்கு ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட மாநிலத்தில் இருந்து தடையில்லாச் சான்று பெற்று வழங்க வேண்டியுள்ளது.

இந்த நடைமுறையை எளிதாக்கும் நோக்கில், 'பிஹெச்' என்ற பாரத் தொடா் அடிப்படையிலான வாகனப் பதிவெண்களை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றுக்கு இடையே அடிக்கடி குடிபெயா்வோா் தங்கள் வாகனங்களுக்கு 'பிஹெச்' தொடா் அடிப்படையிலான பதிவெண்ணைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த முறையில், வாகனம் முதலில் பதிவு செய்யப்படும் ஆண்டு (இரு இலக்கம்)–பிஹெச்–வாகனத்துக்கான 4 இலக்க எண்–இரு ஆங்கில எழுத்துகள் என்ற வரிசையில் வாகனப் பதிவெண் அமையும் என்று மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இத்தகைய பதிவெண்ணைக் கொண்ட வாகனங்கள் மாநிலங்களுக்கிடையே எளிதில் குடிபெயர முடியும் என்று அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'பிஹெச்' தொடா் அடிப்படையில் பதிவு செய்வதற்கு, வாகனத்தின் விலையைப் பொருத்து 8 முதல் 12 சதவீதம் வரை வரி விதிக்கப்படும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. டீசலை எரிபொருளாகப் பயன்படுத்தும் வாகனங்களுக்குக் கூடுதலாக 2 சதவீத வரியும், மின்சார வாகனங்களுக்கு 2 சதவீதம் குறைவான வரியும் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய வாகனப் பதிவெண் முறை செப்டம்பா் 15–ஆம் தேதி முதல் அமல்படுத்தப்படவுள்ளது.

### 8. தஞ்சாவூரில் ரூ.25 கோடியில் கால்நடை தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை

தஞ்சாவூா் மாவட்டம் புதுக்குடியில் ரூ.25 கோடியில் கால்நடை தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படும் என்று பால்வளத்துறை அமைச்சா் சா.மு.நாசா் அறிவித்தாா். சட்டப்பேரவையில் பால்வளத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சா் சா.மு.நாசா் வெளியிட்ட அறிவிப்பு: தற்போது மாதம் ஒன்றுக்கு 10 ஆயிரம் மெட்ரிக் டன் கால்நடை தீவனம் கொள்முதல் செய்யப்பட்டு பால் உற்பத்தியாளா்களுக்கு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளா்கள் ஒன்றியங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இதில், ஈரோட்டில் உள்ள கால்நடை தீவன ஆலையிலிருந்து 3,500 மெட்ரிக் டன் கால்நடை தீவனமும், இதர கூட்டுறவு அமைப்புகளின் மூலம் 6,500 மெட்ரிக் டன் கால்நடை தீவனமும் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

தஞ்சாவூா், புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, திண்டுக்கல் மற்றும் இதர மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளா்கள் ஒன்றிய பால் உற்பத்தியாளா்கள் பயன்பெறும் வகையில் தஞ்சாவூா் மாவட்டம் புதுக்குடியில் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தித் திறனில் கால்நடை தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை ரூ.25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். சேலம் பால் பண்ணையில் நாளொன்றுக்கு 2 மெட்ரிக் டன் அளவில் நீட்டிக்கப்பட்ட காலக்கெடுவுடன் கூடிய இனிப்பு இல்லாத பால்கோவா தயாரிக்கும் நவீன மற்றும் தொடா்ச்சியான உற்பத்திக்கான இயந்திரங்களுடன் கூடிய அலகு ரூ.8 கோடி மதிப்பில் நிறுவப்படும்.

பால் பொருள்கள், சிப்பம் கட்டும் பொருள்கள் மற்றும் மூலப் பொருள்களுக்கான ஆய்வுக்கூடம், ஆராய்ச்சி மற்றும் உருவாக்கம் மற்றும் நுண்ணுயிரியல் பகுப்பாய்வுக்கான ஆய்வுக்கூடம் ஆகியன அம்பத்தூா் பால்பண்ணையில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். தொடக்க பால் உற்பத்தியாளா்கள் கூட்டுறவு சங்கத்துக்கு பால் வழங்கும் பால் உற்பத்தியாளா்கள் பயன்பெறும் வகையில் அவா்கள் வழங்கும் பாலினை பகுப்பாய்வு செய்து, உடனே பாலின் தரம் மற்றும் பாலின் மதிப்புக்கு ரசீது வழங்க 453 பால் பகுப்பாய்வு கருவிகள் ரூ.2.26 கோடி மதிப்பில் வழங்கப்படும்.

**கால்நடைகளுக்கு அவசர சிகிச்சை:** கூட்டுறவு பால் உற்பத்தியாளா் சங்கங்களில் பால் வழங்குகின்ற, பால் உற்பத்தியாளா்களுடைய கறவை மாடுகளுக்கு இலவச சிகிச்சை இனப்பெருக்க வசதி மற்றும் அவா்களுக்கு தூய முறையில் பால் உற்பத்தி பயிற்சி, சமச்சீா் தீவனம், தாது உப்புக் கலவை, பசுந்தீவனத்தின் முக்கியத்துவம் மற்றும் கறவை மாடுகள் பராமரிப்பு பற்றிய ஆலோசனைகள் ஆகியன வழங்குவதற்காக கால்நடை மருத்துவ வழித்தடங்களில் 162 கால்நடை மருத்துவ ஆலோசகா்களை ரூ.6.80 கோடி திட்டமதிப்பில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றாா்.

### 9. கரூா், நாகப்பட்டினம், சிவகங்கையில் வேளாண்மை கல்லூரிகள்

கரூா், நாகப்பட்டினம், சிவகங்கை ஆகிய இடங்களில் 3 புதிய அரசு வேளாண்மை கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அத்துறையின் அமைச்சா் எம்.ஆா்.கே.பன்னீா்செல்வம் அறிவித்தாா். வேளாண் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சா் எம்.ஆா்.கே.பன்னீா்செல்வம் வெளியிட்ட அறிவிப்புகள்: வேளாண் கல்வியின் முக்கியத்துவம் கருதி 2021–22–இல் கரூா் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூா், சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாடு ஆகிய இடங்களில் 3 புதிய அரசு வேளாண்மை கல்லூரிகள் துவங்குவதற்கு மாநில அரசு தலா ரூ.10 கோடி வீதம் மொத்தம் ரூ.30 கோடி நிதியினை ஒதுக்கும்.

அரியலூா், செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், ராமநாதபுரம், புதுக்கோட்டை, தேனி, விருதுநகா் ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள 200 ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளின் நலன்களுக்காக தமிழக வரலாற்றில் முதல்முறையாக 2021–22–இல் நிலத்தடி நீா் பாதுகாப்பான குறுவட்டங்களின் ஆழ்துளை அல்லது குழாய் கிணறுகள் அமைத்து மின்வசதியுடன் மின்மோட்டாா் பொருத்தி, நுண்ணீா் பாசன வசதிகள் 100 சதவீத மானியத்தில் மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.12 கோடி நிதி செலவிடப்படும். உழவா் உற்பத்தியாளா் நிறுவனங்களின் பொருள்களைச் சந்தைப்படுத்த சென்னை, கோயம்புத்தூா், மதுரை, திருச்சி, சேலம் மாநகராட்சி பகுதிகளில் ரூ.8 கோடி செலவில் 50 சிறப்பு அங்காடிகள் அமைக்கப்படும்.

வேளாண் விளைபொருள்களைச் சேமிக்க விவசாயிகளுக்கு உதவும் வகையில் திருப்பூா் பூளவாடி, புதுக்கோட்டை சிதம்பரவிடுதி, நாமக்கல் எருமைப்பட்டி, ஈரோடு பா்கூா் ஆகிய இடங்களில் 250 மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள சேமிப்புக் கிடங்குகள் ரூ.2 கோடி செலவில் கட்டப்படும்.

**நெய்தல் பூங்கா:** 2021–22–இல் நாகூரில் நெய்தல் பாரம்பரிய பூங்கா 3.06 ஹெக்டேரில் ரூ.2 கோடி நிதியில் மீன்வளம் மற்றும் மீனவ நலத்துறையின் ஒருங்கிணைப்புடன் அமைக்கப்படும். இது இளம் தலைமுறையினருக்கு பண்டைய தமிழா்களின் பண்பாட்டை எடுத்துரைக்கும் வகையில் செயல்படும்.

2021–22–இல் 100 பெண் விவசாயிகளுக்கு, ஒருவருக்கு ரூ.1 லட்சம் என்கிற விகிதத்தில் குடிசை தொழிலாக குறைந்த பரப்பிலான காளான் உற்பத்திக்கூடம் அமைத்திட மானியம் வழங்க மகளிா் திட்டத்துடன் இணைந்து ரூ.1 கோடி செலவிடப்படும். நிலமில்லாத விவசாயத் தொழிலாளா்களை தொழில் முனைவோா்களாக உருவாக்கும் வகையில் 2021–22–இல் 1,077 நபா்களுக்கு 6 மாத கால உறைவிடத் தோட்ட தொழில்நுட்பவியலாளா் பயிற்சி ரூ.1.77 கோடி நிதியிலும், 3 ஆயிரம் நபா்களுக்கு பூங்கொத்து, பூ அலங்காரம் செய்தல், நுண்ணீா் பாசன அமைப்புகள் நிறுவுதல் மற்றும் பராமரித்தல், தேனீ வளா்ப்பு குறித்த 30 நாள் பயிற்சிகள் ரூ.1.69 கோடி நிதியிலும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் வழங்கப்படும். இந்தப் பயிற்சியில் பெண் தொழிலாளா்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வேளாண் பொறியியல் பட்டயப் படிப்பு:** வேளாண் இயந்திரங்கள் தொடா்பான அடிப்படை கல்வியினை பரவலாக்கும் வகையில் 2021–22–இல் திருச்சி குமுளூா் வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 2 ஆண்டு வேளாண்மை பொறியியல் பட்டயப் படிப்பு ரூ.1 கோடி நிதியில் தொடங்கப்படும். இந்தப் படிப்பில் ஆண்டுக்கு 40 மாணவா்கள் அனுமதிக்கப்படுவா். இதன் மூலம் கிராமப்புற மாணவா்களுக்கான வேலைவாய்ப்பு உயரும் என்பதுடன் விவசாயிகளின் வேளாண் இயந்திரங்களை அவரவா் பகுதியிலேயே பழுதுபாா்க்க இயலும்.

திருப்பூரில் விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு துறை சார்பில் 2021–22–இல் புதிதாக விதை பரிசோதனை நிலையம் அமைக்கப்படும். 2021–22–இல் கோயம்புத்தூரில் இயங்கி வரும் விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு துறையின் தலைமை அலுவலகம் மாநிலத்தின் தலைநகரான சென்னைக்கு மாற்றப்படும் என்றார்.

**10. 34 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் 'ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை' திட்டம்**

நாட்டில் உள்ள 34 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 'ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை' திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தகுதியான குடும்பங்களுக்கு நியாய விலைக் கடைகள் வாயிலாக மானிய விலையில் உணவு தானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஒவ்வொரு மாநிலமும் குடும்ப அட்டைகளை விநியோகித்து வருகின்றன. அந்த அட்டைகளைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட மாநிலத்தில் மட்டுமே உணவு தானியங்களைப் பெறும் சூழல் நிலவி வந்தது. இந்நிலையில், குடும்ப அட்டைகளைப் பெற்ற புலம்பெயர் தொழிலாளர்கள் உள்ளிட்டோர் நாட்டில் உள்ள எந்த நியாய விலைக் கடையிலும் உணவு தானியங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் 'ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை' திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.

இத்திட்டத்தில் இதுவரை 34 மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் இணைந்துள்ளதாக மத்திய உணவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேற்கு வங்கம் ஆகஸ்டிலும், தில்லி கடந்த ஜூலையிலும் இத்திட்டத்தை அமல்படுத்தின. அஸ்ஸாம், சத்தீஸ்கர் மாநிலங்கள் மட்டும் இத்திட்டத்தை இன்னும் செயல்படுத்தவில்லை. விரைவில் அவ்விரு மாநிலங்களும் 'ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை' திட்டத்தைச் செயல்படுத்தும் என்று மத்திய அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் சராசரியாக 2.2 கோடி குடும்ப அட்டைதாரர்கள் பலனடைந்து வருகின்றனர். கடந்த 2019–ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் இத்திட்டத்தின் கீழ் சுமார் 40 கோடி முறை உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பிகார் (10.14 கோடி முறை), ஆந்திரம் (6.92 கோடி முறை), ராஜஸ்தான் (4.56 கோடி முறை) ஆகிய மாநிலங்களில் அதிக முறை உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. குடும்ப அட்டைகளுடன் ஆதார் எண்ணை இணைத்தது, நியாய விலைக் கடைகளில் மின்னணு இயந்திரத்தின் வாயிலாக உணவுப் பொருள்களை விநியோகிப்பது ஆகிய நடைமுறைகளின் வாயிலாக இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**11. ரூ.188 கோடியில் புதிய ரோந்துக் கப்பல் 'விக்ரகா' : நாட்டுக்கு அர்ப்பணித்தார் அமைச்சர் ராஜ்நாத் சிங்**

இந்தியக் கடலோரக் காவல் படையின் ரோந்துப் பணிக்காக சுமார் ரூ.188 கோடி செலவில் கட்டமைக்கப்பட்ட 'விக்ரகா' எனப் பெயரிடப்பட்ட அதிநவீன கப்பலை சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நாட்டுக்கு அர்ப்பணித்தார். சென்னையை அடுத்த காட்டுப்பள்ளியில் எல் அன் டி நிறுவனத்தின் கப்பல் கட்டும் தளம் உள்ளது. இங்கு கடற்படை, கடலோரக் காவல் படைக்குத் தேவையான ரோந்துக் கப்பல்கள், அதிநவீன இடைமறிக்கும் படகுகள் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த 2015–ஆம் ஆண்டு 7 ரோந்துக் கப்பல்கள் தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தை எல் அன் டி நிறுவனத்திற்கு பாதுகாப்பு அமைச்சகம் வழங்கியது. இதில் விக்ரம், வீரா, விஜயா, வராக, வரத், வஜ்ரா ஆகிய 6 ரோந்துக் கப்பல்கள் ஏற்கனவே கடலோரக் காவல் படையிடம் ஒப்படைக்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இதனையடுத்து சுமார் ரூ.188 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு 'விக்ரகா' எனப் பெயரிடப்பட்ட புதிய ரோந்துக் கப்பல் கடந்த ஆண்டு அக்.5–இல் கடலோரக் காவல் படையிடம் ஒப்படைக்கப்பட்டு முதல் முறையாக கடல் நீரில் இறக்கி வெள்ளோட்டம் விடப்பட்டது. கடந்த 10 மாதங்களாக இக்கப்பலில் நவீன ஆயுதங்கள், தொலைத் தொடர்புக் கருவிகள் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதன்பிறகு கடலோரக் காவல் படையில் முறைப்படி இணைக்கப்படும் நிகழ்ச்சி சென்னைத் துறைமுகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. கடலோரக் காவல் படை தலைமை இயக்குநர் கே.நடராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் 'விக்ரகா' –வை முறைப்படி நாட்டுக்கு அர்ப்பணித்தார். பின்னர் கப்பலின் பெயர் பலகையை அமைச்சர் திறந்து வைத்தார்.

**கப்பலின் சிறப்பம்சங்கள்:** கடலோரக் காவல் படையில் இணைக்கப்பட்டுள்ள 'விக்ரகா' 2,200 மெட்ரிக் டன் எடையும், 98 மீட்டர் நீளமும், 15 மீட்டர் அகலமும் கொண்ட இக்கப்பல் மணிக்கு அதிகபட்சமாக 26 கடல் மைல் வேகத்தில் செல்லக் கூடியது. மேலும் கரைக்குத் திரும்பாமல் சுமார் 5,000 கடல் மைல் தூரம் பயணிக்கும் வகையில் பல்வேறு நவீன கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதில் ஹெலிகாப்டர் இறங்கும் வசதி உள்ளது. மேலும் மாசுக் கட்டுப்பாட்டுக் கருவிகள், கண்காணிப்புக் கருவிகள் அதிநவீன ரக துப்பாக்கிகள், கடல் வழித்தடத்தை துல்லியமாகக் காட்டும் கருவிகள் உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன. 11 அதிகாரிகள், 110 பணியாளர்கள் உள்ளிட்ட 121 படை வீரர்களுடன் பயணிக்க உள்ள 'விக்ரகா' – வின் உத்தேச ஆயுள் காலம் சுமார் 25 ஆண்டுகள் ஆகும்.

**12. ரயில் பயணிகள் குறைகளை தெரிவிக்க – 'ரயில் மதாத்' புதிய செயலி அறிமுகம் :**

மதுரை ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ரயில் பயணிகளின் புகார்கள் மற்றும் ஆலோசனைகள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க 'ரயில் மதாத்' (MADAD – Mobile Application for Desired Assistance During travel) என்ற செல்போன் செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பயணிகள் தங்களது புகார்களை தொலைபேசி, இணையதளம், சமூக ஊடகம் வாயிலாக பதிவு செய்கின்றனர். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து உடனடி நடவடிக்கைக்காகவே 24 மணி நேரமும் செயல்படும் செயலி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. தமிழ் உட்பட 12 மொழிகள் மூலம் இந்த செயலியை பயன்படுத்தலாம்.

இந்த செயலியை இணையதளம், குறுஞ்செய்தி, சமூக ஊடகம் மற்றும் உதவி எண் 139 மூலம் அணுகலாம். இதன்மூலம் பாதுகாப்பு, மருத்துவ உதவி, விபத்து பற்றிய தகவல்கள், மாற்றுத்திறனாளிகள், பெண்களுக்கான உதவிகள், பொதுப்புகார், லஞ்சப்புகார், பார்சல் சரக்கு போக்குவரத்து பற்றிய விசாரணை, ஐஆர்சிடிசி ரயில்கள் விவரங்கள், ஏற்கெனவே அளித்த புகாரின் நிலையை பற்றியும் அறிந்து கொள்ளலாம். இந்த செயலியை பயன்படுத்த முடியாத காலங்களில் ரயில் பயணச்சீட்டு பரிசோதகர், நிலைய அதிகாரி, பணியில் உள்ள ரயில்வே பாதுகாப்புப் படை மற்றும் ரயில்வே காவலர்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**13. கீழடி அகழாய்வில் தானியக் கொள்கலன் கண்டெடுப்பு**

சிவகங்கை மாவட்டம், கீழடியில் நடைபெற்று வரும் அகழாய்வில் தானியக் கொள்கலன் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தமிழக தொல்லியல் துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். சிவகங்கை மாவட்டம், கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய பகுதிகளில் 7 –ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள் கடந்த பிப்ரவரி மாதம் முதல் நடைபெற்று வருகின்றன. இதில் சுடுமண் முத்திரை, உறை கிணறுகள், காதணிகள், தந்தத்தினாலான பகடை, முதுமக்கள் தாழி, கருப்பு சிவப்பு பானை ஓடுகள், பழங்கால மக்கள் பயன்படுத்திய புழங்குப் பொருள்கள் உள்ளிட்ட ஏராளமான தொல் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, கீழடியில் நடைபெற்று வரும் அகழாய்வில் சிவப்பு நிறத்திலான சுடுமண்ணால் ஆன தானியக் கொள்கலன் அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அகழாய்வுப் பணி மேற்கொள்ளும் தொல்லியலாளர்கள் சனிக்கிழமை கூறியது : கீழடியில் நடைபெற்று வரும் 7 ஆம் கட்ட அகழாய்வில் கடந்த ஆகஸ்ட் 8 ஆம் தேதி பணி மேற்கொள்ளும் போது 348 செமீ ஆழத்தில் பெரிய வாய்ப்பகுதி கொண்ட சுடுமண் பானையின் ஒரு பகுதி கண்டெடுக்கப்பட்டது. தொடர்ந்து, அதே பகுதியில் ஆய்வு மேற்கொண்டதில் 30 செ.மீ விட்டமும், 60 செ.மீ உயரமும், 2 செ.மீ. தடிமனும் கொண்ட முழு பானையாக அண்மையில் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இந்த பானை அழகிய வேலைப்பாடுகளுடன் அமையப் பெற்றுள்ளது. மேலும், இதன் வெளிப்புற மையப்பகுதியில் கயிறு போன்ற வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதனை பழங்கால மக்கள் தானியங்களை சேமித்து வைப்பதற்கு தானியக் கொள்கலனாக பயன்படுத்தி இருக்கலாம் என்றனர்.

**1. 'ஆனந்தா' என்ற திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ள நிறுவனம் எது?**

அ) பாரத வங்கி

ஆ) பணியாளர் வருங்கால வைப்பு நிதியம்

இ) இந்திய அஞ்சல்துறை

**ஈ) இந்திய ஆயுள்காப்பீட்டு கழகம் ☑**

✓ ஆத்மநிர்பார் திட்டத்தின் ஒருபகுதியாக, LIC முகவர்கள் வாடிக்கையாள–ர்களை பல்வேறு காப்பீடுகளில் சேர்க்கும்போது காகிதம் இல்லாமல் மின்னணு முறையிலேயே அவர்களின் விவரங்களைப் பெற்று சமர்ப்பிக்கும் வகையில் 'ஆனந்தா' செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. Atma Nirbhar Agents New–business Digital Application என்பதின் சுருக்கந்தான் 'ANANDA'.

✓ இப்புதிய செயலிமூலம் வாடிக்கையாளர்களின் விவரங்களை ஆதார் எண் அடிப்படையில் உறுதிசெய்யவும், காகிதத்தில் விண்ணப்பப் படிவம் இல்லாமல் மின்னணு முறையிலேயே விண்ணப்பங்களைப் பெறவும் முகவர்களால் முடியும். இதன்மூலம் அவர்களின் பணி விரைவில் முடிவதோடு, அதிக வாடிக்கையாளர்களை பெறவும் முடியும்.

---

**2. சுஜலாம் என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ள அமைச்சகம் எது?**



அ) நலவாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகம்

**ஆ) ஜல் சக்தி அமைச்சகம் ☑**

இ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ விடுதலையின் அம்ரித் மகோத்சவ் கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக 100 நாள் 'சுஜலாம்' பிரச்சாரத்தை ஆக.25 அன்று நடுவண் ஜல் சக்தி அமைச்சகம் தொடங்கியுள்ளது.

✓ கழிவுநீர் மேலாண்மையை கிராம அளவில் மேற்கொண்டு, திறந்த வெளி மலங்கழித்தலற்ற கிராமங்களை அதிகளவில் உருவாக்குவதை இப்பிரச்சாரம் நோக்கமாகக்கொண்டுள்ளது. 10 இலட்சம் குட்டைகளை அமைப்பது உள்பட, கிராமங்களில் கழிவு & கழிவுநீர் மேலாண்மைக்கு தேவையான உட்கட்டமைப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்துவ–தோடு மட்டுமில்லாமல் நீர்நிலைகளின் நீடித்த மேலாண்மையையும் இந்தப் பிரச்சாரம் கருத்தில்கொள்ளும்.

---

**3. EASE 3.0'இன்கீழ், அடிப்படை செயல்திறனில் இருந்து சிறந்த முன்னேற்றத்திற்கான விருதை வென்ற வங்கி எது?**

அ) கனரா வங்கி

ஆ) பஞ்சாப் நேஷனல் வங்கி

**இ) இந்தியன் வங்கி ☑**

ஈ) யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

✓ தொழில்நுட்பம் சார்ந்த, எளிமையான மற்றும் கூட்டு வங்கியியலுக்கான 2021–22ஆம் ஆண்டுக்கான பொதுத்துறை வங்கிகள் சீர்திருத்த செயல்திட்டம் – EASE 4.0 என்னும் நான்காம் பதிப்பை மத்திய நிதி & பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சர் நிர்மலா சீதாராம் வெளியிட்டார்.

✓ 2020–21ஆம் ஆண்டுக்கான பொதுத்துறை வங்கிகள் சீர்திருத்த செயல் திட்டம் – EASE 3.0'இன் வருடாந்திர அறிக்கையையும் வெளியிட்ட அவர், EASE 3.0 வங்கிகள் சீர்திருத்த குறியீட்டில் சிறந்து விளங்கிய வங்கிகளை கௌரவிப்பதற்கான விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியிலும் பங்கேற்றார். பாரத வங்கி, பரோடா வங்கி மற்றும் இந்திய யூனியன் வங்கி ஆகியவை EASE 3.0 வங்கிகள் சீர்திருத்த குறியீட்டில் சிறந்து விளங்கியதற்கான பரிசுகளைப் பெற்றன. இந்தியன் வங்கி, EASE 3.0' இன்கீழ், அடிப்படை செயல்திறனிலிருந்து சிறந்த முன்னேற்றத்திற்கான விருதை வென்றது

---

**4. குஷ்மேன் & வேக்பீல்டின் நடப்பாண்டுக்கான (2021) உலக உற்பத்தி அபாயக்குறியீட்டின்படி, உலகில் அதிகம் விரும்பப்படும் உற்பத்தித் தளங்களில் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ) முதலாவது **ஆ) இரண்டாவது ☑**

இ) மூன்றாவது ஈ) நான்காவது

✓ உலகளவில், 'மிகவும் விரும்பப்படும் உற்பத்தி மையங்கள்' பட்டியலில், இந்தியா, அமெரிக்காவை விஞ்சி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. முதலிடத்தில் சீனா உள்ளது. இதற்கு முக்கியமான காரணம், உற்பத்தி செலவு மிகவும் குறைவாக இருப்பதுதான் என, 'குஷ்மேன் & வேக்பீல்டு' நிறுவனம் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டில், அமெரிக்கா இரண்டாவது இடத்திலும், இந்தியா மூன்றாமிடத்திலும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

---

**5. காசநோயாளிகளில் கடுமையான COVID–19 நிலைமைகளின் தாக்கத்தை ஆய்வு செய்ய, எந்த நிறுவனத்துடன், பயோடெக்னாலஜி துறை ஒத்துழைத்துள்ளது?**

**அ) BRICS ☑**

ஆ) G20

இ) G7

ஈ) BIMSTEC

✓ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரி தொழில்நுட்பத் துறை, BRICS நாடுகளுடன் ஒருங்கிணைந்து, காசநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளிடையே தீவிர COVID–19 தொற்றின் தாக்கம் குறித்து ஆய்வுசெய்வதற்காக SARS–CoV2 NGS–BRICS கூட்டமைப்பை செயல்படுத்தி வருகிறது. சிறந்த நோய் மேலாண்மைக்காக COVID–19 தொற்றால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்படாத நுரையீரல் காசநோய் நோயாளிகளில் இணைநோய் குறித்த தகவலை இந்த ஒருங்கிணைந்த ஆய்வு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**6. ஆப்கானிஸ்தான் தொடர்பான ஆலோசனைகளுக்காக நிரந்தர இருதரப்பு சேனலை உருவாக்குவதற்காக, இந்தியா, எந்நாட்டோடு ஒப்புக்கொண்டுள்ளது?**



**அ) ரஷ்யா ☑**

ஆ) ஈரான்

இ) சீனா

ஈ) அமெரிக்கா

✓ ஆப்கானிஸ்தான் தொடர்பான ஆலோசனைகளுக்கு நிரந்தர இருதரப்பு சேனலை உருவாக்க இந்தியாவும் ரஷ்யாவும் ஒப்புக்கொண்டுள்ளன. 1996–2001'க்கு இடையில், காபூலில் இஸ்லாமியக் குழு கடைசியாக ஆட்சியில் இருந்தபோது இந்தியா, ரஷ்யா மற்றும் ஈரான் ஆகியவை தலிபான் எதிர்ப்பு கூட்டணியின் முக்கிய ஆதரவாளர்களாக இருந்தன.

---

**7. வங்கி மற்றும் நிதி மோசடிகளுக்கான ஆலோசனைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



அ) பத்மஜா சுந்துரு

ஆ) SS மல்லிகார்ஜுன ராவ்

**இ) T M பாசின் ☑**

ஈ) ஹஸ்முக் ஆதியா

✓ மத்திய விஜிலென்ஸ் கமிஷன்மூலம் வங்கி & நிதிமோசடிகளுக்கான ஆலோசனைக்குழுவின் தலைவராக TM பாசின் நியமிக்கப்பட்டுள்ளார். 2 ஆண்டுகாலத்திற்கு அவர் இப்பதவியிலிருப்பார். ₹50 கோடிக்கும் அதிகமான வங்கி மோசடிகளை ஆராய்ந்து அதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்காக இக்குழு உருவாப்பட்டது.

---

**8. பயனர்கள், தடுப்பூசி செலுத்திக்கொள்ள முன்பதிவு செய்வதற்காக, சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்துடன் கூட்டுசேர்ந்துள்ள நிறுவனம் எது?**

**அ) வாட்ஸ்ஆப் ☑**

ஆ) டுவிட்டர்

இ) டெலிகிராம்

ஈ) கூகிள்

✓ சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்துடன் வாட்ஸ்ஆப் கூட்டு சேர்ந்துள்ளது. இதன்மூலம் வாட்ஸ்ஆப்பில், MyGov கொரோனா உதவி எண்ணுக்கு 'Book Slot' என அனுப்புவதன்மூலம் தடுப்பூசி செலுத்திக் கொள்ள முன்பதிவு செய்துகொள்ளவியலும். மேலும் தடுப்பூசி செலுத்திக்

கொண்டாதற்கான சான்றிதழையும் வாட்ஸ்ஆப்பில் இருந்து பதிவிறக்கம் செய்யும் வசதியும் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

---

**9. எந்த மாநிலத்தின் திட்டமிடல் துறையுடன் இணைந்து, இந்தியக் குடியரசுத்துணைத்தலைவர் 'தடுப்பூசி இந்தியா' திட்டத்தைத் தொடங்கினார்?**



அ) உத்தர பிரதேசம்

ஆ) தெலங்கானா

இ) ஆந்திர பிரதேசம்

**ஈ) கர்நாடகா ☑**

✓ இந்தியக்குடியரசுத்துணைத்தலைவர், M வெங்கையா, ஆக.24 அன்று 'தடுப்பூசி இந்தியா' திட்டத்தைத் தொடங்கிவைத்தார். இந்தத் திட்டத்தை பெங்களூரில் 'கிவ்விங் இந்தியா' அறக்கட்டளை & நீடித்த இலக்குகள் ஒருங்கிணைப்பு மையம் ஏற்பாடு செய்தன. இது கர்நாடக மாநில அரசின் திட்டமிடல் துறையுடன் இணைந்து CSIR இன் கீழ் தொடங்கப்பட்டது. இந்தியா தனது COVID-19 தடுப்பூசி திட்டத்தை 2021 ஜனவரி.16 அன்று தொடங்கியது.

---

**10. உலக தண்ணீர் வாரமானது ஆகஸ்ட் மாதத்தில் எத்தேதியில் இருந்து எத்தேதி வரை ஏற்பாடு செய்யப்பட்டது?**

அ) 19-23 ஆகஸ்ட்

**ஆ) 23-27 ஆகஸ்ட் ☑**

இ) 20-26 ஆகஸ்ட்

ஈ) 27-31 ஆகஸ்ட்

✓ உலக நீர் வாரம் என்பது ஸ்டாக்ஹோம் பன்னாட்டு நீர் நிறுவனத்தால் (SIWI) கடந்த 1991ஆம் ஆண்டு முதல் உலகளாவிய நீர் பிரச்சனைகள் மற்றும் பன்னாட்டு வளர்ச்சி தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்படுகிற வருடாந்திர நிகழ்வாகும். உலக நீர் வாரம், 2021 ஆக.23-27 வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் (2021) நிகழ்வு முற்றிலும் மெய்நிகரான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. "Building Resilience Faster" என்பது 2021 உலக நீர் வாரத்திற்கான கருப்பொருளாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. டோக்கியோ பாராலிம்பிக்: ஒரே நாளில் இந்தியாவுக்கு 2 வெள்ளி, 1 வெண்கலம்**

டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் ஒரே நாளில் இந்தியா 2 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கங்களை கைப்பற்றியது. ஒலிம்பிக் போட்டிகளைத் தொடர்ந்து பாராலிம்பிக் போட்டிகள் நடைபெறுவது வழக்கம். அதன்படி டோக்கியோ நகரில் தற்போது பாராலிம்பிக் போட்டிகள் நடந்து வருகின்றன. மொத்தம் 4,400-க்கு மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர். இந்தியா சார்பில் தமிழகத்தின் தங்கவேலு மாரியப்பன் உள்பட 54 பேர் பாராலிம்பிக் போட்டியில் பங்கேற்றுள்ளனர்,.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை மகளிர் டேபிள் டென்னிஸ் கிளாஸ் 4 பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் பவினா பென் படேல் 0-3 என்ற கேம் கணக்கில் உலகின் நம்பர் ஒன் நிலை வீராங்கனை சீனாவின் யிங் ஸூவிடம் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினார். டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் இந்தியா வென்ற முதல் பதக்கமாகவும், டேபிள் டென்னிஸ் விளையாட்டில் இந்தியாவின் முதல் பதக்கமாகவும் இது அமைந்தது.

**உயரம் தாண்டுதல்-நிஷாத் குமார்:**

ஆடவர் உயரம் தாண்டுதல் டி47 பிரிவில் 21 வயதே ஆன இந்திய வீரர் நிஷாத் குமார் 2.06 மீட்டர் குதித்து புதிய ஆசிய சாதனையுடன் வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். ஹிமாசலபிரதேசம் ஆம்ப் நகரைச் சேர்ந்த நிஷாத் குமார் தங்கள் விவசாய நிலத்தில் புற்களை வெட்டும் போது அந்த இயந்திரத்தில் வலது கையை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வட்டு எறிதல்-வினோத் குமார்:**

41 வயதான பிஎஸ்எப் வீரரான வினோத்குமார் வட்டு எறிதல் எஃப் 52 பிரிவில் 19.91 தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றினார். வினோத்குமாரும் புதிய ஆசிய சாதனையை படைத்தார். வெள்ளிப் பதக்கம் வென்ற பவினா படேல், நிஷாத்குமார், வெண்கலம் வென்ற வினோத்குமார் உள்ளிட்டோருக்கு தலைவர்கள் உள்பட பல்வேறு தரப்பினர் பாராட்டுகளை தெரிவித்துள்ளனர்.

---

**2. தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் இணைய வயது வரம்பு அதிகரிப்பு**

தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் (என்பிஎஸ்) இணைவதற்கான உச்ச வயது வரம்பு 65-லிருந்து 70-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தேசிய ஓய்வூதியத் திட்டத்தை ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை-வளர்ச்சி ஆணையம் (பிஎஃப்ஆர்டிஏ) செயல்படுத்தி வருகிறது. அத்திட்டத்தில் இணைவது, திட்டத்தின் பலன்களைப் பெறுவது உள்ளிட்டவை தொடர்பான மாற்றப்பட்ட விதிமுறைகளை பிஎஃப்ஆர்டிஏ வெளியிட்டுள்ளது.

அதன்படி, தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் இணைவதற்கான அதிகபட்ச வயது வரம்பு 65-லிருந்து 70-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. குறைந்தபட்ச வயது வரம்பு 18-ஆகவே நீடிக்கிறது. இந்தியர்கள், வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் ஆகியோர் 75 வயது வரை தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் சேமித்து வைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பிஎஃப்ஆர்டிஏ வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ஓய்வூதியத் திட்டத்தில் இணைவோரின் சேமிப்புத் தொகை எந்த வகையில் முதலீடு செய்யப்பட வேண்டும் என்பதைப் பொருத்து முதலீட்டு சதவீதம் மாறுபடும். 65 வயதைக் கடந்தோர் தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் இணையும்போது, ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட சொத்துகளில் (ஆட்டோ சாய்ஸ்) 15 சதவீதம் வரை மட்டுமே முதலீடுகளை மேற்கொள்ள முடியும்.

சொத்துகள் மீதான முதலீடுகளை ஓய்வூதியதாரர்களே முடிவு செய்தால் (ஆக்டிவ் சாய்ஸ்), அதில் 50 சதவீதம் வரையிலான தொகையை முதலீடு செய்ய முடியும். 65 வயதைக் கடந்தவர்கள் தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்தால், குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்குப் பிறகே திட்டத்தை விட்டு வெளியேற முடியும். திட்டத்தில் இருந்து வெளியேறும் ஓய்வூதியதாரர்கள், குறைந்தபட்சம் 40 சதவீதத் தொகையை எதிர்கால ஓய்வூதியத்துக்காக வைத்துக் கொண்டு மீதத்தொகையை ஒரே தவணையில் பெற்றுக் கொள்ளலாம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**3. முறிந்த எலும்பை விரைவாக இணைக்கும் ஆராய்ச்சி: கும்மிடிப்பூண்டி மாணவர் சாதனை**

கும்மிடிப்பூண்டியைச் சேர்ந்த உயிரியல் தொழில்நுட்ப இறுதியாண்டு மாணவர், முறிந்த எலும்புகளை 15 நாள்களுக்குள் ஒட்ட வைக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, வெற்றி பெற்றுள்ளார். கும்மிடிப்பூண்டியை சேர்ந்த பாஸ்கரன்-லதா தம்பதியின் மகன் வைத்தியநாதன் (21). இவர் தஞ்சை சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் உயிரியல் தொழில்நுட்பப் படிப்பில் இறுதி ஆண்டு படித்து வருகிறார். இவர் உயிரியல் தொழில்நுட்பத் துறையில் மேற்கொண்ட ஆராய்ச்சி குறித்த அறிக்கை, பலரின் கவனத்தை ஈர்த்து வருகிறது. எலும்பு முறிவு சிகிச்சையில், முறிந்த எலும்புகள் ஒன்றுகூட, ஒரு மாதம் முதல் மூன்று மாதங்கள் வரை கால அவகாசம் தேவைப்படும். இதனால் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க, முறிந்த எலும்புகள் விரைந்து கூடுவதற்கான ஆராய்ச்சியை வைத்தியநாதன் தேர்வு செய்தார்.

இவரது ஆராய்ச்சியின் பலனாக, எலும்புகளை விரைந்துகூட வைக்கும் 'கய்டோசன்' என்ற பயோ பாலிமருடன், தொற்று பாதிப்பு ஏற்படாமல் இருக்க சில்வர் நானோ துகள்கள் கலந்து தயாரித்த கலவையை, முறிந்த எலும்புகளுக்கு இடையே நிரப்ப வேண்டும். அப்படி செய்தால், முறிந்த எலும்புகள், 15 நாள்களுக்குள் ஒன்றுகூடும் என ஆராய்ச்சி அறிக்கையை 2020-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், பல்கலைக்கழகத்தில் வைத்தியநாதன் சமர்ப்பித்தார். அவரது ஆராய்ச்சியை, மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறை அங்கீகரித்தது. இதையடுத்து, 2021-ஆம் ஆண்டின் இளம் சாதனையாளர் விருதான இன்ஸ்டிட்யூட் ஆப் ஸ்காலர்ஸ் விருதினை வழங்கியது.

அதைத் தொடர்ந்து பாக்ஸ் க்ளூஸ் மற்றும் ஜி நியூஸ் இணைந்து, 2021-ஆம் ஆண்டின் 'இந்தியா பிரைம் குவாலிட்டி எஜுகேஷன்' விருதினை வைத்தியநாதனுக்கு வழங்கியது. இந்த உயிரியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பால், அவருக்கு விருதுகளும் பாராட்டுகளும் தொடர்ந்து குவிந்து வருகின்றன.

**1.** நடப்பாண்டுக்கான (2021) காசநோய் தடுப்புக் கூட்டுக் குழுவின் தலைவராக பொறுப்பேற்ற நாடு எது?

அ) ஐக்கிய இராச்சியம்

ஆ) ஆஸ்திரேலியா

**இ) இந்தியா ☑**

ஈ) வங்காளதேசம்



✓ மத்திய சுகாதாரம் & குடும்பநல அமைச்சர் மன்சுக் மாண்டவியா, காச நோய் தடுப்புக்கூட்டுக்குழுவின் தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டார். 2024ஆம் ஆண்டு வரை அமைச்சர் இந்தப்பொறுப்பை வகிப்பார்.

✓ ஐநா'இன் காசநோய் இலக்கை 2022ஆம் ஆண்டிற்குள் அடையவும், 2030ஆம் ஆண்டிற்குள் காசநோய்க்கு முற்றுப்புள்ளி வைக்கும் மைல்கல் தருணத்தை அடையவும், காசநோய் தடுப்புக்கூட்டுச்செயலகம், கூட்டாளிகள் மற்றும் காசநோய் சமூகத்தின் முயற்சிகளை அவர் முன்னெடுத்துச் செல்வார்.

---

**2.** "Accelerating India: 7 Years of Modi Government" என்ற நூலின் ஆசிரியர்/தொகுப்பாசிரியர் யார்?

**அ) K J அல்போன்ஸ் ☑**

ஆ) கும்மனம் இராஜசேகரன்

இ) A P அப்துல்லாகுட்டி

ஈ) A N இராதாகிருஷ்ணன்



✓ முன்னாள் மத்திய அமைச்சர் K J அல்போன்ஸ், "இந்தியாவை முன்னேற்றுதல்: நரேந்திர மோடி அரசின் 7 ஆண்டுகள்" என்ற தமது நூலை பிரதமர் மோடியிடம் வழங்கினார்.

✓ இந்திய நிர்வாகத்தின் 25 துறைகள் குறித்த இந்த நூலில், 28 புகழ்மிக்க எழுத்தாளர்களின் 25 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இது மோடி அரசின் சாதனைகளின் ஆவணமாகும்.

---

**3.** பெண்கள் தொழில்முனைவு தளம் என்பது கீழ்காணும் எந்த நிறுவனத்தின் முன்னெடுப்பாகும்?

**அ) NITI ஆயோக் ☑**

ஆ) ஐநா பெண்கள் அமைப்பு

இ) மகளிர் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ) NASSCOM

NITI Aayog

✓ நாடு முழுவதும் உள்ள பெண்கள் தொழில்முனைவோருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் NITI ஆயோக்கும், CISCOஉம் மகளிர் தொழில் முனைவு தளத்தின் அடுத்த கட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன.

✓ WEP Nxt எனப்பெயரிடப்பட்டுள்ள இத்தளம், சிஸ்கோவின் தொழினுட்பம் மற்றும் பணி அனுபவத்தால் நாடு முழுவதுமுள்ள பெண்களால் நடத்தப்பட –டும் வர்த்தகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவிகரமாக இருக்கும். இந்தத் தளம் NITI ஆயோக்மூலம் கடந்த 2018 மார்ச்.8 அன்று முறையாக தொடங்கப்பட்டது.

---

**4.** "Shared Destiny–2021" என்ற பாதுகாப்புப் பயிற்சியை நடத்த திட்டமிட்டுள்ள நாடு எது?

**அ) சீனா ☑**

ஆ) தாய்லாந்து

இ) பாகிஸ்தான்

ஈ) மங்கோலியா



✓ சீனா, பாகிஸ்தான், மங்கோலியா மற்றும் தாய்லாந்தின் ராணுவத்தினர் "Shared Destiny–2021" பாதுகாப்புப் பயிற்சி என்ற பெயரில் பன்னாட்டு அமைதிகாக்கும் பயிற்சியில் பங்கேற்பதாகக் கூறப்படுகிறது. இப்பயிற்சி அடுத்த மாதம் சீனாவின் மத்திய ஹெனான் மாகாணத்தில் மக்கள் விடுதலை ராணுவத்தால் நடத்தப்படவுள்ளது. இந்த நான்கு நாடுகளும் பங்கேற்கும் முதல் பன்னாட்டு அமைதிகாக்கும் நேரடிப்பயிற்சி இது ஆகும். இந்தப் பாதுகாப்பு பயிற்சி சீனாவில் செப்.6–15 வரை நடைபெற உள்ளது.

---

**5.** 'கொடுப்பனவு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித்திட்டம்' என்பது எந்த நிறுவனத்தின் முன்னெடுப்பாகும்?

அ) NPCI

**ஆ) RBI ☑**

இ) NASSCOM

ஈ) DSCI



✓ 'கொடுப்பனவு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித்திட்டம்' என்பது இந்திய ரிசர்வ் வங்கியின் முயற்சியாகும். இது ₹345 கோடி மதிப்பில் தொடங்கப் பட்ட திட்டமாகும். ஆண்டுதோறும் 30 லட்சம் புதிய டச் பாயிண்டுகளை அடுக்கு–3 முதல் அடுக்கு–6 வரையிலான மையங்களில் டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்காக உருவாக்க வேண்டும் என்பது இதன் நோக்கம் ஆகும். 1ஆவது மற்றும் 2ஆவது மையங்களில் PM SV நிதி திட்டத்தின் கீழ் உள்ள வீதியோர விற்பனையாளர்களுக்கு விற்பனை முனையங்களில் (POS) உட்கட்டமைப்பை விரிவுபடுத்தும் திட்டத்தை இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் விரிவுபடுத்தியுள்ளது.

---

**6.** அண்மையில் தென்சீனக்கடலில், எந்த நாட்டுடன் இணைந்து, இந்திய கடற்படை, பயிற்சியொன்றை நடத்தியது?

**அ) பிலிப்பைன்ஸ் ☑**

ஆ) மலேசியா

இ) தாய்லாந்து

ஈ) இந்தோனேசியா



✓ இந்திய கடற்படை மற்றும் பிலிப்பைன்ஸ் கடற்படை இடையே, பிலிப்பைன்ஸ் கடல்பகுதியில், கடல்சார் கூட்டு பயிற்சி நடக்கிறது. இதில் இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் ரன்விஜய், ஐஎன்எஸ் கோரா ஆகிய 2 போர்க்கப்பல்கள் பங்கேற்கின்றன.

✓ மேற்கு பசிபிக் கடல்பகுதியில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இந்த 2 போர்க்கப்பல்களும், பிலிப்பைன்சு கடற்படையின் BRP ஆன்டனியோ லுனா என்ற போர்க்கப்பலுடன், மேற்கு பிலிப்பைன்ஸ் கடல்பகுதியில் கடல்சார் கூட்டு பயிற்சியில் ஈடுபடுகின்றன. இதன்மூலம் பிலிப்பைன்ஸ் கடற்படையுடன் இருதரப்பு உறவுகள் ஒருங்கிணைக்கப்படும்.

---

**7.** மாநிலத்தில் உள்ள நீர்நிலைகள் மற்றும் பூங்காக்களை மீட்டு உருவாக்கம் செய்வதற்காக ₹300 கோடி நிதி ஒதுக்கியுள்ள மாநிலம் எது?

**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா

இ) மத்திய பிரதேசம்

ஈ) கர்நாடகா



✓ தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நீர்நிலைகள் மற்றும் பூங்காக்கள் மீட்கப்பட்டு, ₹300 கோடி மதிப்பீட்டில் அதன் வசதிகள் மேம்படுத்தப்படும். மேலும், ₹100 கோடி செலவில் நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக நகர்ப்புற ஊதிய வேலைவாய்ப்பு திட்டத்தை அரசு செயல்படுத்தும்.

✓ இந்தத் திட்டமானது நகர்ப்புற ஏழைகளை பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், மழைநீர் வடிகால்கள், சாலைகள், கட்டடங்கள் மற்றும் நீர்நிலைகளுக்கு புத்துயிர் அளித்தல்போன்ற பொதுச்சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் பராமரிப்பதில் ஈடுபடவைப்பதன்மூலம் வேலை வாய்ப்பை வழங்குகிறது. நகர்ப்புற நிர்வாக அமைச்சர் KN நேரு, "நமக்கு நாமே" திட்டத்திற்கு, ₹300 கோடி ஒதுக்கீடு செய்வதாக அறிவித்துள்ளார். இத்திட்டத்தின்கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட அனைத்து மாநகராட்சிகளிலும் நீர்நிலைகள் மீட்கப்பட்டு அங்கு புதிய பூங்காக்கள் அமைக்கப்படும்.

---

**8.** 2021 – பாதுகாப்பான நகரங்கள் குறியீட்டின்படி, அறுபது உலக நகரங்களுள், உலகின் பாதுகாப்பான நகரமாக தேர்வு செய்யப்பட்ட நகரம் எது?

அ) டோக்கியோ ஆ) சிட்னி

இ) ஹாங்காங் **ஈ) கோபன்ஹேகன் ☑**



✓ டென்மார்க் நாட்டின் தலைநகரமான கோபன்ஹேகன், அறுபது உலக நகரங்களுள் உலகின் பாதுகாப்பான நகரமாக பெயரிடப்பட்டுள்ளது. கோபன்ஹேகன், நூற்றுக்கு 82.4 மதிப்பெண்களைப்பெற்றது. இந்த நகரம், நகர்ப்புற பாதுகாப்பை அளவிடும் EIU குறியீட்டின் நான்காவது பதிப்பில் முன்னிலை வகிக்கிறது. யங்கோன் 39.5 மதிப்பெண்ணுடன் குறியீட்டின் கடைநிலையில் உள்ளது. புது தில்லி 56.1 மதிப்பெண்ணுடன் 48ஆவது இடத்திலும், மும்பை 54.4 மதிப்பெண்ணுடன் ஐம்பதாவது இடத்திலும் உள்ளது. இந்தக்குறியீடு முதன்முதலில் 2015ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 2021ஆம் ஆண்டில், நகரங்கள் டிஜிட்டல், சுகாதாரம், உட்கட்டமைப்பு, தனிப்பட்ட மற்றும் சுற்றுசூழல் உள்ளிட்ட 76 பாதுகாப்பு அம்சங்களின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டன.

---

**9. "கார்பன் வெளியேற்றமற்ற போக்குவரத்துக்கான அமைப்பினை" கீழ்காணும் எந்த நிறுவனத்துடன் இணைந்து NITI ஆயோக் அறிமுகப்படுத்தியுள்ளது?**

அ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியம்

ஆ) உலக பொருளாதார மன்றம்

**இ) உலக வளங்கள் நிறுவனம் ☑**

ஈ) பன்னாட்டு வளர்ச்சி மையம்

WORLD RESOURCES INSTITUTE

✓ இந்தியாவில் கார்பன் வெளியேற்றம் இல்லாத போக்குவரத்துக்கான அமைப்பை நிதிஆயோக் மற்றும் உலக வளங்கள் இந்திய மையம் (WRI) ஆகியவை கூட்டாக இணைந்து தொடங்கியுள்ளன. ஆசியாவுக்கான NDC–போக்குவரத்து முயற்சித் திட்டத்தின் (NDC–TIA) ஒருபகுதியாக இந்த அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது.

✓ ஆசியாவின் போக்குவரத்துத் துறையில் கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. NDC–TIA என்பது கார்பன் வெளியேற்றமில்லா போக்குவரத்துக்கான ஒருங்கிணைந்த விரிவான அணுகுமுறையை ஊக்குவிக்கும் கூட்டுத் திட்டமாகும். இதில் சீனா, இந்தியா மற்றும் வியட்நாம் உள்ளிட்ட ஏழு நிறுவனங்கள் உள்ளன.

---

**10. நக்சலியத்தை எதிர்த்து சுக்மா மாவட்டத்தில் உருவாக்கப்பட்டு உள்ள 32 பெண் ஊழியர்களைக்கொண்ட படைக்கு பெயர் என்ன?**

**அ) துர்கா ஃபைட்டர் ☑**

ஆ) பத்ரா ஃபைட்டர்

இ) நாரி ஃபைட்டர்

ஈ) தேவி ஃபைட்டர்




✓ நக்சல்களால் பாதிப்படைந்த சுக்மா மாவட்டத்தில் நக்சலிசத்தை எதிர்த்து 32 பெண் ஊழியர்கள் அடங்கிய 'துர்கா ஃபைட்டர்' என்ற பெயரிலான படை அமைக்கப்பட்டுள்ளது.

✓ இந்தப்படை உருவாக்கப்பட்டதன் பின்னணியில் பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பத எண்ணம் உள்ளது. இந்தப் படைப்பிரிவில் உள்ளோர்க்கு ஒரு மாதகாலத்திற்கு கமாண்டோ பணிக்கான பயிற்சி அளிக்கப்படும். ஆஷா சென், இந்த 'துர்கா ஃபைட்டரின்' தலைவராக இருப்பார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பாராலிம்பிக்கில் இந்தியா பதக்க மழை: ஒரே நாளில் 2 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம்**

டோக்கியோ பாராலிம்பிக்கில் இந்தியாவுக்கு ஒரே நாளில் 2 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் என 5 பதக்கங்கள் கிடைத்தன. இதையடுத்து இந்த பாராலிம்பிக்கில் இந்தியாவுக்கு இதுவரை கிடைத்த பதக்கங்களின் எண்ணிக்கை 7ஆக அதிகரித்துள்ளது. 2016 ரியோ பாராலிம்பிக்கில் 4 பதக்கங்கள் கிடைத்ததே அதிகபட்சமாக இருந்த நிலையில், தற்போது இந்த பாராலிம்பிக்கில் இந்திய போட்டியாளர்கள் புதிய உச்சத்தை எட்டியுள்ளனர். இப்பதக்க எண்ணிக்கை இன்னும் உயர வாய்ப்புள்ளது.

**துப்பாக்கி சுடுதல்:** மகளிருக்கான துப்பாக்கி சுடுதலில் (ஆர்–2) 10 மீட்டர் ஏர் ரைபிள் ஸ்டான்டிங் எஸ்ஹெச்1–இல் அவனி லெகாரா (19) தங்கம் வென்றார். பாராலிம்பிக்கில் இந்தியாவுக்காக தங்கம் வென்ற முதல் வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். பாராலிம்பிக்கில் இந்தியாவுக்காக தங்கம் வென்ற 4ஆவது போட்டியாளார் அவனியாவார். அவர் வென்றதே பாராலிம்பிக் துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு கிடைத்த முதல் பதக்கமாகும். அவருக்கு இது முதல் பாராலிம்பிக் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

**ஈட்டி எறிதல்:** ஆடவர் ஈட்டி எறிதலில் 'எப்64' பிரிவில் சுமித் அன்டில் (23) உலக சாதனையை 3 முறை முறியடித்து தங்கம் வென்றார். மற்றொரு பிரிவான 'எப்46'இல் தேவேந்திர ஜஜ்ஜரியா (40) வெள்ளியும், சுந்தர் சிங் குர்ஜர் (25) வெண்கலமும் வென்றனர். சுமித் அன்டில் தனது முதல் பாராலிம்பிக்கிலேயே தங்கம் வென்றுள்ளார். ஏற்கெனவே 2 முறை தங்கம் வென்ற ஜஜ்ஜரியாவுக்கு இந்த வெள்ளி இது 3ஆவது பதக்கம்.

ரியோ பாராலிம்பிக்கிலேயே களம்கண்ட சுந்தர் சிங், போட்டிக்காக ரிப்போர்டிங் செய்வதில் தாமதமானதால் அப்போது தகுதிநீக்கம் செய்யப்பட்டார். தற்போது வெண்கலம் வென்று அதை ஈடு செய்துள்ளார். இத்துடன் பாராலிம்பிக் ஈட்டி எறிதலில் இந்தியாவுக்கு 3 தங்கம் உள்பட 7 பதக்கங்கள் கிடைத்துள்ளன.

**வட்டு எறிதல்:** ஆடவர் வட்டு எறிதலில் 'எப்56' பிரிவில் யோகேஷ் கதுனியா (24) வெள்ளி வென்றார். பாராலிம்பிக்கிற்காக பயிற்சியாளரே இல்லாத நிலையில் ஓராண்டாகத் தயாராகி சளைக்காமல் பதக்கம் வென்றுள்ளார் யோகேஷ். 2019 உலக பாரா தடகள சாம்பியன்ஷிப்பில் வெண்கலம் வென்றதன்மூலம் டோக்கியோ பாராலிம்பிக்கிற்கு தகுதி பெற்றிருந்தார்.

---

**2. வங்க எழுத்தாளர் புத்ததேவ் குஹா காலமானார்**

புகழ்பெற்ற வங்கமொழி எழுத்தாளரான புத்ததேவ் குஹா (85) சமீபத்தில் காலமானார். 'மதுகரி', 'ஜங்கல்மஹால்', 'சோரோய்பேடி' உள்ளிட்ட பல சிறந்த வங்கமொழி நூல்களின் ஆசிரியராவார் அவர். இயற்கை மீது அதிக ஈடுபாடு கொண்டிருந்த புத்ததேவ் குஹா தனது படைப்புகளுக்காக ஆனந்த புரஸ்கார், சிரோமண் புரஸ்கார் உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

---

**3. குத்துச்சண்டை: இந்தியாவுக்கு 3 தங்கம் உள்பட 9 பதக்கம்**

துபையில் நடைபெற்ற ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பில் இந்தியா 3 தங்கம், 6 வெள்ளி என 9 பதக்கங்கள் வென்றது.

ஆடவருக்கான இறுதிச்சுற்றில் 51 கிலோ பிரிவில் விஷ்வாமித்ர சோங்தம் 4–1 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானின் குஸிபோயேவ் அஹ்மத்ஜோனை வென்றார். 80 கிலோ பிரிவில் விஷால் 5–0 என்ற கணக்கில் கிர்கிஸ்தானின் அக்மதோவ் சன்ஸாரை வீழ்த்தினார். மகளிருக்கான 54 கிலோ பிரிவில் நேஹா 3–2 என்ற கணக்கில் கஜகஸ்தானின் ஐஷாகுல் யலுபயேவாவை தோற்கடித்தார். எனினும், ஆடவர் பிரிவில் விஷ்வநாத் சுரேஷ் (48 கிலோ), வன்ஷாஜ் (63.5 கிலோ), ஜெய்தீப் ராவத் (71 கிலோ) ஆகியோரும், மகளிர் பிரிவில் நிவேதிதா (48 கிலோ), தமன்னா (50 கிலோ), சிம்ரன் (52 கிலோ) ஆகியோரும் இறுதிச்சுற்றில் தோல்விகண்டு வெள்ளி பெற்றனர்.

---